# நெஞ்சைத் தொட்டுச் சொல்



1

மணிமேகலை பாசிப் பச்சையில் ஒரு பட்டுச் சேலை கட்டியிருந்தாள். ஒரு கையகலத்திற்கு சரிகை. அதே கரும்பச்சை நிறத்தில் ரவிக்கை. ரவிக்கை மார்பின் தாராளமாக வெட்டப்பட்டிருந்தது. அவளது சந்தன நிற தோளையும், மார்பின் துவக்கத்தையும் வெட்டப்பட்ட ரவிக்கை, வெட்கமின்றிக் காட்ட, மணிமேகலை சேலையின் தலைப்பை மெதுவாகப் போர்த்திக் கொண்டாள். சென்ட் பாட்டிலை எடுத்து, மூடியைத் திறந்து தாராளமாகப் பீய்ச்சிக் கொண்டாள்.

கண்ணாடியில் தெரிந்த தன் முகத்தைப் பார்த்தாள். குறை எதுவும் இருக்கிற மாதிரி தோன்றவில்லை. கண்களின் மை இருக்க வேண்டும் இல்லையா, இருந்தது. நெற்றியின் வட்ட பொட்டுதானே? ஆமாம். கேசம் அலை அலையாய் நெளிய வேண்டும்? நெளிகிறதா? நெளிகிறது.

திருப்தி அடைந்தாள். தனது அறையை விட்டு வெளிப் பட்டாள். அறைக்கு வெளியே நின்றிருந்த மானேஜர் சேது அவளைப் பார்த்ததும் காலை வணக்கம் சொன்னார்.



''என்ன சேது.. கார் தயாரா?''

''இருக்கும்மா.''

''பெட்ரோல்?''

''இராத்திரியே போட்டு வைச்சிட்டேம்மா.''

''சரி, போகலாமா?''

''போகலாம்மா.''

மாடிப்படிகளில் கீழே இறங்கிய போது ஒரு ராணி மாதிரிதான் தெரிந்தாள். மாடிப்படி இறக்கத்தில், சுவரில் ஒரு கண்ணாடிச் சுவர் கொண்ட அறை மாடிப்படிகளுடனேயே இறங்கி வந்தது. அந்த ஷெல்ப்பில் செல்வி. மணிமேகலை நடித்த வெற்றிப் படங்களுக்கு - அவள் வாங்கியிருந்த கேடயங்கள், பதக்கங்கள், தங்க முலாம் மயில்கள் ஆகியவை அலங்காரமாக நிறுத்தப்பட்டிருந்தன. கண்ணாடி ஷெல்ப்பில் அந்த பரிசுப் பொருட்களின் மீது வெளிச்சம் விழும்படியாக பொருத்தப்பட்டிருந்த, வெள்ள விளக்குகளின் சக்திவாய்ந்த ஒளிக்கதிர்களில், மெருகேற்றப் பட்ட கேடயங்கள் பளபள என்று காட்சியளித்தன.

மணிமேகலை அவற்றை அலட்சியம் செய்து கூடத்திற்கு வந்தாள். கூடம் நீள அகலத்தில் சத்துணவுக் கூடத்தை நினைவுபடுத்தியது. தரையில் இதாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த பளிங்குச் சதுரங்கள். கூடத்தின் ஒரு மூலையில் கரும்பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டு அதன் மேல் சோபாக்கள் - அவளைப் பார்க்க வந்திருப்பவர்கள் காத்திருக்க. சோபாக்களின் நடுவே ஒரு கண்ணாடித்தகடு பொருத்தப்பட்ட டீப்பாய். அதன் மீது திரையுலகப் பத்திரிகைகள்.

கூடத்தின் வேறொரு மூலையில் இருந்த தொலைபேசி பிடிவாதமாக ஒலித்துக் கொண்டிருக்க, சேது தொலைபேசியை அணுகினான்.

''ஆமா. சேதுதான் பேசறேன்.''

''.....''

''இல்ல, சூட்டிங்குக்குப் புறப்பட்டுட்டாங்க.''

''......''

''தெரியும். மகாபலிபுரம் கடற்களை பக்கம்தானே? இடம் நல்லாவே தெரியும். இதோ இன்னும் ஒன்றரை மணி நேரத்தில் நாங்க அங்க இருப்போம். மேக்கப் எல்லாம் முடிஞ்சிரிச்சி.''

''......''

''நேற்றைய காட்சியின் தொடர்ச்சிதானே! எல்லாம் அம்மா பாத்துக்குவாங்க. நேத்தே இன்னிக்கு என்ன காட்சின்னு மேடம்கிட்ட சொல்லியாச்சில்ல'' என்று பதில் அளித்துவிட்டு ரிசீவரை அதனிடத்தில் பொருத்த, தொலை பேசி அதற்காகவே காத்திருந்த மாதிரி மறுபடி ஒலிக்கத் தொடங்கியது.

''மணி, போனைப் பாத்துக்க'' என்று சொல்லிவிட்டு, டீப்பாயில் இருந்த தட்டிலிருந்த, சிப்சைக் கொஞ்சம் கையில் எடுத்து வாயில் போட்டுக்கொண்ட சேதுவிற்கு, முப்பத்தைந்து வயது சொல்லலாம். நெற்றி அகலம். அதனால் லேசான முன்வழுக்கை போல் தோன்றினாலும், அபார புத்திசாலி. அவன் கண்கள் எதிரே இருப்பவரை உற்றுப் பார்க்கும் போதே, எதிரில் இருப்பவரின் மனதில் என்ன எண்ணங்கள் ஓடுகிறது என்பதை யூகிக்கும் சக்தி வாய்ந்தவை. நல்ல நேரான, நேர்மையான மூக்கு. சினிமா உலகத்தில் இருந்தும் இதுவரை சிகரெட் பிடிக்கப் பழகாத உதடுகள், பெங்களூரின் லால் - பாக் தோட்டத்து ரோஜாக் களின் நிறத்தை ஒத்து இருந்தன. தூய வெள்ளை நிற முழுக்கைச் சட்டை. கருநீல பான்ட். முகத்தில் பவுடர்



இல்லை. இருந்தாலும் உடலில் சீற விட்டுக் கொண்டிருந்த சென்ட்டின் காரணமாக அவனிடம் இருந்து ஒரு விரும்பத் தக்க மணம் பரவிக் கொண்டிருந்தது.

அவனைப் பார்த்ததும் சோபாவில் இருந்து எழுந்து வணக்கம் தெரிவித்த ஒரு நடுத்தர வயது ஆசாமிக்கு வணக்கம் தெரிவித்தான், சேது.

''வாங்க மோதி. எங்க இந்தப் பக்கம்? இவ்வளவு காலையிலேயே?''

''கால்ஷீட் விவகாரம்தான்.''

சேது சட்டைப் பையிலிருந்து ஒரு குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். தனக்குள் பேசிக்கொள்பவன் போல, ''நேரு பிலிம்ஸ்'' என்று முணுமுணுத்தபடி, பக்கங்களைப் புரட்டினான்.

''இருக்கே'' என்று சேது சொன்னதும், மோதியின் முகம் மலர்ந்தது.

''அப்ப சூட்டிங் ஏற்பாடுகளை எல்லாம் பண்ணிடவா?''

''இருங்க, இருங்க. நீங்கபாட்டுக்குக் கால்ஷீட் வாங்கி வைச்சிட்டீங்க. கதை என்னான்னே சொல்லவில்லை. இப்ப என்னடான்னா, சூட்டிங்கல இறங்கறேன்னு சொல்றீங்க.''

''கதை, என்னங்க கதை. நம்ம ரூம் வாசலிலேயே ஒரு பதினைஞ்சி இருபது எழுத்தாளனுங்க உருண்டுகிட்டு இருக்கானுங்க. கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதை என்று சொன்னாப் போதும். எங்கேர்ந்தாவது ஒரு அவுட் லைனைப் புடிச்சி சொல்லிடுவாங்க.''

''இல்ல மோதி. கதையைச் சொன்னாத்தான் மேடம் ஒத்துப்பாங்க.''

''என்ன சேது! விவரம் புரியாத புள்ளையா இருக்கியே. இந்த காலத்தில் கதை யாருக்கு வேணும்? போட்டோக்

காரனை கொஞ்சம் மேகம் மலைன்னு எடுக்கச் சொல் லிட்டு, அசத்துற மாதிரி கதாநாயகிக்கு டிரஸ் செய்துவிட்டு ஒரு பாடல் காட்சி எடுத்தால் போதாதா?''

''அசத்துற மாதிரி டிரஸ்னா, புளூ பிலிம் எடுக்கப் போறீங்கன்னு அர்த்தம்.''

''நம்ம காலையே வார்ரியே. மணிமேகலை கொஞ்சம் கிளாமர் நடிகைன்னு சினிமா உலகில் அத்தனை பேருக்கும் தெரியுமில்லே...''

''சரி, எப்படியாவது கதை பார்த்துட்டு வந்துருங்க. இன்னிக்கு என்ன தேதி? ஏழு'' சேது விரல் விட்டு ''எட்டு ஒன்பது'' என்று எண்ணி ''சரியா பதினைஞ்சாம் தேதி வந்துடுங்க. இரவு நம்ப ரூம்ல வைச்சிக்கலாம்.''

''விடமாட்டே நீ'' என்று மோதி கதர்ச் சட்டையை உதறி விட்டுக்கொண்டார். வேட்டியை நீவிக்கொண்டு புறப்பட்டார்.

வெளியே இருந்து காரின் ஹார்ன் ஒலித்தது. அவசர அழைப்பு. சேது விரைந்தான்.

செல்வி. மணிமேகலையைப் பற்றி இதற்குள் உங் களுக்கு ஓரளவு புரிந்திருக்கும். பதினைந்து வயதில் கம்பம் கிராமத்தில் இருந்து, காதலன் தன்னைக் காப்பாற்றப் போகிறான் என்ற நம்பிக்கைகளுடன் ரெயிலேறிய மணிமேகலை சென்னை வந்துதான் தெரிந்துகொண்டாள். அவளைக் காதலித்தவன் அப்படி ஒன்றும் உத்தமன் இல்லை யென்று, அதற்குப்பிறகு மறுபடி கம்பத்திற்குச் செல்ல பயமாய் இருந்தது. அப்பா, அம்மா இரண்டு பேருமே அவளை வீட்டுக்குள் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். அப்படியே சேர்த்துக் கொண்டாலும் பழைய வறுமை என் னவோ மாறப் போவதில்லை. சென்னையிலேயே நிரந்தர மாக இருப்பது என்று முடிவு செய்துகொண்டாள். மனதில்



ஒரு உறுதி எடுத்துக்கொண்டாள். நம்பி வந்த காதலன் அவளை நயவஞ்சகமாகப் புகுத்த நினைத்த தொழிலில் நுழையாமல், தன் சொந்தக் காலிலேயே முன்னுக்கு வருவது என்று முடிவு செய்தாள். பெண்கள் ஒரு உறுதி எடுத்துக் கொண்டு விட்டால் அதை மாற்ற கடவுளே வந்தாலும் முடியாது என்பதற்கு எடுத்துக்காட்டாக மணிமேகலை மாறினாள்.

உன் கண்கள் வேல் மாதிரி மணி....

உன் புருவம் மன்மதன் வில்லு மாதிரி மணி.

உன் மூக்கு கோயில் சிற்ப மூக்கு மாதிரி மணி.

உன் பல்லு பச்சரிசி மணி.

வார்த்தைக்கு வார்த்தை, வார்த்தைக்கு வார்த்தை அவன் அவளை வர்ணித்த வாக்கியங்களை நினைவு படுத்திக் கொண்டாள். அவ்வளவு அழகை உடலில் சுமந்துகொண்டு நான் எதற்குக் கவலைப்பட வேண்டும்?

கோடம்பாக்கத்தில், சிறு நடிகைகளுக்கு என்று செயல் படும் சங்கத்தின் உறுப்பினராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டாள். சின்னச் சின்ன வேடங்களில் தலையைக் காட்டினாள். குருவி சேர்க்கும் நெல் மணிகளாகக் கொஞ் சம் கொஞ்சமாக பணம் சேர, மணிமேகலை நாட்டியம் கற்றுக்கொண்டாள். ஒரு தமிழாசிரியையை அமர்த்திக் கொண்டு தமிழைக் கற்றாள். அப்பறம் ஆங்கிலம் கற்றாள். நான்கு பேரிடம் பழகுவது எப்படி என்று கற்றுக் கொண்டாள்.

தன்னுடைய இருபதாவது வயதில் மணிமேகலை தான் கற்ற அத்தனை வித்தைகளையும் பயன்படுத்தி, முதன் முறையாக, ''தெய்வக்கன்னி'' படத்தில் கதாநாயகியாக நுழைந்தாள். படம் இருநூறு நாட்களைத் தொட்டது.

மணிமேகலை, தெய்வக்கன்னி மணிமேகலை ஆகி விட்டாள்.

மானேஜர் சேது வந்து சேர்ந்தான். மேக்கப்பிற்கு ஒரு சுலோசனா. வீடு, சின்ன கார். பெரிய கார். எடுபிடியாக பொம்மி.

இன்றைக்கு மணிமேகலைக்கு இருபத்திமூன்று வருடங்கள். மூன்று வருடங்களில் இருபது படங்கள். இரண்டே படங்கள் ஐம்பது நாட்கள். மற்றவை அத்தனையுமே 100, 200 என்று ஓடியதில் ராசியான நடிகை என்ற பெயர். மணிமேகலை நினைத்ததைச் சாதித்துவிட்டாள். வறுமை எங்கே ஓடி ஒளிந்து கொண்டது என்றே தெரியவில்லை. மணிமேகலையின் இன்றைய ஒரே குறை தன்னை, தன் சிறப்பைப் பார்க்க, அம்மா, அப்பா இல்லையே என்பது தான்.

மணிமேகலை தெய்வக்கன்னியில் நுழைவதற்கு முன்னாலேயே அவர்கள் இருவரையும் எமன் அழைத்துக்கொண்டு விட்டான். செய்தி கேட்டு ஊருக்குப் போய், தன் வீட்டுப் படிகளைக்கூட மிதிக்க முடியாமல் உறவினர்களால் அவமானப்பட்டுத் திரும்பியது இந்தக் கதைக்குத் தேவையற்ற செய்தி. அவளைத் துரத்திய அதே உறவினர்கள், செல்வி மணிமேகலை, தெய்வக்கன்னி மணிமேகலையாக மறுபிறவி எடுத்தவுடன் தன் வீட்டில் வந்து அடைக்கலம் புகுந்ததும், யார் உறவினர்கள், யார் உறவினர்கள் இல்லை என்ற விவரம் கூட தெரியாமல் வந்தவர்கள் அத்தனை பேருக்கும் அனாதை இல்லத்தில் ஆதரவு கொடுக்கிற மாதிரி கொடுத்துக் கொண்டிருப்பது இன்றைய நிலை.

மணிமேகலை அமர்ந்திருந்த மாருதி அவளுடைய வீட்டுக் காம்பவுண்டில் இருந்து வெளிப்பட்டது. கேட்டுக்கு வெளியே காத்திருந்த ரசிகர்கள் அவள் காரை நோக்கிப் பாய்ந்தார்கள்.



டிரைவர் வண்டியை நிறுத்தினான். மணிமேகலை, காரின் பின்பக்க சன்னலின் கறுப்புக் கண்ணாடியைக் கீழே இறக்கினாள்.

''ச்சே... என்னா முகம். என்னா முகம்... அப்படியே பெங்களூர்த் தக்காளி மாதிரி... கடிச்சித் தின்னுடலாம் போல இருக்கும்மா. கோவிச்சுக்காதீங்கம்மா. உங்க பேரில் இருக்கிற ஆசையில் அப்படிச் சொன்னேன்.''

''பரவாயில்லை.''

''இதில் ஒரு கையெழுத்துப் போட்டுக் கொடுங்கம்மா.''

''அம்மா... என் மகன்மா, இவன். இரண்டு நாளா கண்ணு முழிக்கலை. காய்ச்சல். மருந்து வாங்கிக் கொடுத்தா குடிக்க மாட்டேங்கறான். உங்களைப் பார்க்கணுமின்னு இராத்திரியெல்லாம் பெனாத்தறான். அதனாலதான் காலையில கைவேலையெல்லாம் விட்டுட்டு இங்க தூக்கியாந்தோம்மா. கண்ணு... சீனிச்சாமி, பார்ரா... கண்ணைத் திறந்து பார்ரா... மணிமேகலைடா... தெய்வக்கன்னிடா...''

மணிமேகலை கொஞ்சம் கூட தயக்கமின்றி கண் மூடியிருந்த அந்த பத்து வயதுப் பையனின் தலையில் இருந்து கால்வரை வருடிக் கொடுக்க, அவன் கண் திறந்து பார்த்து சொர்க்கமே கைக்கு வந்த மாதிரி சந்தோசப்பட்டான். மணிமேகலையின் உள்ளங்கையில் உதடு பதித்து முத்தமிட்டான்.

''செல்வி மணிமேகலை...'' என்று கூடியிருந்த கூட்டத்தில் இருந்து ஒருவன் ஆவேசமாகக் குரல் எழுப்ப, ''வாழ்க...'' என்றது கூட்டம்.

''சூட்டிங்குக்கு நேரமாச்சி, வரட்டுமா?''

''தெய்வக்கன்னி மணிமேகலை...''

''வாழ்க...''

''தெய்வக்கன்னி மணிமேகலை...''

''வாழ்க...''

மாருதி மெல்லப் புறப்பட்டது. கூடியிருந்த கூட்டம் அரை மனதாக வழிவிட்டது.

மாருதி யார் மேலும் இடித்துவிடாமல், இரையைப் பற்றிக்கொண்ட எறும்பு ஒன்று தனித்து விலகுவது போல, அந்தக் கூட்டத்திலிருந்து விலகி வந்து, வேகம் பிடித்தது.



2

மாருதி மகாபலிபுரத்தை அடுத்து இருந்த கடற்கரைப் பிரதேசத்தை அடைந்தபோது மணி ஏழரை. சூரியன் சுத்தமாக மேல் எழுந்து வந்திருந்தான். இவ்வளவு காலையில் அந்த இடத்தில், சூட்டிங் நடக்கப் போகிறது என்று தெரியாததால் பொது மக்கள் யாரும் அந்தப் பக்கம் வரவில்லை. திரைப்படத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் கூடியிருந்தார்கள்.

வெளிப்புறப் படப்பிடிப்புக்கானப் பொருட்களைச் சுமந்து வரும் லாரிகள் இரண்டும், நான்கு கார்களும் கடற்கரையை ஒட்டியிருந்த தார்ச் சாலையில் நிறுத்தப்பட்டிருந்தன. கார்களை ஒட்டி இரண்டு குதிரைகள் கால் மாற்றி, கால் மாற்றி சலித்துப்போன பாவனையுடன் நின்றிருந்தன. காருக்குப் பக்கத்தில் நின்றிருந்தவர்கள். மாருதி வந்து சேர்ந்தவுடன், அதன் கதவைத் திறந்து விட்டனர். குதிரைகள் இரண்டும் வேறொரு இடத்தை நோக்கி நகர்ந்தன.

மணிமேகலை இறங்கினாள்.

''வாங்கம்மா.''



''வாங்க மேடம்.''

''நேரமாய்டிச்சா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா...! இன்னிக்கு முழுக்க இதே லொகேஷன்தான். பாட்டு ஒன்றை முடிக்கப் போகிறோம்.''

''பாட்டா? நான், காட்சிக்கு இல்ல மேக்கப் போட்டுட்டு வந்திருக்கேன்.''

''பரவாயில்லீங்கம்மா. முதல்ல காட்சியை முடிச்சிட றோம். அப்புறம் பாட்டு...''

டைரக்டர் கேசவகீர்த்தி புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை கீழே போட்டு மிதித்துப் பாழாக்கிவிட்டு அவளை அடைந்தார்.

''வா மணி..'' என்றவர் சற்றுத் தள்ளி நின்று அவளை அன்றுதான் பார்ப்பவர் போல தலையிலிருந்து கால் வரை பார்த்தார்.

''என்ன அப்படிப் பாக்கறீங்க?''

''உன் கண்ணு, மூக்கு, உதடு.. கழுத்து, கொஞ்சம் கீழ இறங்கினா மார்பகம்... ஆண்டவன் உனக்கு எங்கேயும் குறை வைக்கலை. தெய்வக்கன்னி.... நல்ல பட்டப் பேருதான்.''

மணிமேகலை முகம் சிவந்தாள். ''போங்க கேசவ்... நீங்க கேலி பண்றீங்க.''

''சத்தியமா மணி... என் பொண்டாட்டி மேல சத்தியமாச் சொல்றேன்... நீ ரொம்ப அழகாக இருக்கிறாய்?'' என்றவர், சுற்றிலும் பார்த்தார். ''என்னப்பா எல்லாரும் இப்படியே நின்னுட்டா எப்படி... ஏற்பாடு பண்ணுங்க... கதாநாயகியோட தோழி எங்கே? வந்துட்டாங்களா அந்த அம்மா... இன்னும் அரை மணி நேரத்துக்குள்ள காமிராவை ஓடவிட்டுர்லாமா... வசதி எப்படி?''

''இதோ சார்'' என்று அவர்கள் ஆளுக்கொரு பக்கமாகச் சிதறினார்கள்.

''பாரு மணி. நீ யாரு அஞ்சனா, உன் தோழி பேரு மாலினி. நீயும் உன் தோழி மாலினியும்தான் இன்னிக்கு சூட்டிங்குல. இரண்டே பேர். வேற யாரும் கிடையாது. முதல்ல இந்த உடையில் ஒரே ஒரு 'ஷாட்' எடுக்கப் போறோம். படத்துல கதாநாயகன் பேர் சுந்தர். நீ மாலினியை சுந்தர்னு நினைச்சி, ''சுந்தர் ஐ லவ் யூ''ன்னு சொல்ற. அப்புறம் நீயும், மாலினியும் பாட்டுக்காக ஆக்ட் பண்ணப் போறீங்க. ஒரு குதிரையில நீ. இன்னொரு குதிரையில மாலினி. லாங்லேர்ந்து குளோசப் வரைக்கும் விளையாடிடலாம்.''

''நான் ரெடி கேசவ்.''

கிளாப் தட்டப்பட்டு, காட்சி எண் அறிவிக்கப்பட்டது. மணிமேகலை மணலில் மல்லாந்து படுத்திருந்தாள். காலை நேரக்காற்று அவள் சேலையின் மீது அலையைப் பிறக்க வைத்தது. சேலை நெளிந்தது. அவளுக்குச் சற்றுத் தள்ளி மாலினி. மணிமேகலை மெல்லப் புரண்டாள். கைக் கெட்டும் தூரத்தில் இருந்த மாலினியைப் பார்த்தாள். கையை நீட்டி அவளுடைய கன்னத்தை வருடினாள். மெல்ல ஊர்ந்து நகர்ந்து மாலினியை தன் இரண்டு கைகளாலும் பற்றினாள். தன் முகத்தை அவள் முகம் பார்த்து நகர்த்தினாள். இரண்டு கண்களும் சந்தித்தன. மணி மேகலையின் ஒரு கை, மாலினியின் உதடுகளை வருடியது. இரண்டே இரண்டு விரல்கள், அவளுடைய உதடுகளைக் கிள்ளியது. மாலினியின் உதடுகளில் இருந்த ஈரத்தை ஒற்றை விரல் மெல்ல மெல்ல நீவி, நீவி கொடுக்க, மாலினியின் உதடுகள் துடித்தன. மணிமேகலையின் கண்கள் செருகிக் கொண்டன. பாதிக் கண்களால் மாலினியைப் பார்த்தாள்.



''சுந்தர்'' என்றாள்.

மாலினி பதில் கொடுக்கவில்லை.

''சுந்தர்... ஐ லவ் யூ சுந்தர்.''

''கட்'' என்றார் கேசவகீர்த்தி. ''மணி, அற்புதம் மணி. எதிரில் இருக்கிறது மாலினி என்கிறதையே மறந்துட்டு சுந்தர் மாதிரியே நினைச்சிட்டு நடிச்சே, பாரு. அற்புதம்! அதனாலத்தான் நீ இவ்வளவு ஸ்டெடியா இருக்கே. உன் இடத்தில நான் இருந்தாக்கூட, இந்த அளவு நடித்திருக்க மாட்டேன். அடுத்து பாட்டு... எங்கப்பா குதிரைங்க? மணி நீ என்ன பண்றே? உடையை மாத்தறே. ஓட்டலில் அறை புக் பண்ணியிருக்கோம். வடிவேலு உடைகள் கொண் டாந்து தருவான். மாத்திட்டு வந்துரு. தலை அலங்காரம் இதே இருக்கட்டும். பொட்டு மாத்திரலாம். பாட்டின் ஆரம்பமே குதிரையோட டொக் டொக்தான். லாங்லேர்ந்து எடுக்கப் போறோம். உனக்கொரு குதிரை. மாலினிக்கு ஒரு குதிரை. நம்ப பசங்க இடம் காட்டுவாங்க. அங்க போயிருங்க. அங்கேர்ந்து குதிரையில ஏறிட்டு நீங்க இரண்டு பேரும் வர்றீங்க. ஓ.கே?''

''கதாநாயகன் கிடையாதா கேசவ்?''

''பாட்டுதானே? டூப் போட்டுரலாம். பாட்டு முழுக்க முழுக்க நீயும் ''மாலினியும்தான். கதை பிரகாரம் இது ஒருதலைக் காதல்.'' நீ கதாநாயகனை லவ் பண்றே. கதாநாயகன் உன்னை லவ் பண்ணல. அதனால மாலினியை நீ கதாநாயகனா நினைச்சிக்கறே. டூயட் பாடறே. மாலினி குரல் முதல்ல பொம்பளைக் குரலா வரும். அப்புறம் ஆம்பளைக் குரலா மாறும். தியேட்டரில் பாட்டுக்கு நல்ல வரவேற்பு இருக்கப் போவுது பாரேன். எதுக்கு சொல்ல வந்தேன்? ஆ... கதாநாயகன் இந்த பாட்டுக்கு அவ்வளவா இல்ல. ஒண்ணு இரண்டு காட்சிதான். அதனாலத்தான் லாங்ல டூப்பைப் போட்டுராலம்னு சொன்னேன்...''

''சரி கேசவ்'' என்றாள்.

''ராஜா! மணியையும் மாலினியையும் குதிரைங்க கிட்ட கொண்டு போய் விட்டுட்டு வாப்பா. மணி! கேமரா இந்த பாறை மேல இருக்கும்மா. உங்க இரண்டு பேரையும் 'ஜூம்' பண்ணிட்டு இருக்கும். நாங்க இங்கேர்ந்து வெள்ளைக் கொடி ஒண்ணை காத்தில் ஆட்டிக் காட்றோம். உடனே குதிரைங்களை நீங்க விரட்டிட்டு வாங்க. சரியா?''

''ஓ.கே.'' என்று தோளை ஒருமுறை ஸ்டைலாய் குலுக்கிவிட்டு மணிமேகலை காரில் ஏறிக்கொண்டாள்.

காமிரா பொருத்தப்பட்ட இடத்திலிருந்து குதிரைகள் இருந்த இடத்தை அடைய ஒரு முழு நிமிடம் பிடித்தது. கார் கடற்கரையோரமாகவே சென்றது. ஏறக்குறைய ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கலாம். குதிரைகளுக்குப் பக்கத்தில் அதன் பயிற்சியாளர்கள் நின்றிருந்தார்கள்.

மணிமேகலை காரில் இருந்து இறங்கியவுடன் அவர்கள் இருவரும் விறைப்பானார்கள். பணிவாக வணங்கினார்கள்.

''குதிரை சாதுதானே?''

''உங்க வீட்டு நாய் மாதிரிம்மா நம்ம குதிரைங்க. சொன்னா சொன்ன பேச்சு கேட்கும். ஏய்... நீலா அம்மாவை தூக்கிட்டு போறியா?''

பட்டுக்கறுப்பில் பளபளவென்றிருந்த நீலா ஒருமுறை கனைத்தது.

''பாத்தீங்களாம்மா. ஏத்திக்கறேன்னு சொல்லுது.''

மணிமேகலை குதிரைமேல் ஏற அவன் உதவினான். பக்கத்தில் இருந்து வெள்ளைக் குதிரையின் மீது மாலினி ஏற்றப்பட்டாள்.

காற்று பிய்த்துக்கொண்டு வீசியது. மணிமேகலையின் நெளி நெளியான கூந்தல் அந்தரத்தில் பாம்பு நகர்வது போல



காற்றில் அலைந்தது. வெள்ளை நிறத்தில் சட்டை ஒன்று அணிந்திருந்தாள். அதில் இரத்தச் சிகப்பில் ரோஜாக்கள் அங்கங்கே பூத்திருக்க, சட்டையில் காலருக்குப் பதில் பிரில் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. வீசிய காற்றில் பிரில் படபடத்தது. இடுப்பில் ஒரு தங்கநிறச் சங்கிலி. காலில் இரத்தச் சிகப்பில் ஒரு குட்டைப் பாவாடை. பாவாடையில் நிறைய மடிப்புகள் வைத்துத் தைக்கப்பட்டிருந்தன. காற்றின் காரணமாக குட்டைப் பாவாடையின் மடிப்புகள், மயில்தோகை போல அடங்கி, விரிந்தது.

''மாலினி... ரெடியா?''

''ரெடிம்மா. இந்தக் காத்துதான்..''

''ஒண்ணும் பண்ணாது... தைரியமா உக்காரு.''

''அதுக்கில்ல மணி... பாவாடையைத் தூக்கித் தூக்கி விட்டுருது... அதான்.''

''டைரக்டர் கிளாமருக்காக இந்த உடையை கொடுத்திருக்காரு. எப்படி வேணாம்னு சொல்றது.''

''உனக்கென்ன மணி. துடையில ஒரு கீறல்கூட இல்லை. பளபளன்னு வைச்சிருக்க. திரையில் துடை தெரிஞ்சா அவனவன் சீட்டை விட்டே எழுந்துடுவான். நான் இன்னிக்குப் பாத்து கால்ல மேக்கப் போடலை. சின்ன வயசில மரத்தில ஏறும்போது கீழே விழுந்து அடிபட்டுக்கிட்டேன். கால்ல அந்த வடு அசிங்கமாத் தெரியுது. திரையில் அது வந்துடுமேன்னு கவலையா இருக்கு.''

''நல்லா மறைச்சிட்டு உக்காரு மாலினி.''

தூரத்தில், இரு வெள்ளைக் கொடிகள் உயரத்தில் தூக்கி, ஆட்டி காண்பிக்கப்பட்டன.

''மாலினி, கமான்'' என்று சொல்லிவிட்டு குதிரையின் லகானைப் பிடித்துக்கொண்டு, அதன் இருபக்கங்களிலும் காலால் உதைத்தாள்.

''நீலா... போம்மா....''

இரண்டு குதிரைகளும் விரைந்தன.

கேசவகீர்த்தி ஓடிக்கொண்டிருந்த காமிரா வழியாகப் பார்த்தார்.

மணிமேகலை ஏறியிருந்த குதிரை அலைகளை ஒட்டியிருந்த ஈர மணல் பகுதியில் கால் பதித்து, கால் பதித்து தடயம் ஏற்படுத்திக்கொண்டே வர, பக்கத்தில் மாலினி ஏறியிருந்த வெள்ளைக் குதிரை மிதந்து மிதந்து வந்தது. நீலக்கடல், வானம், பழுப்பு மணல், வெண்ணுரை அலைகள், பட்டுக்கறுப்புக் குதிரை, அதன்மேல் சிகப்பும் வெள்ளையுமாய் ஒரு செலூலாயிட் தேவதை!

இந்தக் காட்சி நிச்சயம் ரசிகர்கள் அத்தனை பேரையும் மயங்க வைக்கப் போகிறது என்ற சந்தோச எண்ணத்தில் கேசவகீர்த்தி மூழ்கினார்.

காமிராவில் இருந்து கண்ணை எடுத்து, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

அப்போதுதான் அது நடந்தது.

காலையில் இரை தேடுவதற்காக வெளியே புறப்பட்டிருந்த நாய் ஒன்று, கடற்கரைப் பக்கம் அதிசயமாகக் குதிரைகளைப் பார்த்துவிட்டு, தன் அபாரமான குரைப் பொலியுடன் குதிரைகளைத் துரத்தத் தொடங்கியது.

பட்டுக்கறுப்பு குதிரை மிரண்டது. சட்டென்று முன்னங் கால்களை உயர்த்தி ஒருமுறை கனைத்துவிட்டு, கால்கள் இரண்டையும் ஒரு சேர பூமியில் பதித்தது. மணிமேகலை குதிரையின் முதுகு விளிம்புவரை போய் மறுபடி மீண்டாள். லகானை இறுகப் பற்றியிருந்தாலும், பயத்தில் இதயம் துடிப்புகளை விட்டது. அவள் வாயிலிருந்து இனம் தெரியாத ஒரு பயக்குரல் வெளிப்பட்டது. குதிரை மறுபடி





ஒருமுறை கனைத்துவிட்டு திடீரென்று திரும்பி கடல் பக்கம் ஓடத் தொடங்கியது.

ஸ்ப்ளாஷ்

ஸ்ப்ளாஷ்

ஸ்ப்ளாஷ்

ஸ்ப்ளாஷ்.....

தண்ணீர் தெறிக்க, உப்புநீர் மணிமேகலையின் கண்களில் பட்டு எரிச்சல் எடுக்க, மணிமேகலை கண்களை மூடினாள்.

''காப்பாத்துங்க'' என்று கத்தினாள்.

மாலினியின் குதிரை, வெகுவேகமாக புறப்பட்ட இடத்தை நோக்கித் திரும்பிப்போக, நாய் தண்ணீர்க் குதிரையை விட்டுவிட்டு, மாலினியின் வெள்ளைக் குதிரை பின் பின்னால் சென்றது.

மணிமேகலையின் பட்டுக்கறுப்புக் குதிரை மேலே மேலே என்று தண்ணீரை நோக்கி, அதன் ஆழத்தை நோக்கி விரைய, மணிமேகலை கையில் பிடித்திருந்த லகானை விட்டாள்.

எதிர்த்து வந்த ஒரு பெரிய அலையைக் கண்டு மிரண்டு குதிரை மறுபடி ஒருமுறை முன்னங்கால்களை உயர்த்த, மணிமேகலை குதிரையிலிருந்து உருண்டு கீழே விழுந்தாள்.

தண்ணீர் அவளை ஆவலுடன் உள்வாங்கிக் கொண்டது. அவள் விழுந்த இடத்தில் ஆழம் தொடங்கியிருக்க, மணிமேகலை சட்டென்று உள்ளே போனாள். மூழ்கும்போது, மணிமேகலையின் ஒரே நினைப்பு:

''அய்யோ, எனக்கு நீந்தத் தெரியாதே...''



படப்பிடிப்பு குழுவில் பயத்துடன் கூடிய பரபரப்பு தெரிந்தது. கேசவகீர்த்தி புகைத்த சிகரெட்டை வீசியெறிந்துவிட்டு ''மணியைக் காப்பாத்துங்க'' என்று கத்திக்கொண்டே அவள் மூழ்கிய இடத்தை நோக்கி ஓடிவரத் தொடங்கினான்.

## 3

மணிமேகலை கடலில் மூழ்கிய இடத்திற்குச் சற்றுத் தள்ளித்தான் அவன் இருந்தான். ஈர மணலில் குழிவெட்டி அதில் காத்திருந்தான். அவனுக்கு நூறடி தள்ளி இன்னொரு பள்ளம் வெட்டி இன்னொருவன் காத்திருந்தான். அவர்கள் இந்த மாதிரி பள்ளம் வெட்டி அதில் காத்திருந்ததே, படப்பிடிப்பின் போது ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்துவிட்டால் அதைச் சமாளிக்கத்தான்.

மணிமேகலை ஏறியிருந்த குதிரை, தண்ணீரை நோக்கிப் பாய்வதைப் பார்த்தவுடன், அவன் முதலில் பள்ளத்தில் குப்புறப்படுத்தான். குதிரை முன்னங்கால்களால் அவன் மீது மண்ணை அள்ளிப்போட்டுப் பறந்ததில் அதன் பின்னங் கால்களில் ஒன்று, அவன் முதுகின் மீது பட்டது. திடீரென்று மின்சாரம் தாக்கிய உணர்வு. கருநாகம் தீண்டிய உணர்வு. ஆயிரம் தேள்கள் ஒன்றாகச் சேர்ந்து கொட்டிய உணர்வு.

இருந்தாலும் சமாளித்து எழுந்தான். குதிரையின் பின்னால் ஓடினான். குதிரை அவளை வீசி எறிவதைப் பார்த்தவன், சட்டென்று சட்டையை உதறி வீசிவிட்டுத் தண்ணீரில் பாய்ந்தான்.

மணிமேகலை கடலில் மூழ்கிய இடத்தைக் குறியாக வைத்து நகர்ந்தான். மணிமேகலையின் சட்டையில் இருந்த சிகப்பு ரோஜா கருநீலத் தண்ணீரில் மிதந்தது தெரிந்தது. அவளுடைய தலைமுடி, தண்ணீரில் ஒரு நவீன சித்திரம்



போல விரிந்திருந்தது தெரிந்தது. அதை நோக்கிப் பாய்ந்தான்.

அவள் முடியைப் பற்றினான். இழுத்தான்.

மணிமேகலைக்கு இன்னும் உணர்வு இருந்தது. கையில் ஏதோ பிடிப்பு கிடைக்கிற மாதிரி அவனுடைய கால் தட்டுப்பட, அதைக் கெட்டியாகப் பிடித்தாள்.

''மணி, காலை விடுங்க. உங்களைக் காப்பாத்த வந்திருக்கேன்.''

மணிமேகலையின் காதில் அவன் சொன்னது ஏறவே இல்லை. அவனை மேலும் இறுக்கமாகப் பற்றினாள். அவன் அவளைப் பற்றினான். அவள் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டான். மணிமேகலை மயங்கினாள். அவன் காலைப் பற்றியிருந்த கையை விட்டாள். ஒருமுறை நீரில் மூழ்கி நீர் குடிக்க, ''குபுக்'' என்று குமிழ்கள் வெளிப்பட்டு நீர்மட்டத்தைத் தொட்டன.

அவன் அவளை இழுத்துக்கொண்டு ஒற்றைக்கையால் நீந்தினான். அவரைத் தள்ளிவிட்ட குதிரை, அவளுக்கு முன்னால் கரையை அடைந்து நின்று, மணிமேகலையை அவன் சுமந்து கொண்டு வருவதையே ஆவலுடன் பார்க்கிற குழந்தையைப் போல பார்த்தது.

அவன், அவளை ஈர மண்ணில் மெதுவாகக் கிடத்தினான். அவளைத் தொட முயன்ற அலைகளைத் தடுக்கிற மாதிரி அவளுக்கும், அலைகளுக்கும் இருந்த பிரதேசத்தில் முழங்கால் இட்டு உட்கார்ந்தான். அவளைப் பார்த்தான்.

அவளுடைய மேக்கப் கலைந்திருந்தாலும் மணிமேகலை அபார அழகியாகத் தோன்றினாள். அவளுடைய பெரிய கண்களை இமைகள் மூடியிருந்தன. இருந்தாலும் பாதாம் பருப்புகளை அதன் மேல் தோல்கள் போர்த்தியிருந்த

மாதிரித் தெரிந்தது அவனுக்கு. அவளுடைய உதடுகள் பயத்தாலோ, வேறு எதனாலோ மெலிதாகத் துடித்துக் கொண்டிருந்தன. அவை அணில் கடித்து உதறும் முந்திரிப் பழங்கள் செடியிலேயே நடுங்குவதை நினைவுபடுத்தின அவனுக்கு. அவளது கன்னங்களில் நிறைந்திருந்த நீர்முத்துக்கள், காலை நேர ஆப்பிள்களின் மேல் இருக்கும் பனித் துளிகளை நினைவுபடுத்தின. அவளுடைய மூக்கு... ரோஜா நிற தாமரைத் தண்டு போல் தெரிந்தது அவனுக்கு. ஒரு நடிகை மேக்கப் இல்லாமல் இவ்வளவு அழகாக இருக்க முடியும் என்ற உண்மை அவனுக்கு அப்போதுதான் தெரிந்தது.

வெள்ளைச் சட்டை ஈரத்தில் ஊறியிருந்ததில் அவளது சந்தன நிற மேனி இலைமறைவு காய்மறைவாய்த் தெரிய...

அவன் பார்ப்பது தப்பு என்ற எண்ணம் ஏற்பட்டவன் போல் கண்களை ஒருமுறை மூடித் திறந்தான்.

அவன் உதடுகள் அவனை அறியாமல் ''மணிமேகலை'' என்று முணுமுணுத்தன.

தூரத்தில் படப்பிடிப்புக் குழுவினர் ஓடிவரும் ஓசை கேட்டது. அவன் சட்டென்று தாவினான். அவளது இடுப்பின் இருபுறங்களிலும் முழுங்கால் இட்டு உட்கார்ந்து கைகளை அவளுடைய இடுப்பிலிருந்து மெல்ல மெல்ல அழுத்திக் கொண்டே மேல் நோக்கி முன்னேறினான்.

மணிமேகலையின் வாயிலிருந்து உப்பு நீர் வெளிப்பட்டு வழிந்தது. அவன் நிறுத்தாமல் மறுபடி மறுபடி அழுத்தினான். அவள் வாயிலிருந்து நீரைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றினாள். இனிமேல் நீர் வெளிப்படாது என்று தோன்றியவுடன், அவளது இடுப்பில் கை கொடுத்து அவளைத் தூக்கினான். பூப்போல இருந்தாள் மணிமேகலை. அவளது கனம் மகிழ்ச்சியான கனமாக இருந்தது. அவளது



உடலின் மென்மையான பாகங்கள் அவனது உடலில் அழுந்தி அவனைக் கிறங்கச் செய்தது.

அவளைச் சுமந்து அப்படியே சுழற்றினான் அவன். அவள் உடலில் மிச்ச மீதியிருந்த நீர் வெளியேறி, காற்றில் கலைந்தது.

வாடிய மல்லிகைச் சரம் போல இருந்த அவளை மறுபடி கீழே படுக்க வைத்தான். ஒதுங்கி நின்றான்.

கேசவகீர்த்திதான் எல்லாருக்கும் முன்னால் அவளை அணுகினார். அவள் கன்னங்களை மென்மையாகத் தட்டினார். குனிந்து அவளைக் கவலையுடன் பார்த்தார். சிறிது நேரத்தில், படப்பிடிப்புக் குழுவினரின் அத்தனை பேர் முகங்களும் மணிமேகலையை சூழ்ந்து கொண்டன. மாலினி, காமிராமேன், உதவி இயக்குநர், குதிரைக்காரன் எல்லாரும் நெருக்கியடித்துக்கொண்டு அவளை நோக்கிப் பார்க்க, அவன் அவளிடமிருந்து விலக்கப்பட்டான்.

அவன் கடற்கரையில் வீசிய தன் சட்டையை நோக்கி நடந்தபோது, மணிமேகலை கண்விழித்தாள்.

''நான் இன்னும் செத்துப்போகலியா?''



## 4

''சேது.''

''என்ன மேடம்?''

''உண்மையைச் சொல்லுங்க. டைரக்டர் கேசவகீர்த்திதான் என்னைத் தண்ணியிலேர்ந்து காப்பாற்றினார்னு செய்தி வந்திருக்குதே. என்னை கேசவகீர்த்தியா காப்பாற்றினாரு?''

மானேஜர் சேது தயங்கினார்.

‘‘சொல்லுங்க சேது. என்கிட்ட சொல்றதுக்கு என்ன?’’

‘‘சினிமா உலகில் இதெல்லாம் சகஜம்தானம்மா?’’

‘‘நான் கேட்டதுக்குப் பதில் சொல்லலை நீங்க. என்னைக் காப்பாத்தினது யாரு?’’

‘‘கேசவிதாம்மா.’’

‘‘பொய். என் கண்ணைப் பார்த்துச் சொல்லுங்க, பார்க்கலாம்.’’

சேது அவள் கண்களைப் பார்க்க முயன்று தோற்றுப் போனான்.

‘‘சேது. நான் என்ன ஒண்ணும் தெரியாத பாப்பான்னு நினைச்சீங்களா? குதிரை மிரண்டு போய் கடலைப் பார்த்து ஓடும்போதே குழியில ஒரு ஆள் இருந்ததைப் பார்த்தேன். அந்த ஆள் முதுகை குதிரையோட ஒரு காலு உதைச்சதையும் பார்த்தேன். அவன் எழுந்து குதிரைக்குப் பின்னால் ஓடிவந்ததையும் பார்த்தேன். நீங்க என்னன்னா கேசவகீர்த்தி காப்பாத்தினதாச் சொல்றீங்க. யார் அந்த ஆளு?’’

‘‘முத்துக்குமார்.’’

‘‘இப்பத்தான் உண்மை பேசறீங்க. என் திறமை என்னங்கிறதை ஒரு டைரக்டர் காட்டினதினாலத்தான் நான் இன்னிக்கு தெய்வக்கன்னியா இருக்கேன் சேது. ஒருத்தருடைய திறமையை அமுக்கிறதுக்கு முயற்சி பண்ணினால், வெளி உலகத்துக்கு திறமைசாலிங்க எல்லாம் தெரியாமயே போயிடுவாங்க. யார் அந்த முத்துக்குமார்?’’

‘‘டைரக்டர் குழுவில் காப்பிரைட்டருங்க.’’

‘‘அவரை நான் பார்க்கணும்.’’

‘‘மேடம்?’’

‘‘ஆமா, அவரை நான் பார்த்தே ஆகணும். அவருக்கு உதவி செய்யலன்னாக் கூடப் பரவாயில்லை. நன்றி கூடவா



சொல்லக் கூடாது. போங்க சேது. அவர் எங்க இருந்தாலும் கூட்டிட்டு வாங்க.’’

‘‘இதோ மேடம்.’’

‘‘வாங்க முத்துக்குமார்.’’

முத்துக்குமார் குளிரூட்டப்பட்ட அந்த அறையில் நுழைந்தவுடன் கதவு தானாகச் சாத்திக் கொண்டது. இவ்வளவு ஆடம்பரமாக ஓர் அறையை அவன் பார்த்ததே இல்லை. சன்னல்கள் கண்ணாடிச் சதுரங்கள். அவற்றை செங்கல் நிறத்தில் திரைகள் மூடியிருந்தன. தரையில் செங்கல் நிறத்தில் கம்பளம் அறை பெரிதாக இருந்தது. ஓர் ஓரத்தில் பெரிய கட்டில். அதன் மேல் விரிக்கப்பட்டிருந்த மெத்தை. மெத்தைக்குப் பக்கத்தில் திராட்சைக் கொடி போல் தோற்றமளித்த மர வேலைப்பாடுடன் கூடிய ஒரு உப்பாயில் காத்திருந்த இன்டர்காம் முயல். சோபா. சுவரில் இருந்த நவீன சித்திரம். முத்துக்குமார், படுக்கையில் சாய்ந்திருந்த மணிமேகலையைப் பார்த்தான்.

அவள் மிக ஒயிலாகச் சாய்ந்திருந்த மாதிரி பட்டது அவனுக்கு. கொழுகொம்பில்லாத பூங்கொடி ஒன்று தரையில் துவண்டிருப்பது போலவும் உணர்ந்தான் அவன்.

முத்துக்குமார் தயங்கி நடந்து சோபாவில் உட்கார்ந்தான். அது அவனை உள்வாங்கிக் கொண்டது.

‘‘எதுக்கு என்னைக் கூப்பிட்டீங்க?’’ என்று தயக்கத்துடன் கேட்டான்.

மணிமேகலை எழுந்தாள். அவன் சோபாவுக்கு எதிர் சோபாவில் வந்து உட்கார்ந்தாள். மெல்லிய துணியிலான இரவு உடையை அணிந்திருந்தாள் மணிமேகலை. துணியின் ஊடே தெரிந்த அவளது உடலின் வளைவுகள், முத்துக் குமாரை வெகுவாகச் சோதித்தன. தெய்வக்கன்னி மணி

மேகலை, அவனுக்கு இவ்வளவு அருகில். அவனாலேயே தன்னை நம்ப முடியவில்லை.

''நீங்க என்ன பண்றீங்க முத்துக்குமார்?''

''காப்பி பண்றவன் மேடம்.''

''பரவாயில்லை. என்னை மணிமேகலைன்னு கூப் பிடுங்க. இல்லைன்னா மணின்னு கூப்பிடுங்க. இல்லன்னா எப்படிப் பிடிக்குதோ அப்படிக் கூப்பிடுங்க.''

''சரி'' என்று குழந்தை மாதிரி தலையசைத்த அவனைப் பார்த்தால் உள்ளூரச் சிரிப்பு வந்தது மணிமேகலைக்கு. கொஞ்சம் கூனிக்குறுகி உட்கார்ந்திருந்தாலும் ஐந்தடி எட்டங்குலம் போல இருப்பான் போலத் தெரிந்தான். வாட்டசாட்டமான உடற்கட்டு என்பது அவன் அணிந் திருந்த சட்டையை மீறித் தெரிந்தது. நல்ல நிறம். கருப்பு என்று சொல்ல முடியாத, வெள்ளைக்காரச் சிவப்பு என்றும் சொல்ல முடியாத ஒரு மாதிரி எலுமிச்சை கலந்த தங்கநிறம். சுருட்டை மயிர். கரிய, பெரிய விழிகள். அந்தக் கணகளுக்கு மை தீட்டிவிட்டால் இன்னும் அவன் அழகாக இருப்பான் போலத் தெரிந்தான். அவன் மெலிதாகச் சிரித்தபோது அவன் கண்களுக்கு சேர்ந்து சிரித்தன.

''காப்பியெடுக்கறதுன்னா என்ன முத்துக்குமார்?''

''டைரக்டரும் அவரோட உதவியாளர்களும் சேர்ந்து கதையை டிஸ்கஸ் பண்ணி, பதிவு செய்யறதை எல்லாம் நான் வெள்ளை பேப்பரில் எழுதணும் மேடம்.''

''மறுபடி மேடம்னு சொல்றீங்க.''

''சட்டுனு உங்களை என்னால் வேறுவிதமாக் கூப்புட முடியல.''

''உங்களுக்கு என்ன கிடைக்கும்?''



''படத்துக்கு அஞ்சாயிரம்.''

''படத்துக்கு அஞ்சாயிரம்னா கீர்த்தி வருடத்துக்கு இரண்டு படந்தானே பண்றாரு.''

''எனக்குப் பத்தாயிரம் கிடைக்கும்! என்னை எதுக்குக் கூப்பிட்டீங்கன்னு...''

அவன் அந்த வாக்கியத்தை முடிப்பதற்குள் கதவு திறந்தது. ஒரு தலைப்பாகை கட்டிய பணியாள் சக்கரவண்டியை உள்ளே நகர்த்தி வந்தான். வண்டியில் இருந்த தட்டில் சூடாக நான்கு இட்லிகள், நெய், மிளகாய்ப் பொடி, தொட்டுக் கொள்ளச் சட்டினி, சாம்பார்.

தட்டை முத்துக்குமாரின் முன்பாக வைத்தான் பணியாள்.

''சாப்பிடுங்க முத்துக்குமார்.''

முத்துக்குமார் மறுப்பெதுவும் சொல்லாமல் சாப்பிடத் தொடங்கினான். அவன் சாப்பிடுவதைப் பார்த்தால், அந்த மாதிரி தரமான உணவைச் சாப்பிட்டு நீண்ட நாட்களாகி இருக்கும் என்பது போலத் தெரிந்தது.

''சாமி.. இன்னும் நாலு இட்லி கொண்டு வாங்க! அப்புறம் இரண்டு தோசை.''

''சரிம்மா.''

''முத்துக்குமார், நீங்க தப்பா நினைச்சிக்காதீங்க.''

''எதுக்கு?''

''நான் தண்ணியில் விழுந்து மூழ்கினப்ப என்னைக் காப்பாத்தினது நீங்கதான்னு எனக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலத்தான் தெரியும். அதனால என் உயிரைக் காப் பாத்தினதுக்கு நான் ஒரு நன்றி கூடச் சொல்லலைன்னு நீங்க நினைக்கக்கூடாது இல்லை?''

''அய்யய்யோ... நான் அப்படி நினைக்கவே இல்லைங்க. இன்னும் சொல்லப்போனால், நான் உங்களைக் காப்பாற்றவே இல்லை. டைரக்டர்தான் காப்பாத்தினாரு...''

''என்கிட்டயே பொய் சொல்றீங்களே, முத்துக்குமார்.''

முத்துக்குமார் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான்.

''நான் தண்ணியில் மூழ்கினாலும்கூட, கரையோரமா இருந்த உங்களைப் பார்த்தேன். நான் உங்க காலைப் பிடிச்சப்ப, நீங்க ''மணி, காலை விடுங்க, உங்களைக் காப்பாத்த வந்திருக்கேன்''னு நீங்க சொன்னதைக் கேட்டேன். உங்க குரல் நான் மறக்கலை, முத்துக்குமார். என்னால இவ்வளவு சீக்கிரம் அந்தக் குரலை மறந்துவிட முடியாது. நீங்க என்னைத் தூக்கினது, நான் உங்களைப் பயத்தில கட்டிப் புடிச்சிக்கிட்டது எல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கு. சினிமா உலகில் இந்த மாதிரித்தான். வேலை செய்யறது ஒருத்தர். பேர் வாங்கிக்கிறது இன்னொருத்தர். அதனால நீங்க என்னைக் காப்பாத்தலேன்னு எங்கிட்டயே சொல்ல வேணாம்.''

கதவு மறுபடி திறந்து இட்லி உள்ளே வர, பணியாள் இட்லிகளை முத்துக்குமார் தட்டில் வைத்தான்.

''அய்யய்யோ! இட்லி நீங்க சாப்பிடக் கேக்கறீங்கன்னு நான் நினைச்சேன் மேடம்.''

''சரி, சாமி! எனக்கும் ஒரு தட்டுல இரண்டு இட்லி எடுத்துட்டு வாங்க. அந்த இட்லியை அவருக்கே வைச்சிருங்க.''

முத்துக்குமார் கையை டவலால் துடைத்துக் கொண்டு பணியாள் கொண்டு வந்து கொடுத்த ஆப்பிள் ஜூஸை மறுபடியும் தயக்கத்துடன் வாங்கிக் குடித்தான்.

''நான் உங்களை ஏன் கூப்பிட்டு அனுப்பினேன் தெரியுமா முத்துக்குமார்?''



''சொல்லுங்க மேடம்.''

''நான் கொஞ்சம் பிடிவாதக்காரி. நான் என்ன நினைச்சாலும் அதைச் சாதிச்சாகணும், நடனம் கத்துக்கணும்னு நினைச்சேன். கத்துக்கிட்டேன். தமிழ், இங்கிலீஷ் எல்லாம் எழுதப் பேசக் கத்துக்கணும்னு நினைச்சேன். கத்துக்கிட்டேன். நாலுபேர்கிட்ட எப்படிப் பேசிப் பழகறதுன்னு கத்துக்கிட்டேன். இன்னிக்குத்தான் நான் தெய்வக்கன்னி மணிமேகலை. ஏழு வருடங்களுக்கு முன்னால் நான் சாதாரணப் பொண்ணு. கம்பம் கிராமத்துலேர்ந்து குடும்ப வாழ்க்கை வாழணும்னு நினைச்சிக்கிட்டு வந்த ஒரு விவசாயப் பொண்ணு. உலகம் தெரியாதவள். இவ்வளவு தூரம் வந்திருக்கேன்னா என் பிடிவாதம்தான் காரணம். நீச்சல் தெரியாததாலத்தான் நான் கடல்ல மூழ்கி செத்துப் போறதுக்கு இருந்தேன். அது எனக்குத் தெரியாமல் இருக்கக் கூடாது. அதனால நீங்கதான் எனக்கு நீச்சல் கத்துக் கொடுக்கப் போறீங்க?''

''நானா?'' என்று முத்துக்குமார் திகைப்பும் சந்தோசமுமாகக் கேட்டான்.

''ஏன்?''

''இல்ல. உங்களுக்கு நீச்சல் கத்துக்கொடுக்க எவ்வளவோ பெண் பயிற்சியாள் எல்லாம் இருப்பாங்க... நான் போய்....''

''இல்ல முத்துக்குமார். நான் உங்களுக்கு ஒரு நன்றியை சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டால், அத்தோட என் கடமை முடிஞ்ச மாதிரி எனக்குத் தோணாது. நீங்க என்னைக் காப்பாத்திட்டீங்க. அதுக்காக நான் பணம் கொடுக்கறேன்னு கொடுத்தா, அது உங்களை அவமதிக்கிற மாதிரி ஆயிடும். அதனால உங்ககிட்ட நான் நீச்சல் கத்துக்கப் போறேன். நீங்கதான் என்னோட நீச்சல் டீச்சர். அதுக்காக நீங்க எவ்வளவு பீஸ் கேக்கறீங்களோ அதை நான் தர்றேன்.

உங்களுக்குத் திருப்தியா இருக்கிற மாதிரி... என்ன சொல்றீங்க?''

''சரி'' என்றான் முத்துக்குமார் மெல்லிய குரலில். ''எங்க கத்துக்கறீங்க... கன்னிமாராவிலா, சோளா ஷெரட்டானிலா, அடையார் பார்க்...''

''இங்கல்லாம் போனால் பப்ளிக்கா நான் கத்துக்க வேண்டி இருக்கும். உங்களுக்கும் எனக்குக் கத்துக் கொடுக்கச் சங்கடமா இருக்கும்.''

''பின்னே?''

''திருவான்மியூர் தாண்டினவுடனே எனக்கு ஒரு சின்ன தோட்ட வீடு இருக்கு. நான் எப்பவாவது தனியா இருக்கணும்னு நினைச்சா அங்கதான் போவேன். அந்த வீட்ல பின்னால இடம் இருக்கு. அங்க சின்னதா ஒரு நீச்சல்குளம் கட்டிடச் சொல்றேன். மறைப்பாவும் இருக்கும். யாரும் பாக்கவும் மாட்டாங்க. என்ன சொல்றீங்க?''

''நீங்க ஒரு நீச்சல் குளமே கட்டப் போறீங்களா?''

''ஆமா... சின்னதாத்தானே... ஒரு மாசத்தில் முடிஞ்சிரும். நீங்க வர்றீங்க, எனக்குக் கத்துத்தர்றீங்க...''

''சரி.''

''உங்க வீடு எங்க இருக்குன்னே சொல்லலியே..?''

''திருவல்லிக்கேணியில்.''

மணிமேகலை எழுந்தாள். மெத்தையின் தலையணையை நீக்கி அதனடியில் இருந்த ஒரு ஐம்பது ரூபாய்க்கட்டை எடுத்தாள்.

''இந்தாங்க.''

''இது என்னங்க?''



''குருதட்சணை. முதல் முதல்ல தர்றேன். வேணான்னு சொல்லக்கூடாது.''

''ஐயாயிரம் அதிகங்க.''

''இதனால், நான் குறைஞ்சிட மாட்டேன், முத்துக்குமார். இதை நீங்க வாங்கிக்கிட்டா எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கும்.''

முத்துக்குமார் கைநடுங்க, ரூபாய் நோட்டுக் கற்றையைப் பெற்றுக்கொண்டான்.



## 5

அது ஒரு ஞாயிறு. விடியற்காலையில் எழுந்திருக்கும் போதே, மணிமேகலை இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை என்ற மகிழ்ச்சியான உணர்வுடன் எழுந்தாள்.

மானேஜர் சேதுவிற்குக் கூடத் தெரியாமல், அவளே தன்னுடைய நம்பிக்கைக்கு உரிய சுலோசனாவை அழைத்து வைத்து, தன்னுடைய திருவான்மியூர் தோட்ட வீட்டில் நீச்சல் குளத்தைக் கட்டச் செய்தாள். அதில் பளிங்குக் கற்களைப் பொருத்தச் செய்தாள். போன வாரமே நீச்சல்குளம் முடிந்துவிட்டதில் அவளுக்கு மகிழ்ச்சியென்றால் அப்படி ஒரு மகிழ்ச்சி.

முத்துக்குமாருக்கு தன் கைப்பட ஒரு தபால் எழுதினாள். அதை சூட்டிங் போகும் வழியில் தானே காரைவிட்டு இறங்கி, தபால் பெட்டியில் சேர்த்தாள். அவனுக்குக் கடிதம் கிடைத்திருக்குமா, கிடைத்திருக்காதா என்று ஒரே கவலையாக இருந்தது.

இருந்தாலும், இன்றைக்கு ஞாயிறு!

நேரில் போய்ப் பார்த்துவிட்டால் எல்லாச் சந்தேகமும் தீர்ந்துவிடப் போகிறது.

ஞாயிறு மானேஜர் சேது வரமாட்டான். பொம்மி வரமாட்டாள். சுலோசனா கூட ஏதாவது அவசியமான காரியமாக இருந்தால் மட்டும் வருவாள். அவளையும் இன்று வரவேண்டாம் என்று சொல்லிவிட்டாள்.

படுக்கையில் இருந்து எழுந்ததும் அவளுக்குப் பிடித்த பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டே ஆடை மாற்றினாள். தலையைத் தானே வாரி லூசாகப் பின்னலிட்டுக் கொண்டாள். இரு கண்களையும், நெற்றியையும் மறைக்கிற மாதிரியான குளிர்கண்ணாடி ஒன்றை அணிந்து கொண்டாள். வீட்டைவிட்டு வெளிப்பட்டு கராஜில் இருந்த பழைய மாடல் ஸ்டாண்டர்டு கம்பெனியின் ஷெரால்டு காரை எடுத்தாள்.

ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் செய்ததும் ஹெரால்டு புர்ர்... என்றது.

தெய்வக்கன்னி மணிமேகலை இப்படி ஒரு பழைய காரில் வருவாள் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

தன்னுடைய காம்பவுண்டை விட்டு வெளிப்பட்டு, தன்னுடைய கடற்கரை வீட்டை நோக்கி வண்டியைச் செலுத்தினாள் மணிமேகலை.

மணிமேகலையின் ஹெரால்டு திருவான்மியூர் தாண்டி ஒரு தனிமைப் பிரதேசத்தை அடைந்தவுடன் இடதுபுறம் திரும்பியது. அந்தப் பிரதேசம் இன்னும் நகரத்து மக்களால் தீண்டப்படாத பிரதேசமாக இருந்ததால் இயற்கை தன் விருப்பத்திற்கேற்ப விளையாடிக் கொண்டிருந்தது. காலைச் சூரியனின் கதிர்கள் பாதையின் இருபுறங்களிலும் இருந்த சவுக்குத் தோப்பின் மரங்களை ஊடுருவியதால் நீளநீளமான நிழல்கள் அவள் சென்ற பாதையில் போர் வீரர்களைப் போல அணிவகுத்து நின்றன.

ஓர் ஆலமரம் அதில் இருந்த குருவிக்கூட்டுக் குஞ்சுகளுடன் அவளைத் தலையசைத்து வரவேற்றது. குஞ்சுகள் "கீச் கீச்'' என்று கத்தி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தன.

மணிமேகலை ஹெரால்டை சவுக்குத்தோப்பின் இடையே திடீரென்று முளைத்த வேலிப்படல் அருகே நிறுத்தினாள். இறங்கினாள். வேலிப்படலைத் திறந்தாள். ஒரு மண் பாதை உள்ளே சென்றது.

மணிமேகலை அந்தப் பாதையில் காரைச் செலுத்தினாள். குளிர்ந்த சில்லென்ற கடல் காற்று அவள் முகத்தை வருடியது. கார் காசட்டில் இருந்த சங்கீதத்தை வெளிப்படுத்தினாள். அதன் தாளத்திற்கேற்ப ஸ்டியரிங்கில் தட்டினாள். அந்த சங்கீதத்தை ரசிப்பதற்குள் வீடு வந்துவிட்டது.

வீட்டின் அத்தனை சன்னல்களும் சாத்தியிருந்தன. திரைகள் மறைத்திருந்தன. இந்த வீட்டின் உள்ளே என்ன இருக்கிறது? யார் வசிக்கிறார்கள்? என்ற விவரங்கள் எல்லாம் பொதுமக்களிடம் இருந்து ப்ளாக் - அவுட் செய்யப்பட்ட தனி வீடு. மணிமேகலையின் சொர்க்க வீடு.

காரின் சத்தம் கேட்டு பின்னால் அவுட் ஹவுசில் இருக்கும் வேலையா என்ற பெரியவர் ஓடிவந்தார்.

மணிமேகலையைப் பார்த்ததும், ''அம்மா வந்துட்டியா?'' என்றார் உண்மையான சந்தோசத்துடன்.

''வந்துட்டேன், வேலையா...''

''வழக்கம்போல செங்கம்மாவைச் சமைச்சிரச் சொல்லட்டுமாம்மா.''

''இரண்டு பேருக்கு வேணும் வேலையா... செங்கம்மா கிட்டச் சொல்லி புட்டுமாவு இருந்தால் புட்டு செய்யச் சொல்லு - காலையில் கூட கொண்டகடலை குழம்பு வைக்கச் சொல்லு.''

''சரிம்மா. மத்தியானத்துக்கு?''

''செங்கம்மாவோட பிரியம்.''

''வஞ்சிரமீனு கொண்டு வந்திருக்கேம்மா குழம்பு வைச்சிரச் சொல்லட்டுமா?''

''ம்...''

''தொட்டுக்கறதுக்கு எறா வறுக்கச் சொல்றேம்மா.''

''செய், வேலையா.''

''கூட சாப்பிடப் போறது யாரும்மா?''

''தெரிஞ்சவரு.''

''சினிமாக்காரராம்மா?''

''இல்லை. எனக்கு வாத்தியாரு.''

''சரிம்மா. நான் ஒண்ணு சொல்றேன். கோவிச்சிக்க மாட்டியேம்மா?''

''சொல்லு.''

''கோவிச்சிக்கக் கூடாது.''

''இல்ல. வேலையா. சொல்லு.''

''உனக்குப் பணத்துக்கு ஏதாவது குறையிருக்குதாம்மா? பட்டணத்தில வீடு வாசலு இருக்குது. இங்க நிலம் நீச்சு எல்லாம் இருக்குது. சொன்னா நீ சொன்ன பேச்சைக் கேக் கறதுக்கு ஆளு அம்புன்னு அத்தனை பேரும் இருக்கறப்ப...''

''இருக்கறப்ப...? சொல்லு வேலையா?''

''இன்னும் என்னாத்துக்கும்மா பயாஸ்கோப்புல ஆட ணும் நீ? எல்லாத்தையும் விட்டுடேன். இனிமே சம்பாரிச்சி, மொள்ளமாறிப் பசங்களுக்கு முன்னால எல்லாம் பல்லைக் காட்டி சிரிச்சி உனக்கு என்னா வரப்போவுது?''



''இதானா நீ சொல்ல வந்தது?''

''கல்யாணம் ஒண்ணு பண்ணிக்க ராசாத்தி. ஒரு ஆறேழு புள்ளைங்களைப் பெத்துக் கொடு. கிழவன் நான் அத்தனையும் வளக்கறேன். எனக்குக் கொடுத்து வைக்கலை. எனக்கும் கிழவிக்கும் நீதான் பொண்ணு. போறதுக்குள்ள பேரக் குழந்தையை கொஞ்சணும் போல இருக்கும்மா. உனக்கு ஒண்ணு பிறந்தா அது தளதளன்னு தக்காளிப் பழமாட்ட நந்தான் இருக்கும் மணியம்மா.''

''அவ்வளவுதானே. சரி, நான் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கறேன் போ.''

வேலையா சமாதானமாக மெல்ல பின்னால் சென்றான்.

''வேலையா..''

''என்னம்மா?''

''யாரு வந்தாலும் வீட்டுக்குள்ளே விட்டுறாத. நான் வீட்டுக்குள்ள இருக்கற விஷயமே வெளியில தெரியக் கூடாது.''

''இதை நீங்க சொல்லணுமாம்மா?''

பெரியவர் பின்னால் போனவுடன் மணிமேகலை வீட்டினுள் நுழைந்தாள்.

நகரத்து வீட்டில் ஒரு நடிகையாய் இருக்கும்போது செய்யமுடியாத வேலைகளை எல்லாம் செய்தாள். வீடு பெருக்கினாள். சுவர்கள் முழுக்க மூங்கில் சுழிகளால் மூடப் பட்டிருந்தன - குளிர்ச்சியாக இருப்பதற்காக. கடற்கரைக் காற்றின் காரணமாக அந்த மூங்கில் கழிகளின் இடையில் புகுந்திருந்த தூசியை எல்லாம் ஒரு வாக்வம் கிளீனரை வைத்து உறிஞ்சி எடுத்தாள். மேசை மேல், டீப்பாய் மேல் எங்காவது தூசி இருக்கிறதா என்று பார்த்தாள்.

தூசி இல்லை என்று திருப்தி அடைந்ததும் வீட்டு பின்பக்கக் கதவை அடைந்து திறந்தாள். பார்த்த காட்சியி காரணமாக ஏற்பட்ட மகிழ்ச்சியில் தன்னையுமறியா ஒருமுறை விசிலடித்தாள். வீட்டிற்குப் பின்னால் அ நீச்சல் குளம் இருந்தது. வெளிர் நீலப் பளிங்குச் சதுர பதிக்கப்பட்டு, வெகு தூய்மையான நீரால் நிரப்ப டிருக்க, நீச்சல் குளத்தின் கரை விளிம்பைச் சுற்றி தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. தொட்டிகளில் வேறு வகை குரோட்டன் செடிகள் காத்திருந்தன. தண் செவ்வகத்திற்கு மேலே பந்தல் ஒன்று இடப்பட்டு, பந் நித்திய மல்லிக்கொடி மலைப்பாம்பு போல் புர புரண்டு கிடக்க, நித்தியமல்லி பூத்திருந்தது - அங்க வாசனை பரவியிருந்தது - அந்த இடம் முழுக்க சுவோ வுக்கு நிறைய ரசனை இருக்க வேண்டும்.

அப்போதே நீரில் குதிக்க வேண்டும் என்ற ஆசை கட்டுப்படுத்திக் கொண்டாள் மணிமேகலை. தலைநிமிர்ந்து மேலே பார்த்தாள். பந்தல் வழியே சூரியனின் கதிர்கள். சூரிய வெளிச்சம் படுகிறாற்போல் இருந்தாலும் நீச்சல் குளத்தைச் சுற்றிலும் பதினைந்தடி உயரத்திற்கு காம்பவுண்டு சுவர் எழுந்திருந்தது. பந்தலுக்கு வெளிச்சம் வரவேண்டும் என் பதற்காக, அந்தச் செவ்வகம் மட்டும் விடப்பட்டு, மற்ற இடங்களெல்லாம் சுத்தமாகக் காங்கிரீட்டினால் மறைக் கப்பட்டிருந்தது.

நிச்சயம் வெளியாள் யாருக்குமே தெரியாது. வெளியாள் கள் ஏன், வேலையாவிற்கு கூடத் தெரியப் போவதில்லை.

மணிமேகலை வெளியே வந்தாள். அவள் வெளியே வந்த நேரம், வேலிப்படலைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து தயங்கிய முத்துக்குமாரைக் கண்டாள்.

''வாங்க, முத்துக்குமார்'' என்றாள்.



முத்துக்குமார் அவளைப் பார்த்து அசந்து போய் நின்றுவிட்டான்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க?''

''உங்களை நான் மாடர்ன் டிரஸ்சில்தான் நிறைய பார்த்திருக்கேன். சேலையில் - அதுவும் நேர்ல பார்க்கறது இதான் முதல் தடவை.''

''எப்படி இருக்கேன்?'

''தெய்வக்கன்னி மாதிரி.''

''இது எனக்கு புளிச்சிப் போன வசனம். புதுசா ஏதாவது சொல்லியிருக்கக் கூடாதா? பரவாயில்லை. உள்ளே வாங்க.''

அவன் வீட்டுக்குள் நுழைந்ததும் தயங்கினான்.

''என்ன வேணும், முத்துக்குமார்?''

''பாத்ரூம்.''

''பின்னால இருக்கு'' என்றாள் - எதற்கு அவன் பாத்ரூம் பற்றி கேட்கிறான் என்பது புரியாமலேயே.

பாத்ரூமைக் காண்பித்தாள். அவன் குளியல் அறையி லிருந்து வெளிப்படும் வரை, நீச்சல் குளத்தின் டைவிங் போர்டுக்குச் செல்லும் படியின் மீது உட்கார்ந்து நகம் கடித்தாள்.

அவன் பாத்ரூமை விட்டு வெளிப்பட்டவுடன் அவனைப் பார்த்தவள், கல்யாண மேடைக்குச் செல்லும் புது மணப் பெண்ணைப் போல வெட்கப்பட்டாள்.

காரணம் -

முத்துக்குமார் இடுப்பில் ஒரே ஒரு அரை டிராயர் மட்டும் அணிந்திருந்தாள். மேலே சட்டையில்லை. அவன் மார்பு, அவன் தினம் தவறாமல் உடற்பயிற்சி செய்பவன் என்பதைச்

சொல்லுகிற மாதிரி திரண்டு இருந்தது. அதில் சுருண்டிருந்த முடிச் சுருள்கள் அவன் ஆண்மையைச் சொல்லுகிற மாதிரி இருந்தன. இறுக்கமான அரை டிராயர்களின் விளிம்பை மீறி அவன் துடைகளில் சுருண்டிருந்த முடிக்கற்றைகள் வேறு அவளது உள்ளத்தில் இன்றைக்கென்று ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது.

மணிமேகலை படப்பிடிப்பின் போது எத்தனையோ ஆண்களைப் பார்த்திருக்கிறாள். அவர்கள் துடை தெரிய உடைகளை அணிந்து கொண்டு அவளுடன் 'டுயட்' பாடி இருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஏற்படாத ஒரு கிளர்ச்சி இப்போது மட்டும் எப்படி ஏற்பட முடியும் என்று யோசித்துப் பார்த்தாள். ஊகூம். விடை கிடைக்கவில்லை.

''நான் இங்க வந்தப்ப நீங்க என்னைக் கேட்ட கேள்வியை, இப்ப நான் உங்ககிட்ட கேக்கட்டுமா மேடம்?''

''என்ன கேட்டேன்?''

''என்ன இப்படிப் பார்க்கறிங்க?''

மணிமேகலை தலைகுனிந்து கொண்டாள். அவள் பார்த்ததை, அவன் பார்த்துவிட்டான் என்பதை அறிந்ததும் அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது. என்ன சொல்லப் போகிறேன்?

''நீங்க என்னைப் பார்க்கலாம். நான் உங்களைப் பார்க்கக் கூடாதா?'' என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

முத்துக்குமார் ஒரு புன்னகையை வெளிப்படுத்தினான்.

நீச்சல் குளத்தை நெருங்கினான். ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்தான். விசிலடித்தான். ''ஒரு மாசத்துக்குள்ள நீங்க இந்த நீச்சல் குளத்தைக் கட்டி முடிச்சிருக்கீங்கன்னா, உண்மையாவே நீங்க பெரிய ஆளுங்க'' என்றான்.



மறுதோ கிளை நூலகம்
வில்லிவாக்கம்,
சென்னை-49.

''நான் கட்டலை.''

''பின்ன?''

''மேஸ்திரியும், கொத்தனாரும்தான்.''

''அறுவை ஜோக்... அறுவை ஜோக்.''

''எனது தபால் வந்து சேர்ந்ததா?''

''அதுக்காகத்தான் எனது முகவரியைக் கேட்டீங்களா?''

''ஆமா. நான் கார் அனுப்பி உங்களை கூட்டிவரச் சொல்லியிருப்பேன். ஆனால், நாலு பேருக்கு அனாவசியமா தெரியவரும். அதனாலத்தான் தபால் போட்டேன்.''

''ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?''

''என்ன?''

54135/607525 ரூ. 70/-

''நீங்க போட்ட தபால் என்னை வந்து சேர்ந்தவுடனே எனக்கு மயக்கமே வந்துடுச்சிங்க.''

''ஏன், ஏதும் பிரச்சினையா?''

''ஊகூம். அதெல்லாம் ஒண்ணுமில்ல. நீங்க ரொம்பப் பெரிய இடம். என்கிட்ட நீச்சல் கத்துக்கப் போறேன்னு சொன்னதே என்னைச் சும்மா அந்த நேரத்துக்கு சந்தோசப்படுத்தத்தான்னு நான் நினைச்சிட்டிருந்தேன். என்னை நீங்க கூப்பிட்டு ஒரு வேளை டிபன் போட்டு, கையில அஞ்சாயிரம் கொடுத்ததே பெரிசுன்னு நினைச்சிட்டிருந்தேன். நீங்க, உண்மையாகவே நீச்சல் குளம் கட்டி என்னை கடிதம் போட்டுக் கூப்பிட்டிருக்கீங்கங்கிறதை நினைக்கறப்ப...''

''சொல்லுங்க. சொல்ல வந்ததை சொல்லாம விடக் கூடாது.''

''நான் இவ்வளவு பெரிய மரியாதைக்குத் தகுதியானவன் தானான்னு நினைச்சிப் பார்த்தேன். மயக்கமே வந்திரிச்சி.''

''ப்பூ. அவ்வளவுதானா?''

''அவ்வளவுதானான்னா? இன்னும் என்னால நம்பவே முடியலைங்க. நீங்க எவ்வளவு பெரிய நடிகை. நீங்க போய் என்னைக் கூப்பிட்டனுப்பி...''

''முத்துக்குமார், தயவு செய்து நான் பெரிய நடிகை என்கிறதை மறந்துடுங்க. நான் இந்த இடத்துல சாதாரண மணிமேகலை. உங்ககிட்ட நீச்சல் கத்துக்கணுங்க. ஆசையோட உங்களை வரவழைச்சவள். நீங்க எல்லாருக்கும் எப்படி நீந்தக் கத்துக் கொடுப்பீங்களோ, அப்படியே எனக்கும் நீந்தக் கத்துக் கொடுங்க. என்ன... சரியா?''

''சரி'' என்றான் முத்துக்குமார். ''டியூப் வாங்கி வைச்சிருக்கீங்களா?''

''டியூபா?'' என்று வியப்புடன் கேட்டாள் மணிமேகலை.

''ஆமா. கார் டியூபுங்க. இரண்டு டியூபாவது இருக்கணுமே.''

''அது இல்லன்னா நீச்சல் கத்துக்க முடியாதா? சின்ன வயசுல எங்க ஊர்ப் பக்கத்துக் குளத்துல நீந்தக் கத்துக்கிறவங்க யாரும் டியூப் வைச்சிக் கத்துக்கிட்டதில்லையே.''

''டியூப் இல்லேன்னாலும் கத்துக்கலாம்.''

''பின்ன?''

''உம்... சரி. நீச்சல் உடை கூடவா இல்ல?''

''நீச்சல் டிரஸ்சா? அய்யய்யோ. நான் மாட்டேன். படத்துக்காகக் கூட இதுவரைக்கும் நான் நீச்சல் டிரஸ் போட்டதில்ல. கத்துக்கிறதுக்காகப் போட்டுக்கணுமா? சேலையே இருக்கட்டுமே. இல்லன்னா வீட்டில் பாண்ட் இருக்கு. சட்டை இருக்கு. போட்டுக்கவா?''

வேண்டாம். பரவாயில்லை. நீச்சல் உடை இருந்தால் தான் வசதி. அது இல்லன்னா சேலையே பரவாயில்ல. நீங்கதான் சேலையை நல்லா இறுக்கமாக் கட்டிக்கிட்டு



இருக்கீங்களே'' என்றவன் அவள் சற்றும் எதிர்பாராத சமயத்தில் அவளைத் தண்ணீரில் பிடித்துத் தள்ளிவிட்டான்.

கரைகள் மீறி தண்ணீர் வெளியே வந்தது.

'ஓ' என்று உற்சாகமான பயக்குரலை வெளிப்படுத்திக் கொண்டு மணிமேகலை தண்ணீரில் மல்லாக்க விழுந்தாள்.

முத்துக்குமார் படிகளில் ஏறி டைவிங் போர்டின் மீது நின்றான். அங்கிருந்து மணிமேகலையைப் பார்த்தான்.

மணிமேகலை இரண்டு முறை தண்ணீரில் மூழ்கி எழுந்தவுடன், அவன் இரண்டு கைகளையும் முன்னோக்கி வைத்து, புறா இறங்குவது போல தண்ணீரில் பாய்ந்தான். இரண்டே எட்டில் மணிமேகலையை அடைந்தான். அவளை நின்ற வண்ணம் தண்ணீரில் தூக்கினான்.

''குப்புறப் படுங்க'' என்று இரண்டு கைகளையும் நீட்டினான்.

மணிமேகலை குப்புறப் படுத்தாள். அவளுடைய அடி வயிறு அவனது மணிக்கட்டை உரசியது. அவளது நெஞ்சு அவனது இன்னொரு கையை மின்சாரம் போல் தாக்கியது.

''நீச்சல் அடிக்கிறவங்களைப் பாத்து இருக்கீங்களா, மணி?''

''ம்...''

''அதே மாதிரி கையையும், காலையும் அடிச்சிக்குங்க... கமான்... சீக்கிரம்.''

மணிமேகலை தண்ணீரில் இரண்டு கைகளாலும், கால்களாலும் மாறி மாறி அறையத் தொடங்கினாள்.

''அப்படித்தான்... அப்படித்தான்... இன்னுங் கொஞ்சம் வேகமா... இன்னுங் கொஞ்சம் வேகமா...''

முத்துகுமார், அவளுடைய முழு உடலும் அவன் மீது படுகிற உணர்வே இன்றி ஒரு குழந்தைக்குச் சொல்லித் தருகிற மாதிரி சொல்லிக் கொடுக்கத் தொடங்கினான்.

ஒன்பது மணிக்கு இருவரும் கரையேறினார்கள். துவட்டிக் கொண்டார்கள். மணிமேகலை உள்ளறை சென்று நிமிடத்தில் வேறு சேலை ஒன்றைக் கட்டிக் கொண்டு வந்தாள்.

முத்துக்குமார் பாத்ரூமுக்குப் போய் உடை மாற்றிக் கொண்டு வருவதற்குள் குளத்தை ஒட்டி இரண்டு பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டது. நடுவில் ஒரு டீப்பாய். ஒரு நாற்காலியில் அவள் உட்கார்ந்திருந்தாள். நீச்சலின் காரணமாக களைத்த உடல் தளர்ந்திருந்தது தெரிந்தது. அவளது கூந்தலின் முனையில் இருந்து நீர் துளித் துளியாய் திரண்டு திரண்டு, அவள் சேலையை சொட்டுச் சொட்டாய் நனைத்துக் கொண்டிருக்க, சன்னமான சேலை நனைந்தது. சேலை உடலோடு ஒட்டியிருந்ததால் அவள் வயிற்றுப் பகுதியைக் காட்டியது.

முத்துக்குமார் தன் கண்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

''நீங்க இங்க தனியாவா இருக்கீங்க?''

''ஏன்?''

''இந்த மாதிரி தண்ணியில் குளிச்சாப் பசிக்குங்க. நான் வெளிய போய் ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா?''

''வேணாம்! நீந்திக் குளிச்சாப் பசிக்கும்னு எனக்குத் தெரியாதா? நான் ஏற்பாடு பண்ணிவிட்டேன்.''

''என்ன ஏற்பாடு?''

''அங்க பாருங்க'' என்று முத்துக்குமாருக்குப் பின்னால், விரலைக் காட்ட-



அவன் திரும்பினான்.

செங்கம்மாவும், வேலையாவும் ஆளுக்கொரு தட்டுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

தட்டில் வெந்த புட்டிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது. தட்டில் வைக்கப்பட்டிருந்த கிண்ணத்தில் கொண்டக்கடலைக் குழம்பு. அதிலிருந்தும் ஆவி பறந்து கொண்டிருந்தது.

''இங்க உங்களைத் தவிர வேற யாரும் இல்லேன்னு சொன்னீங்க.'' வேலையாவையும் செங்கம்மாவையும் பார்த்துக் கொண்டே கேட்டான், முத்துக்குமார்.

''வேலையா எனக்கு அப்பா மாதிரி. செங்கம்மா எனக்கு அம்மா மாதிரி. நான் ஓய்வு கிடைக்கறப்பல்லாம் இந்த வீட்டுக்கு வந்துடுவேன். யாரும் என்னைத் தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு, நான் இங்கே இருக்கேன்னு யார்கிட்டயுமே சொல்லமாட்டாங்க. எனக்கு இந்த இடத்துக்கு வந்தாத்தான் ஒரு நிம்மதி கிடைக்குது. வேலையாவும், செங்கம்மாவுந்தான் இங்கே எனனைச் சீராட்டறவங்க. அவங்க கையால சமைச்சிப் போடற சாப்பாட்டைத்தான் நான் சாப்பிடுவேன். இங்க வந்தால் மட்டும் எனக்கு சாப்பாட்டில் கட்டுப்பாடு கிடையாது...''

''புட்டு ரொம்ப நல்லா இருக்குங்க.''

''செங்கம்மா கிட்டச் சொல்லுங்க.''

''தம்பி யாரும்மா?''

''நான் நீச்சல் கத்துக்கப் போறேன்னு சொல்லலை, செங்கம்மா? இவர்தான் கத்துக் கொடுக்கிறவரு.''

செங்கம்மா முத்துக்குமாரை அளவெடுப்பது போல் ஒரு பார்வை பார்த்தாள். திருப்தியடைந்தவள் போல முகத்தை வைத்துக் கொண்டு, ''மத்தியானச் சாப்பாட்டை எப்பக் கொண்டு வரட்டும்மா?'' என்று கேட்டாள்.

''முத்துக்குமார்... நீங்க சைவமா? அசைவமா?''

''அசைவம்.''

''நல்லவேளை. கேக்க மறந்துட்டேனேன்னு நினைச்சிட்டிருந்தேன். சரியா ஒரு மணிக்கு அனுப்பிடு, செங்கம்மா.''

''சரிம்மா'' என்று இருவரும் விலகினார்கள்.

டிபன் முடித்துக் கொண்டு குளிர்பதனப் பெட்டியில் வைத்திருந்த இளநீரை தம்ளரில் ஊற்றித் தந்தாள் மணிமேகலை.

''என்னங்க இது?''

''இளநீர். குடிப்பீங்க, இல்ல?''

''குடிப்பேன். ஆனால், பிரிட்ஜ்ல வைச்சி இப்பத்தான் பாக்கறேன்....''

''சரி மறுபடியும் கிளாஸ் எப்ப?''

''சாப்பிட்ட உடனே நீந்தக்கூடாதுங்க. கொஞ்ச நேரம் போகட்டும். விட்டால், நீங்க இன்னைக்குள்ள நீச்சலைக் கத்துக்கிட்டு அடுத்த வாரம் எனக்கு வேலையே இல்லாமப் பண்ணிடுவீங்க போல இருக்கே.''

சிரித்தாள்.

சிரித்தான்.

சிரித்தார்கள்.

அன்றைக்கு அதற்குப் பிறகு மணிமேகலை நீச்சல் குளத்தின் பக்கமே போகவில்லை. நீண்ட நாளாகப் பிரிந்திருந்த ஒரு நண்பனைத் திடீரெனப் பார்த்து விட்ட மாதிரி, அவள் இதுவரை யாருடனும் பேசாததையெல்லாம் பேசித் தீர்த்தாள்.

முத்துக்குமார் மவுனமாக அவள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தான். அவளை ஒருவன் கைவிட்ட உண்மையை



அவள் சொன்னபோது அவன் முகத்தின் தசைகள் சுருங்கி விரிந்தன.

''உங்களையா?''

''என்னது என்னையா?'' என்று திகைப்புடன் கேட்டாள் மணிமேகலை.

''உங்களை ஒருத்தன் லவ் பண்ணிக் கைவிட்டானா?''

''ஆமா. கருப்பண்ணன்னு பேரு. கம்பத்தில நான் பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டிருந்தப்ப என்னைச் சுத்திச் சுத்தி வந்தான். நீ காதலிக்கிறவனைக் கல்யாணம் பண்ணிக்கன்னு ஒரு பழமொழி இருக்கு. தெரியுமா உங்களுக்கு?''

''ம்...''

''அதனால கருப்பண்ணனைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு தீர்மானிச்சேன். எப்ப? என்னோட பதினாலாவது வயசுல. வீட்ல ஒரு வேளைச் சோறுதான் கிடைக்கும். அதனால அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா மூணு வேளையும் சாப்பிடலாங்கிற ஆசைதான்.''

''அவன் என்ன வேலையில் இருந்தான்?''

''யாருக்குத் தெரியும். நல்லா டிரஸ் பண்ணுவான். பள்ளிக்கூடத்துக்குப் போற வழியில் குளத்தங்கரையில நின்னுட்டிருப்பான். என்னைப் பாத்தவுடனே ஒரு தடவை தலையை சீவிப்பான். என் பின்னாலேயே வருவான். அப்படிப் பழக்கமாயிடிச்சி. அதை லவ்வுன்னு நான் நினைச்சிக்கிட்டேன். இரண்டு பேரும் சென்னைக்கு போயிடலாம்னு சொன்னான். சென்னையில் ஏதோ பெரிய வேலையில இருக்கிறதாச் சொன்னான். நம்பி வீட்டு வாசப்படி தாண்டிவிட்டேன். இங்க வந்தப்புறந்தான் அவன் என்னை வச்சி சம்பாதிக்கப் பாத்தான்னு தெரிஞ்சது. உதறி விட்டேன்.''

''இப்ப எங்க அவன்?''

''யாருக்குத் தெரியும்? நான் தனியா முன்னுக்கு வர ணும்னு நினைச்சேன். வந்துவிட்டேன். எங்க வீட்டை கேட்டுக்கிட்டு எவனாவது கருப்பண்ணன்னு பேரு சொல்லிக்கிட்டு வந்தாக்கூட அவனை அடிச்சி விரட்ட ணும்னுதான் வாட்ச்மேன் கிட்டச் சொல்லியிருக்கேன். நீங்க எப்பவாவது வந்தா, கருப்பண்ணன்னு சொல் லிடாதீங்க.'' முத்துக் குவியலைக் கொட்டிவிட்ட மாதிரி அவள் சிரித்ததைப் பார்த்து, முத்துக்குமார் சொன்னான். ''நான் உங்களைப் பத்தி இப்ப என்ன நினைக்கறேன்னு சொல்லட்டுமா?''

''சொல்லுங்க'' என்றாள் ஆர்வமாக.

''கோவிச்சுக்கக் கூடாது!''

''இல்ல... சொல்லுங்க...''

''வானத்திலேர்ந்து இறங்கி வந்த தேவதை மாதிரி இருக்கீங்க.''



6

''வானத்திலேர்ந்து இறங்கி வந்த தேவதை மாதிரி இருக்கீங்க.''

''கட்... கட்... என்ன மணி... டய லாக்கை மாத்திட்டியே... இன்னிக்கு என்ன ஆச்சு உனக்கு? எப்பவும் இவ்வளவு டேக் வாங்காதே...''

''சாரி கேசவ். இந்தத் தடவை ஒழுங்கா பண்ணிடறேன். வசனம் என்ன?''

''அதே மறந்து போச்சா? வழி தவறி வந்த பட்டாம்பூச்சி மாதிரி இருக்கே... எங்க சொல்லு... நீ சொல்றது ஒரு குழந்தைகிட்ட... அது கதை பிரகாரம் உன் குழந்தைதான்.



ஆனால், அது உன் குழந்தைன்னு உனக்கே தெரியாது. எதிர்பாராமல், நீ உன் குழந்தையைப் பாத்திருக்கே. அதோட கண்ணு படபடன்னு துடிச்சிக்கிறதைப் பாத்துட்டு நீ இந்த வசனம் பேசுறே... இன்னொருதரம் சொல்றேன்... கேட்டுக்க... வழி தவறி வந்த பட்டாம்பூச்சி மாதிரி இருக்கே. மெதுவா சொல்லணும்... ஓ.கே..?''

''ரெடி சார். குழந்தை எங்கே?''

''காமிராதான் குழந்தை. குழந்தை இந்நேரம் நம்ப கே.வி படத்தில் நடிச்சிட்டிருக்கும்.''

''ஓ.கே. நான் சொல்றேன் சார்.''

மணிமேகலை காமிராவைப் பார்த்தாள். எனக்கென்று ஒரு குழந்தை பிறக்குமா என்ன? எப்போது? யார் அதற்குத் தகப்பன்? கடவுளே! நான் ஏன் இந்தத் துறைக்கு வந்தேன்? ஏன் இந்த மாய வலையில் சிக்கிக் கொண்டேன்? எனக்குப் பிறக்கும் ஒரு குழந்தை வேண்டும்.

மணிமேகலைக்கு அந்தக் காமிராவே அவள் குழந்தை யாகத் தோன்றியது. மூன்று மாதங்களில் அடிவயிற்றில் கிச்சுகிச்சு மூட்டி, ஆறு மாதங்களில் நகர்ந்து, ஒன்பது மாதத்தில் உதைத்து, தான் பெற்ற குழந்தையாக அந்தக் காமிராவைப் பார்த்தாள். கண்களில் நீர் மல்க காமிராவை நோக்கினாள்.

''என்ன பாப்பா... வழி தவறி வந்த பட்டாம்பூச்சி மாதிரி இருக்கே'' என்று நாத்தழதழக்கக் கேட்டு, கைகள் இரண்டையும் காமிராவை நோக்கி நீட்டினாள்.

''கட்... கட்... வெரிகுட், மணி. இப்பத்தான் நீ தெய்வக் கன்னி மணி. ச்சே... என்னா நடிப்பு! இந்தப் படத்துக்காக நீ ஊர்வசி பட்டம் வாங்கப் போறே. பாத்துட்டே இரு. என் வாக்குப் பலிக்கப் போவுதா இல்லியான்னு...''



# 7

''இன்னிக்கு என்ன டிபன்?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்த முத்துக்குமார் வெளிர்நீல பாண்ட் அணிந்திருந்தான். வெளிர்நீல சட்டை அணிந்திருந்தான். கேள்வி கேட்டது-அடுத்த ஞாயிறு அன்று.

''உங்களுக்கு என்ன பிடிக்கும்?''

''நான் எது கேட்டாதும் கிடைக்குமா?''

''கேட்டுப் பாருங்களேன்.''

''எனக்கு ரொம்ப நாளா கேழ்வரகு கூழ் சாப்பிடணும்னு ஆசைங்க.''

''அவ்ளவ்தானே, செய்திட்டாப் போச்சு.''

''நீங்க அவ்வளதானேன்னு சொல்றதே தனி அழகுங்க.''

''ம்?'' என்று கொஞ்சலாய் அவனைப் பார்த்து விழிகளை உருட்டினாள் மணிமேகலை.

''ஏங்க நான் ஏதாவது தப்பாச் சொல்லிவிட்டேனா?''

''இல்ல. எதுவுமே இல்ல. எனக்கு ஜோசியம் தெரிஞ்சிருக்குதேன்னு நினைச்சித்தான் உங்களை அப்படி ஆச்சரியமா பார்த்தேன்.''

''என்ன ஜோசியம்?''

''இன்னிக்குக் காலையில டிபனுக்கு நான் கேழ்வரகு கூழ் தான் சொல்லியிருக்கேன். உங்களுக்கு ஒண்ணு தெரியுமா குமார். எனக்கு நகர வாழ்க்கை அலுத்துப் போயிருச்சி. ஆம்லெட், ரொட்டி, போர்க் ஸ்பூன் எல்லாம் இன்னிக்கு ஒரு நாளைக்காவது மறந்துடணும்னுதான் நான் இங்க வந்து எனக்குப் புடிச்ச மாதிரி சொல்றேன். நான் சின்ன வயசில சாப்பிட்டதையெல்லாம் மறுபடியும் செய்யச் சொல்லி



சாப்பிடறேன். எனக்குப் புடிச்சதே உங்களுக்கும் புடிச்சிருக்குன்னு நினைக்கிறப்ப ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு.''

''என்ன மாதிரி பெண் இவள்?'' என்னும் பார்வை ஒன்றைப் பார்த்தான் முத்துக்குமார்.

''என்ன பார்க்கறீங்க. சீக்கிரம் டிரஸ் மாத்திட்டு வாங்க'' என்றாள்.

அவன் பாத்ரூமுக்குள் நுழைந்து, வெளிப்பட்டபோது நீச்சல் குளத்தின் கரையோரம் நின்றிருந்த அவளைப் பார்த்தான். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். மயங்கி விழாத குறை.

மணிமேகலை டு-பீஸ் நீச்சல் உடையில் நின்றிருந்தாள். அவன் பார்ப்பதைப் பார்த்தவுடன், தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''சேலை ரொம்ப இடைஞ்சலா இருந்தது'' என்றாள் மெல்ல முனகும் குரலில்.

''எனக்கு இன்னிக்கு நீச்சல் கத்துக் கொடுக்க முடியும்னு தோணலைங்க.''

''ஏன் குமார்?''

''உங்க டிரஸ். போன வாரம் நீங்க தேவதை மாதிரி இருக்கீங்கன்னு சொன்னதை மறந்துடுங்க.''

''வேற எப்படி இருக்கேன்?''

என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? தவித்தான் அவன். அவள் மார்புகள் இரண்டும் முழுதாக மூடப்பட்டிருந்தாலும், அவ்வளவு அண்மையில் நீச்சல் உடையில் அவளைப் பார்த்திராததால் மயக்கின. அடிவயிறு அழுந்தி இருந்தது. தொடைகளில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தெளித்திருந்த குளத்து நீர் முத்துக்கள், அவற்றை வண்ணமயமாகக்

காட்டிய கதிரவனின் கதிர்கள். தலைமுடியைச் சின்னதாக உருட்டி ஒரு நைலான் வலை மாட்டியிருந்தாள். நீண்ட கைகள் முழங்கால் வரை நீண்டு, ஏதோ ஓவியத்திற்கு மாடலாக நிற்பவளைப் போல, இல்லை இல்லை ஏதோ ஒரு சினிமாவின் சூட்டிங்கிற்கு தயாராக நிற்பவளைப் போல. இல்லை.... இல்லை....

''எனக்குச் சொல்லத் தெரியலைங்க'' என்றான்.

''வாங்க. எனக்குப் போன வாரம் கத்துக்கிட்டது மறந்துடும் போல இருக்கு.''

அன்றைக்கு அவளுக்கு நீச்சல் பழக்குவதற்குள் முத்துக் குமார் ரொம்பத்தான் தடுமாறிப் போனான். அவனுடைய வாழ்விலா இப்படியெல்லாம் நடக்கிறது என்று தன்னையே நம்ப முடியாமல் கிள்ளிப் பார்த்துக் கொண்டான்.

மேலே கரையேறி உடை மாற்றி அவள் சேலையைச் சுற்றிக் கொண்டு அமர்ந்த பிறகுதான் அவனால் அவளை நிமிர்ந்தே பார்க்க முடிந்தது.

செங்கம்மா சுடச்சுட கேழ்வரகுக் கூழ் கொண்டு வந்தாள். தொட்டுக் கொள்ள காரமாய் மாங்காய் ஊறுகாய். ஏதோ ஒரு குழம்பு.

குழம்பை அதன் சட்டி மணத்தோடு, கேழ்வரகுக் கூழுடன் உண்டபோது பக்கத்திலிருந்து ஏதாவது ஏற்றப் பாட்டு கேட்டிருந்தால் கூட, முத்துக்குமார் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டான்.

சாப்பிட்டு முடித்தவுடன், அவள் சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள். நாற்காலி மெல்ல மெல்ல முன்னும் பின்னுமாக ஆடியது.

''நான் ஒண்ணு கேக்கட்டுமாங்க.''

''என்ன?'' என்றாள் மயக்கமான குரலில்.



''போன வாரம் நீச்சல் உடை போடச் சொன்ன போது சூட்டிங்குக்குக் கூட போட்டதில்லை என்று சொன்னீங்க தானே?''

''ம்.''

''பின்னே எப்படி இந்த வாரம் போட்டீங்க?''

''நான் என்ன எல்லார் முன்னாடியுமா போட்டேன். என் குருவுக்கு முன்னாலதானே போட்டேன்.''

''குரு வயசுக்கு வந்த ஆம்பிளைங்க.''

''இருக்கட்டும். அதனால என்ன? கண்ணியமான ஆம்பிளைன்னு எனக்குத் தெரியும்.''

''நீங்க வயசுக்கு வந்த பொண்ணுங்க.''

''பேசறதே நல்லா இல்ல குமார்.''

''எப்படிப் பேசணுங்கிறீங்க மேடம்?''

''முதல்ல இந்த மேடத்தைத் தூக்கிக் குப்பையில் போடுங்க.''

''போட்டாச்சு.''

''அப்புறம் ஒரு ஆசிரியர் தன் மாணவியை எப்படிக் கூப்பிடுவாரு?''

''எப்படி?'' என்று புரியாமல் கேட்டான் முத்துக்குமார்.

''வாங்க, போங்கன்னா?''

''இல்ல. ஆனால் ஆசிரியர் யாரு மாணவி யாருன்னு...''

''ஆசிரியர் யாரு. மாணவி யாரு என்ற பேச்சே வேணாம். ஆசிரியர் மாணவியை எப்படிக் கூப்பிடுவாரு?''

''வா, போன்னு.''

''கூப்பிடுங்க.''

''வா, போ.''

''அப்படித்தான். இனிமே நீங்க என்னை வாங்க, போங்கன்னு சொன்னீங்கன்னா எனக்குக் கோபம் வரும்.''

''சரி, வா, போன்னு சொன்னா மாத்திரம் போதுமா? உன் பேரை எனக்குப் பிடிச்ச மாதிரி கூப்பிடட்டுமா?''

''எப்படி?''

''மேகலா.''

''இன்னொரு தடவை சொல்லுங்க.''

''மே...க...லா.''

மணிமேகலை கைகொட்டி ரசித்தாள்.

''நீ கூட என்னை வா, போன்னே கூப்பிடு மேகலா.''

''ஊகூம்.''

''ஏன்?''

''ஆசிரியரை மாணவி அப்படிக் கூப்பிடக் கூடாது. தப்பு!'' என்றவள் முத்துக்குமாரைப் பார்த்துக் கண்சிமிட்டினாள்.

''இப்ப நீச்சல் உண்டா இல்லையா?''

''இல்லைங்க. பேசிட்டே இருக்கலாம். இன்னிக்கு நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன். ''ஸ்டார்ட்'' இல்லை. ''கட்'' இல்லை. நடிப்பு இல்லை. நான் வாழற வாழ்க்கையில் இதுக்குத்தான் ரொம்ப அர்த்தம் இருக்குங்கிற மாதிரி நான் உணர்கிறேன்.''

பொழுது போனதே தெரியாமல் அவர்கள் பேசினார்கள். இந்த விஷயம்தான் என்று இல்லாமல் உலகத்தில் இருக்கும் அத்தனை விஷயங்களையும் பேசினார்கள். அன்று மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் முத்துக்குமார் புறப்படத் தயாரான போது, மணிமேகலை, ''ஒரு நிமிடம்'' என்றாள்.



''என்ன?''

''நான் ஒண்ணு சொல்வேன்.''

''இன்னிக்கு முழுக்க நீ நிறைய சொல்லியிருக்கே மேகலா.''

''இது ரொம்ப பர்சனாலான விஷயம்.''

''சொல்லு.''

''கிட்ட வாங்க.''

போனான்.

மணிமேகலை சட்டென்று அவன் கன்னத்தில் தன் உதடுகளைப் பதித்தாள்.

''ஐ லவ் யூ குமார்.''

முத்துக்குமார் ஒரே ஒரு வினாடிதான் நின்றான். சரேலென்று திரும்பினான். அவளிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அங்கிருந்து வெளியேறினான்.

''குமார்'' என்றாள் மணிமேகலை நெஞ்சடைக்க.

முத்துக்குமார் திரும்பவே இல்லை.



## 8

அடுத்த ஞாயிறு வரை மணிமேகலை காத்திருந்தாள் - பொறுமையாக. கடமையில் தன்னை மறந்தாள். காலை எழுந்தவுடன் எந்திரம் போல் குளித்து, மேக்கப் போட்டு, சேது சொன்ன ஸ்டூடியோவிற்கு காரில் போய், இயக்குநர் சொல்லிக் கொடுத்த காட்சியை நடித்துக் காட்டி, வீடு திரும்பி, முத்துக்குமாரை மறப்பதற்காகவே தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு தூங்கிப் போனாள்.

அடுத்த ஞாயிறு வந்தது.

முத்துக்குமார் வரவில்லை. ஏன் வரவில்லை? என்னை பிடிக்கவில்லையா? நான் அழகாக இல்லையா? எவ்வளவு பேருக்கு நான் தெய்வக்கன்னி. உனக்கு நான் ஒரு பெண்ணாகக் கூடத் தெரியவில்லையா குமார்?

அவளுடைய திருவான்மியூர் வீட்டில் நீச்சல் உடை கேட்பாரற்று அறையின் ஒரு மூலையில் கிடந்தது. அவள் அன்று முழுக்க ஒன்றும் சாப்பிடவில்லை. வேலையாவும், செங்கம்மாவும் மாறி மாறி வந்து கேட்ட போது கூட மறுத்துவிட்டுக் கிடந்தாள் கட்டிலிலேயே.

''அந்தத் தம்பி வரலியாம்மா?''

''தம்பியும் வரலை, கம்பியும் வரலை, என்னைத் தொந்தரவு செய்யாதே செங்கம்மா.''

திங்கள் கேசவகீர்த்தியின் படத்திற்கு நடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. அங்கே போனால் முத்துக்குமாரைப் பார்க்கலாம் என்று நம்பிக் கொண்டு போனாள்.

ஊகூம். அவன் வரவில்லை.

யாரைக் கேட்கலாம். தெய்வக்கன்னி மணிமேகலை ஒரு சாதாரண முத்துக்குமாரைப் பற்றிக் கேட்டால் தப்பாகப் போய்விடும் என்பதற்காகவே யாரையும் கேட்காமல் படப்பிடிப்பிலிருந்து திரும்பி வந்து தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

அறை மூலையில் இருந்த இன்டர்காமையும், இன்னொரு மூலையில் இருந்த அவளது தனிப்பட்ட தொலைபேசியையும் பார்த்தாள். முத்துக்குமார் இன்றைக்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளப் போகிறான் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். தொலைபேசி அழைக்கும் என்ற நம்பிக்கையில் அதையே பார்த்துக் கொண்டு



காத்திருந்தாள். தானாக உறங்கிப் போகும் வரை அவளை தொலைபேசி அழைக்கவில்லை.

மறுநாள் முதல் அவளுக்குத் திருச்சிக்குப் பக்கத்தில் இருந்த ஒரு கிராமத்தில் தொடர்ந்து மூன்று நாள் படப்பிடிப்பு. அதை ரத்து செய்துவிடலாம் என்று கடைசிவரை நினைத்துக் கொண்டிருந்து விட்டு, அது முடியாது என்று தோன்றவே புறப்பட்டுப் போனாள்.

வெள்ளி.

காலை ஊருக்குத் திரும்பி வந்தவுடன் சுலோசனாவிடம் முதல் வேலையாக அவளுக்கு ஏதாவது போன் வந்ததா என்று கேட்டாள்.

வரவில்லை என்று தெரிந்ததும் மனது ஒடிந்து போனாள்.

அன்றைய படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு, அறையில் போய் பூனை போல் சுருண்டு கொண்டாள். அறைக்குள்ளேயே காலை உணவைக் கொண்டு வரச் சொல்லி, சாப்பிட்டதாகப் பாவனை செய்துவிட்டு, வேலைக்காரி பதறப் பதற தட்டிலேயே கைகழுவிக் கொண்டாள். ஒரு ஆங்கில நாவலைக் கையில் எடுத்துக் கொண்டு படுக்கையில் சரிந்தாள். தொலைபேசி அழைத்தது. அவளுடைய, அந்தரங்க தொலைபேசி, அதன் எண் முத்துக்குமாருக்குத் தெரியும். அவன்தான்... அவன்தான்...

படுக்கையிலிருந்து பாய்ந்து சென்று தொலைபேசியின் ரிசீவரை எடுத்தாள்.

''அலோ'' என்றாள் மென்மையாக.

மறுமுனையில் இருந்து பதில் கேட்கவில்லை.

''அலோ... அலோ...''

யாரோ பெருமூச்சுவிடும் சத்தம் கேட்டது. அவ்வளவு தான். மறுமுனையில் தொலைபேசி வைக்கப்பட்டு விட்டதன் அறிகுறியாக 'கிளிக் டக்' என்ற ஒலி கேட்டது.

அவன்தான். முத்துக்குமார்தான். நான் எப்படி இவ்வளவு சீக்கிரம் முத்துக்குமார் பைத்தியமாக மாறிப் போனேன்?

அவள் கட்டிலில் போய்ச் சரிந்து கொண்டு மறுபடி தொலைபேசி அழைக்கப் போகிறதென்று காத்திருந்தாள். வினாடிகள்...நிமிடங்கள்... மணிகள்... அன்றைக்கு முழுக்கத் தொலைபேசி அவளை அழைக்கவேயில்லை.

எப்போது உறங்கிப் போனாள்? அவளுக்கே தெரியாமல் உறங்கியிருந்தாள்.

காலையில் எழுந்த போது தொலைபேசி அலறிக் கொண்டிருந்தது-பாய்ந்தாள். எடுத்தாள்.

''அலோ...''

''சேட் பன்னாலால் வீடுங்களா?''

ச்சே! தொலைபேசி ''காவ்'' என்று வலி தாங்காமல் கதறுகிற மாதிரி, அவள் ரிசீவரை வைத்தாள்.

சிறிது நேரத்தில் மறுபடி போன்.

எடுத்தாள். ''அலோ'' என்றாள்.

''வச்சிடாதேங்கோ மேம்சாகப். அது சேட் பன்னாலால் வீடுதானேங்கோ? நம்பிள் தூத்துக்குடியில் இருந்து பேசறான்.''

''தூத்துக்குடியாவது, சாத்துக்குடியாவது! வைய்யா போனை'' என்று அவள் கத்தியது நிச்சயம் மறுமுனையில் இருந்தவன் காதில் கொதிக்க வைத்த ஈயமாக பாய்ந்திருக்கும்.

அவளுடைய அறைக் கதவைத் திறந்து சுலோசனா எட்டிப் பார்த்தாள்.

''உங்களுக்கு என்னம்மா கஷ்டம்?'' என்று தொடங்கியவளை முறைத்தாள்.



''வெளியே போ...''

''அம்மா நான் சொல்றதைக் கொஞ்சம்...''

''வெளிய போன்னா, போயிடு.''

''சேது காத்திட்டிருக்காரும்மா. இன்னிக்கு விஜயாவில் முக்கியமான சூட்டிங்...''

சூட்டிங்கெல்லாம் ரத்து செய்யச் சொல்லு. என்னைத் தனியா விடுங்க. நிம்மதியா இருக்க விடுங்க.''

சுலோசனா வெளியில் போகவில்லை.

''முத்துக்குமார் விவகாரம்தானம்மா உங்க மனசை இப்படி அல்லாட வைக்குது?''

''வேணாம் சுலோசனா. நீ பேசாதே.''

''சொல்றதைக் கேளுங்கம்மா. இந்த ஆம்பிளைங்களே இப்படித்தான். நானும் ஒருத்தனை நம்பி ஏமாந்து போனவள்தான். அதனால்தான் கல்யாணமும் வேணாம், கருமாதியும் வேணாம்னு உங்க கூடயே இருந்து விட்டேன். அவனை மறந்துடுங்கம்மா. உங்களுக்கு ஆம்பிளைதான் வேணும்னா...''

''சுலோசனா...''

மணிமேகலைக்கு எங்கிருந்து அந்த ஆவேசம் வந்ததென்று தெரியவில்லை. பாய்ந்தாள். சுலோசனாவின் கன்னத்தில் நான்கு விரல்களும் பதிகிற மாதிரி அறைந்தாள்.

சுலோசனா திகைத்துப் போய்ப் பார்த்தாள்.

''அடிங்கம்மா. என்னை அடிக்கிறதுக்கு உங்களுக்கில்லாத உரிமையா? அடியுங்க. ஆனால், நான் சொல்றதைக் கொஞ்சம் கேட்டுக்கோங்க. இரண்டு வாரமா நீங்க சரியில்லை. இரண்டு வாரமா நீங்க அந்த முத்துக்குமார் பத்தி எங்கிட்டப் பேசலை.''

''அய்யோ... அய்யோ'' என்று முகத்தில் அறைந்து கொண்டாள் மணிமேகலை. ''போயிடு சுலோசனா... என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடு.''

சுலோசனா போய்விட்டாள். அவளுடன் அறைக்கதவும் மூடிக் கொண்டது. இரண்டு நிமிடங்களில் கதவிடுக்கின் வழியாக இரண்டு செய்தித்தாள்கள் அறைக்குள் நுழைந்தன. மணிமேகலை அவற்றைக் கையில் எடுத்தாள்.

மணிமேகலைக்கு மனநிலை சரியில்லை!

*தெய்வக்கன்னி புகழ் மணிமேகலை கடந்த ஒரு வார காலமாகவே யாருடனும் சரியாகப் பேசாமலும், வெறித்த பார்வை பார்த்துக் கொண்டும் இருந்து வருகிறார். இரண்டு நாளாக அவர் படப்பிடிப்பையும் ரத்து செய்து விட்டு தனது அறையிலேயே முடங்கிக் கிடப்பதாகவும், அவரை நகரின் மிகப் பிரபலமான மனநிலை மருத்துவர் ஒருவர் சென்று பார்த்ததாகவும் தெரிகிறது. இரவு பகல் என்று பாராமல், ஓய்வு எதுவும் இல்லாமல் தெய்வக்கன்னி மணிமேகலை சூட்டிங்குகளில் கலந்து கொண்டதுதான் அவருடைய உடல் நிலையைக் கெடுத்திருப்பதாகத் தெரிகிறது.*

மீள்வாரா?

*செல்வி மணிமேகலை இந்த நிலையிலிருந்து மீளுவாரா என்பதை இனிமேல்தான் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.*

*அவரை வைத்துப் படம் எடுக்கும் அத்தனை படநிறுவன அதிபர்களும் அவர் வீட்டு வாசலிலேயே கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகிறார்கள்.*

மணிமேகலை அதற்கு மேலும் நீண்டு கொண்டே சென்ற அந்தச் செய்தியைப் படிக்க மனமின்றி செய்தித்தாளை தூக்கி எறிந்தாள்.

''ஒழிஞ்சி போறேன். எனக்கு எதுவுமே வேணாம்'' என்று இரைந்து கூறியவள். இன்டர்காம் பட்டனைத் தட்டினாள்.



''சேது பேசுறேன்மா...''

''என்ன சேது... பேப்பரில் செய்தி இப்படியெல்லாம் வந்திருக்குது?''

''உங்களுக்கு வேண்டாத நிருபர் ஒருத்தர் இந்த மாதிரி செய்தி கொடுத்துட்டாரும்மா. நான் அந்தப் பத்திரிகைக்கு மறுப்பு கொடுத்திருக்கேன்.''

''தயாரிப்பாளர் யாராவது காத்திட்டிருக்காங்களா?''

''இல்லைம்மா... போன் எதுவும் வந்தால் நானே பாத்துக்கிறேன்.''

''நான் திங்கட்கிழமையிலேர்ந்து சூட்டிங்கில கலந்துக்கிறேன்னு சொல்லிடுங்க'' என்று சொல்லிவிட்டு, சேதுவின் பதிலுக்குக் காத்திராமல் தொடர்பைத் துண்டித்தாள்.

முத்துக்குமாரின் வீட்டுக்குப் போய்ப் பார்ப்பது என்ற தீர்மானத்திற்கு வந்தாள். எப்படிப் போவது? முத்துக்குமார் திருவல்லிக்கேணியில் ஏதோ ஒரு சந்தில் இருக்கிறான். அவள் அவனைப் பார்க்கப் போகும் போது ஒரு தனி முகத்தை அணிந்து கொண்டு போக முடியாது. அப்படியே இதே முகத்துடன் போனால் முத்துக்குமார் வீட்டிலேயே இல்லை என்றால் என்ன ஆவது? பத்திரிகைக்காரர்கள் இப்போதே இவ்வளவு தூரம் பொய்யைக் கலக்கிறார்கள்? முத்துக்குமார் வீட்டு வரை அவள் வந்து போனது தெரிந்தால், என்ன ஆகும்? அவளுக்கும் அவனுக்கும் ரகசியமாக திருமணம் நடந்தே விட்டது என்று எழுதி விட மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்? முத்துக்குமார் அவள் சொன்னதைக் கேட்டு அப்படி ஓடினானே? ஏன் ஓடினான்? நான் சொன்னது பிடிக்காமல் தானே? இப்போது நான் அவனை வீட்டில் போய் நேருக்கு நேர் பார்க்கும் போது மறுபடி என்னை அவமானப்படுத்திவிட்டால் என்ன ஆகும்?

அவமானப் படுத்துகிறானோ இல்லையோ, 'நான் உன்னைக் காதலிக்கவில்லை மேகலா' என்று சொல்லிவிட்டால் அதைத் தன்னால் தாங்க முடியுமா?

அந்த வார்த்தைகளை அவன் வாயிலிருந்து கேட்பதை விட, அவனைச் சந்திப்பதை ஒத்திப் போடுவதே நல்லது போல் பட்டது மணிமேகலைக்கு.

அன்று சனிக்கிழமை.

சனிக்கிழமை முழுக்க அப்படித்தான் கழிந்தது. அன்றைக்கு இரவு முத்துக்குமாரை சந்திக்க முடியாத ஆத்திரத்தில் ரொட்டித் துண்டுகளுடன் தக்காளி சாஸ் பாட்டிலைக் கொண்டு வந்து வைத்து விட்டு பணியாள் அகன்றவுடன் பாட்டிலை எடுத்து பலங்கொண்ட மட்டும் வீசிச் சுவரில் மோதினாள் மணிமேகலை.

கண்ணாடி பாட்டில் மோதியது. க்ளாங்க் என்று சத்தமிட்டது. அறை முழுவதும் கண்ணாடித் துகள்கள், கல்லடி வாங்கிய பேருந்தின் முகப்புக் கண்ணாடிச் சிதறுவது போல் சிதறி விழ தக்காளி சாஸ், சுவரில் இரத்தக் கோடாக வழிந்தது.

நான் ஏன் இப்படி ஆகிவிட்டேன்?

ஞாயிறு காலை. விடிவதற்குள் மணிமேகலை எழுந்தாள். இறங்கிக் கீழே வந்தாள். ஹெரால்டை எடுத்துக் கொண்டு தனது திருவான்மியூர் வீட்டை அடைந்தாள். கிழக்குத் திசையில் இருள் பிரிந்து கொண்டிருந்தது. வேலிப்படலை நீக்கிவிட்டு, காரை உள்ளே செலுத்தி நிறுத்தினாள்.

வீட்டின் கதவைத் திறந்தவள் அதிர்ந்து போனாள்.

கூடத்தின் சோபாவில் அமர்ந்திருந்த முத்துக்குமார் உட்கார்ந்தபடியே தலையைத் திருப்பிப் பார்த்துப் புன்னகைத்தான்.



''வா, மேகலா. நீ இவ்வளவு சீக்கிரமா வருவேன்னு தெரிஞ்சிதான் உனக்கு முன்னாலேயே வந்து காத்திட்டிருக்கேன்.''



9

மணிமேகலை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கண்ணிமைக்காமல் வெகு நேரத்திற்கு.

''எம்மேல கோபமா மேகலா?''

பதில் சொல்லவில்லை.

''இன்னிக்குக் கூட நான் வந்திருக்க மாட்டேன் மேகலா. ஆனா பேப்பர்ல உன்னைப் பத்தி அந்த மாதிரி செய்தி பார்த்ததாலத்தான் வந்தேன்.''

பதில் சொல்லவில்லை.

''ஏதாவது பேசு மேகலா. நீ பேசாம இருக்கிறதே எனக்குப் பெரிய தண்டனையாப் படுது.''

''ரெண்டு வாரமா நான் என்ன பாடுபட்டிருப்பேன்னு நீங்க நெனைச்சிப் பாத்திங்களா குமார்?''

''மேகலா... நான் செய்தது தப்பு மேகலா. ஆரம்பத்திலேர்ந்து நான் உன்கூட அப்படிப் பழகியிருக்கக் கூடாது.''

''எப்படிப் பழகியிருக்கக் கூடாது?''

''அவ்வளவு நெருக்கமா.''

''அதனால என்ன தப்பு?''

''நீ என்னை லவ் பண்றதாச் சொன்னியே. எது நடக்கக் கூடாதுன்னு நான் நெனைச்சிட்டிருந்தேனோ 'அது' நடந்திரிச்சே.''

''ஏன் குமார்... என்னை உங்களுக்குப் பிடிக்கலையா?''

''அய்யோ மேகலா... உன்னைப் பிடிக்கலேன்னு கண்ணில்லாதவன் கூடச் சொல்லமாட்டான். எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. அதனாலத்தான் நானும் என்னையறியாமலேயே உன்கூட அவ்வளவு நெருங்கிப் பழகிட்டேன்.''

''பின்ன ஏன் நான் உங்களை லவ் பண்றதாச் சொன்னப்ப என்னை விட்டு ஓடிப்போனீங்க? ஏன் ரெண்டு வாரமா நான் இருக்கிற பக்கம் திரும்பிக்கூடப் பாக்காம இருந்தீங்க? ஏன் ரெண்டு வாரமா என்னை நெருப்புலத் தூக்கிப் போட்டீங்க? எனக்குத் தெரியும் குமார்... போயும் போயும் ஒரு நடிகையைப் போய்க் கல்யாணம் பண்ணிக்கிறதான்னு தானே?''

''இல்ல மேகலா... நிச்சயம் இல்ல...''

''குமார்! நான் சினிமாவுக்காக நெறையப்பேரை லவ் பண்ணியிருக்கேன். ஆனா அதெல்லாம் பொய். நான் அறியாத வயசில கருப்பண்ணனை நம்பி ஓடிவந்தேன்னு சொன்னேன் பாருங்க. என் வாழ்க்கையில அது ஒரு கெட்ட கனவு. எனக்கு ரொம்பப் பெரிய ஆசை இல்லை குமார். இந்த சினிமாவை உதறிடணும். கண்ணுக்கு நிறைஞ்ச ஒருவரை திருமணம் செய்துக்கணும். உப்பு எது, புளி எது, பருப்பு எதுன்னு தேடித் தேடி பாத்து சமைச்சி கணவனுக்குப் போடணும். அப்புறம் எனக்குன்னு சொந்தமா குழந்தை பெத்துக்கணும். அதான் என் ஆசை! தப்பா குமார்.''

''இல்லை... மேகலா இல்லே...''

''என்மேல உண்மையான அன்பு வைச்சிருக்கிறவரா நான் உங்களை நினைச்சேன். ஒரு பொண்ணு தம்மேல உண்மையான அன்பு வைச்சிருக்கிறவரை நிச்சயமா கண்டு பிடிச்சிருவா. நான் உங்களை அப்படித்தான் நினைச்சேன். நான் நினைச்சது பொய்யா குமார்?''



''மேகலா... உன் மேல தப்பு இல்லை மேகலா. என் மேலத்தான் தப்பு.''

''எனக்கு ஒரு குடும்ப வாழ்க்கை வேணும்னு நான் நினைக்கிறது தப்பில்லைதானே?''

''தப்பில்லை, மேகலா.''

''அப்பா நீங்களும் என்னை லவ் பண்றீங்கதானே?''

''மேகலா... எங்க வீட்டுக்கு நீ இதுவரைக்கும் வந்ததே இல்லையே?''

''இல்லை, ஏன்?'' அவன் எதற்காக அப்படி ஒரு கேள்வி கேட்கிறான் என்பது புரியாமல் கேட்டாள் மேகலா.

''நீ வரணும். இப்பவே வரணும்.''

''நானா? நான் எப்படி வரமுடியும் குமார். நான்தான் நடிகையாச்சே... தெய்வக்கன்னியாச்சே... நான் திருவல்லிக் கேணிக்கு உங்க வீட்டுக்கு வந்தா, உங்ககூட நிம்மதியாப் பேச முடியாது. எல்லாரும் என்னை பார்வைக்கு வைச்சிருக்கிற பொம்மையைப் பாக்கிற மாதிரிப் பாப்பாங்க.''

''எனக்குத் தெரியும் மேகலா. இருந்தாலும் நீ வரணும். வந்து பாக்கணும்.''

''எதை?''

''அங்கே வந்தால் தெரிஞ்சுக்குவே. உன்னைக் கூட்டிட்டு போறதுக்காகத்தான் நான் வந்தேன். முன்னேற்பாடா ஒரு பர்தா கொண்டு வந்திருக்கேன். அதைப் போட்டுக்க. உன்னை யாருக்குமே தெரியாது.''

''சரி'' என்று அரைமனதுடன் மணிமேகலை பர்தா அணிந்து கொண்டாள்.



10

திருவல்லிக்கேணி சூரப்பமுதலி தெருவில் நுழையும் போது ஹெரால்டு இரண்டு எருமை மாடுகளிடம் தயவாக வழி கேட்க வேண்டியிருந்தது.

மணிமேகலை மிகச் சாமர்த்தியமாகக் காரைச் செலுத்தினாள். சாலை நடுவில் ஒரு கோவில். கோவிலைச் சுற்றி சைக்கிள்களும், காலை நேரத்து காய்கறி வண்டிகளும், கூடைக்காரர்களும், நிர்வாணக் குழந்தைகளும் அலைந்து கொண்டிருக்க, மணிமேகலை அவர்களை எல்லாம் சாமர்த்தியமாக விலக்கிவிட்டு, அவன் காட்டிய சின்ன சந்தில் நுழைந்தாள்.

சாலையோரக் குழாயில் நீர்பிடிக்கப் பானைகளின் கியூ. குளிக்காத பெண்கள் அசுத்தமாக நின்று சென்னைக்கே உரிய பிரத்யேக மொழியில் ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டிருக்க, பர்தாவின் உள்ளே இருக்கும் மணிமேகலையின் முகம் இந்நேரம் எப்படி இருக்கும் என்று முத்துக்குமார் யோசித்துப் பார்த்தான்.

''எந்த வீடு குமார்?''

''அதோ எருமை கட்டியிருக்கே... அதுக்கு அடுத்த வீடு.''

அடுத்த வீட்டு வாசலில் நிறுத்த, காரை ஓரமாகச் செலுத்தியபோது, அதிகாரபூர்வமற்ற ஐந்து வயது... நான்கு வயது நடத்துனர்கள் 'ரை...ரைய்... வரலாம். வரலாம்... ஆ...ஸ்டாப்... ஸ்டாப்.'' என்று மணிமேகலையின் ஹெரால்டை வழி நடத்தினார்கள்.

காரை நிறுத்தினாள்.

''நீங்கதான் கூட்டிட்டுப் போகணும்.''

''வா...''



மணிமேகலை இறங்கினாள். முத்துக்குமார் அவசரமாக இறங்கி காரைச் சுற்றி வந்து அவளை அடைந்தான்.

''போகலாமா?''

''ம்...''

அவர்கள் நுழைந்த வீடு, ஏறக்குறைய ஒரு சந்து போல் சென்றது. ஐந்தடி அகலம் இருந்தால் அதிகம்.

வழி நெடுக பாத்திரங்கள் போடப்பட்டு அங்கங்கே தேய்க்கப்பட்டுக் கொண்டிருந்தன.

வரிசையாகக் குடித்தனங்கள், வீட்டுக் கதவுகள் திறந்திருக்க ஒவ்வொரு வீட்டின் உள்ளேயும் காலை நேரப் பரபரப்பு.

அவன் மாடிப்படிகளை ஏறினான்.

''எங்க வீட்டுக்குப் போறது அப்படி ஒண்ணும் சொர்க்கத்துக்குப் போற மாதிரி இல்லை மேகலா.''

''நான் இதைவிட கஷ்டமான நிலையில் எல்லாம் இருந்திருக்கேன் குமார்.''

படிகளைக் கடந்து திரும்பி, ஒரு கதவை அடைந்ததும் தட்டினான்.

அவனே பூட்டைத் திறக்கப் போகிறான் என்று எதிர்பார்த்த மணிமேகலை கதவை தட்டியதைப் பார்த்து வியப்படைந்தாள்.

கதவு திறந்தது. திறந்தவன் ஐந்து வயதுப் பையன்.

''அப்பா... அப்பா வந்துட்டாங்க'' என்றான்.

''அப்பாவா? முத்துக்குமாருக்குத் திருமணம் ஆகிவிட்டதா? அதனால்தான் தான் 'லவ்' பண்ணுகிறேன் என்றபோது அப்படி ஓடினானா?

''வா... மேகலா...''

நுழைந்தாள். அதிர்ச்சியை முகத்தில் காண்பித்துக் கொள்ளவே இல்லை. இன்னொரு பெண் குழந்தை. இரண்டு வருடங்கள் ஆகியிருக்கலாம். அவனைப் பார்த்தவுடன், ''அப்பா'' என்று சந்தோசக் குரல் கொடுத்தது.

''யாருங்க?'' என்று கூடத்தின் மூலையில் இருந்த சின்ன அறையில் இருந்து வெளிப்பட்டவளைப் பார்த்து அதிர்ச்சியடைந்தாள் மணிமேகலை.

''மேகலா வந்திருக்காங்க கவுரி'' என்றான் முத்துக்குமார்.

அந்த கவுரி கைகளை நீட்டிக் கொண்டு ஆவலாய் வந்து மணிமேகலையின் கைகளைப் பற்றினாள்.

''உங்களைப் பத்தி அவர் நிறைய சொல்லியிருக்காரு... உக்காருங்க'' என்ற கவுரிக்கு இரண்டு கண்களும் இருள் அடைந்திருந்தன.

''குமார்...'' என்று தடுமாறினாள் மணிமேகலை.

''இவளைப் பாக்கத்தான் நீ எங்க வீட்டுக்கு வரணும்னு சொன்னேன் மேகலா! இது என் மனைவி கவுரி...''

மணிமேகலை அவள் கைகளை இறுகப் பற்றினாள். அவளுடைய இதயத்தில் ஆயிரம் ஊசிகள் ஒரே நேரத்தில் இறங்கின. இப்படி ஒரு அதிர்ஷ்டம் கெட்டவளா நான்?

மணிமேகலை அப்படியே சரிந்து தரையில் உட்கார்ந்தாள்.

''முதமுதல்ல வந்திருக்கீங்க. உங்களுக்கு காபி போட்டுத் தர்றேன். குடிப்பீங்க இல்ல, எங்க வீட்டுக் காபியெல்லாம்?''

''குடிப்பேன் கவுரி!''

''அப்படின்னா ஒரு நிமிடம், பேசிட்டு இருங்க.''



சொன்ன மாதிரியே அடுத்த நிமிடம் கவுரி கையில் காபிக் கோப்பையுடன் வந்தாள். மணிமேகலையிடம் நீட்டினாள்.

''குமாருக்கு...?'' என்று ஏதோ கேட்க வேண்டுமே என்பதற்காகக் கேட்டாள் மணிமேகலை.

''இதோ... இன்னிக்கு உங்களை இங்கக் கூட்டிட்டு வரப் போறதா அவர் நேத்து ராத்திரியே எங்கிட்டச் சொல்லிட்டாருங்க. அதனால இன்னிக்குக் காலையில உங்களுக்கு எங்க வீட்லதான் காலை உணவு சாப்பிடுவீங்க, இல்ல?''

''சாப்பிடுவேன் கவுரி'' என்று காபியை அருந்தினாள் மணிமேகலை.

கவுரி உள்ளே சென்றதும், மணிமேகலை முத்துக்குமாரைப் பார்த்தாள். அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அவனிடம் பேசினால் அங்கேயே அழுதுவிடுவோம் என்று தோன்றியது மணிமேகலைக்கு. பேசவில்லை.

''நீச்சல் கத்துக் கொடுக்கறாராமே, உங்களுக்கு. எல்லாம் சொல்லுவாரு. முதல் வாரம் சேலையிலேயே நீச்சல் கத்துக்க வந்துட்டீங்கன்னு சொன்னாரு. அப்புறம் அடுத்த வாரம் நீச்சல் உடையில் கத்துக்க வந்தீங்கன்னு சொன்னாரு. நீங்க ரொம்ப அழகுன்னு அவர் சொல்லவில்லை. எனக்குத் தெரியும். பக்கத்து வீட்டில் எல்லாம் உங்க படத்தைப் பாத்துட்டு வந்து பேசிப்பாங்க. எனக்கும் உங்களைப் பாக்கணும் போல இருந்தது மேகலா. நான் அப்படிக் கூப்பிடலாம் இல்ல? தப்பில்லையே? கூப்பிடலாம். நீங்க அதையெல்லாம் தப்பா எடுத்துக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும்...'' என்று ஆரம்பித்து கவுரிதான் கடைசிவரை ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள்.

கவுரி கிண்டிக் கொடுத்த கேசரியையும், உப்புமாவையும் தொண்டை அடைக்கச் சாப்பிட்டாள். அங்கிருந்து புறப் பட்டாள். துணைக்கு வருகிறேன் என்று சொன்ன முத்துக் குமாரை வேண்டாமென்று தடுத்துவிட்டாள்.

திருவான்மியூர் வீட்டுக்குப் போகவேண்டியவள் நேராகத் தன் வீட்டிற்கே சென்று தனது அறைக்குள் நுழைந்து படுத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

எவ்வளவு நேரம் அழுதிருப்பாள் என்று அவளுக்கே தெரியாது. தொலைபேசி அழைத்தது. உதாசீனப்படுத் தினாள். கேசவ்கீர்த்தியாக இருக்கும். இல்லை, சேதுவாக இருக்கும். அவளுக்கு யாருடனும் பேச விருப்பம் இல்லை.

தொலைபேசி அவளை விடுவதாய் இல்லை. பிடிவாத மாக அடித்துக் கொண்டே இருந்தது. சலிப்புடன் எழுந்து அதை அணுகினாள்.

''அலோ...''

''நான் கவுரி பேசறேன், மணி'' என்றது கவுரியின் குரல்.

மணிமேகலைக்குத் திகைப்பாய் இருந்தது.

''நீயா கவுரி? எங்கேர்ந்து பேசறீங்க?''

''மணி, எங்கிட்ட இந்த வாங்க போங்க எல்லாம் வேணாம்.''

மணிமேகலைக்கு குப்பென்று ஒரு மகிழ்ச்சி அலை உடலெங்கும் பரவியது. ஒரே ஒரு வேளை பழகினாலும் கவுரியின் குரலில் பரவியிருந்த நட்புணர்ச்சி அவளைச் சிலிர்க்க வைத்தது.

''எங்கேர்ந்து பேசறே கவுரி?''

''பக்கத்துல ஒரு மருந்துக் கடையிலேர்ந்து, கூட துணைக்கு பையன் இருக்கான்.''



''அவனோட பேரைக் கூட நான் கேட்டுக்காமல் வந்துட்டேன்.''

''செந்தில்! மணி, நான் உன் கூடத் தனியாப் பேசணும். உங்க வீட்டுக்கு வரவா?''

''வா கவுரி. எப்படி வருவே? கார் அனுப்பட்டுமா?''

''வேணாம். ஒரு ஆட்டோ பிடிச்சிட்டு வந்துடறேன். நீ இருக்கிற இடம் எனக்குத் தெரியும். என்னை உங்க வீட்டுக்குள்ள விடச் சொல்லு.''

''ச்சே. என்ன கவுரி இது? அவ்வளவு கேவலமானவளா நான்?''

''உன்னைப் பத்தித் தெரியும், மணி. ஆனால் உன்னைச் சுத்தி இருக்கிறவங்களை தெரியாதே.''

''இல்ல, நீ வா. எனது அறை வரைக்கும் கொண்டு வந்து விடச்சொல்றேன். குழந்தைங்களைக் கூட்டிக்கிட்டு வா. எனக்கு குழந்தைங்கன்னா ரொம்பப் பிரியம். அதுவும்...''

''சொல்லு மணி.''

''முத்துக்குமார் குழந்தைங்கன்னா இன்னும் பிரியம்.''

''தெரியும், மணி.''

''அவரு இல்லையா?''

''இல்ல. அய்யாவுக்கு மூடு அப்செட் ஆயிருச்சி போல. லைப்ரரிக்குப் போறேன்னு கிளம்பிப் போயிட்டாரு. நான் இன்னும் கொஞ்ச நேரத்தில அங்க வர்றேன், மணி.''

''நான் இங்கதான் இருக்கேன்னு எப்படிக் கண்டு பிடிச்சே?''

''திருவான்மியூர் வீட்டுப் போனை முயற்சி பண்ணினேன். யாரும் எடுக்கலை. அதனால, இந்த நம்பரைக் கூப்பிட் டேன். இந்த நம்பரை அவரு எனக்குச் சொல்லி இருக்காரு.''

''வா கவுரி, நேரில் பேசலாம்.''

போனை வைத்துவிட்டு மணிமேகலை உற்சாகமாய் எழுந்தாள். டிரைவரைக் கூப்பிட்டு ஐநூறு ரூபாயை அவனிடம் கொடுத்து குழந்தை பொம்மைகளை வாங்கி வரச் சொன்னாள். ஆட்டோவில் கவுரி வந்தால், அவளை அடைகாப்பது போல் பத்திரமாக தனது அறைக்குக் கூட்டி வரவேண்டும் என்று வாட்ச்மேனிடம் சொன்னாள்.

தன் அறைக்குள் நுழைந்து தனக்குப் பிடித்த மாதிரி சில அலங்காரங்களைச் செய்து கொண்டாள். அறையில் அங்கே இருந்ததை இங்கே இங்கே இருந்ததை அங்கே என்று மாற்றி அறையின் அமைப்பில் சில வித்தியாசங்கள் செய்தாள்.

ஏன் மணிமேகலை? ஏன் இந்த உற்சாகம்?

மணிமேகலைக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

சரியாக ஒரு மணி நேரம் கழித்து அவள் அறைக் கதவு தட்டப்பட, மணிமேகலை ஆவலுடன் கதவைத் திறந்தாள்.

கவுரி நின்றிருந்தாள். அவளுடைய இரண்டு கைகளாலும் இரண்டு குழந்தைகளையும் பற்றிக் கொண்டு.

''ஓ... கவுரி, வா... வா. உள்ள வா. டேய் செந்தில், இந்த ஆன்டியை யாருன்னு தெரியுதா உனக்கு?''

''தெரியுமே?''

''யாரு சொல்லு.''

''தெய்வக்கன்னி மணிமேகலை. நான் உங்களை சினிமாவில் பார்த்திருக்கேன் ஆன்டி.''

''வெரிகுட், உன் பேர் என்னம்மா?''

''லாஜி.''

''லாஜியா... அப்படி ஒரு பேரா? எனக்குத் தெரியவே தெரியாதே?''



''ராஜியைத்தான் அப்படிச் சொல்றா. அவங்க அப்பா வைச்ச பேரு ராஜேசுவரி. சுருக்கமா ராஜி. அவளே சொல்லிக்கிறது லாஜி.''

மணிமேகலை குனிந்து அமர்ந்து ராஜியின் இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டாள்.

''என்ன சாப்பிடறே லாஜி?''

''தூஸ்.''

''தூசா? அய்யோ நீ பேசறதை என்னால புரிஞ்சிக்க முடியலையே. கவுரி குழந்தை என்ன வேணும்னு சொல்றா... சொல்லேன்.''

''ஜூஸ் வேணுமாம். ராஜி! ஆன்டிகிட்ட அப்படிக் கேக்கக் கூடாதுன்னு சொல்லித்தானே கூட்டிக்கிட்டு வந்தேன்.''

''என்ன கவுரி இது? ஜூஸ்தானே கேக்கறா. வானத்திலேர்ந்து சந்திரனையா பிடிச்சிக் கொடுக்கச் சொல்றா... என்னை மாதிரி. உனக்கு ஜூஸ்தானே வேணும் கண்ணு. தரச்சொல்றேன். சாமி... குழந்தைங்களுக்கு ஆப்பிள் ஜூஸ் கொடுங்க, உடனே. அப்புறம் எங்களுக்கும் இரண்டு தம்ளர்.''

''இதோம்மா.''

''செந்தில், ராஜி உங்களுக்காக ஆன்டி பொம்மையெல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன். ஜூஸ் சாப்பிட்டுவிட்டு போய் பொம்மையை வைச்சிக்கிட்டு விளையாடணும். சரியா?''

''சொல்லு கவுரி. ஏதோ பேசணும்னு சொன்னியே போன்ல.''

''அவரைப் பத்தி பேச வந்திருக்கேன் மணி.''

''முத்துக்குமார் பத்தியா?''

''ஆமா. நீங்க இரண்டு பேரும் எப்படிப் பழக ஆரம்பிச்சீங்கன்னு ஆரம்பத்திலேர்ந்தே எனக்குத் தெரியும்.''

''கவுரி...''

''நான் சொல்றதை முழுக்கக் கேட்டுடு, அப்புறம் நீ பேசலாம்.''

''சொல்லு'' என்று நகத்தைக் கடிக்கத் தொடங்கினாள் மணிமேகலை.

கவுரிக்குப் பார்வை இல்லாதது அந்த நேரத்தில் அவளுக்கொரு ஆறுதலாகக் கூட இருந்தது. அவளுக்குப் பார்வை இருந்திருந்தால் நேருக்கு நேர் பார்த்துப் பேச முடிந்திருக்கும் என்றே தோன்றவில்லை.

''நான் அவருக்கு அத்தை மகள் உறவு வேணும், மணி. எங்கம்மா அப்பா சின்ன வயசிலயே போயிட்டாங்க. நான் வளர்ந்ததெல்லாம் அவர் வீட்லதான். எனக்குப் பிறவியிலேயே பார்வை இல்லை. எனக்கு சூரியன் எப்படி இருப்பான், சந்திரன் எப்படி இருப்பான்னுல்லாம் தெரியவே தெரியாது. சிவப்பு நிறம், மாநிறம், எலுமிச்சை நிறம்னு கேள்விப்படறேன். நிறம்னா என்னான்னு கூட எனக்குத் தெரியாது. ஆனா நீ ரொம்ப அழகுன்னு மத்தவங்க சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன். ரொம்பப் பெரிய இடத்துல இருக்கேன்னும் தெரியும். என் வீட்டுக்காரர் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதே எனக்குக் கிடைச்ச பரிசுன்னுதான் சொல்லணும் மணி. என் மாமனாரும் மாமியாரும் செத்துப் போயிட்டப்புறம் அவரு நினைச்சிருந்தால் என்னை அவரு வீட்டு வேலைக்காரியா வைச்சிருந்திருக்கலாம். இல்லன்னா என்னைத் துரத்திவிட்டிருக்கலாம். அப்படியெல்லாம் செய்யலை. பெரிய மனசோட என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. அவர் கூட நான் ரொம்ப சந்தோசமா வாழ்ந்துகிட்டிருக்கேன் என்கிறதுக்கு அடையாளந்தான் என்னோட இரண்டு குழந்தைங்களும்!'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் பேச்சை நிறுத்திவிட்டு காற்றில் கைகளை வீசி, மணிமேகலையின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.



''மணி... எனக்கு ஒரு குத்த உணர்ச்சி வந்திருச்சி மணி.''

''என்ன ஆச்சி கவுரி?''

''என் வீட்டுக்காரர் எனக்கு எந்தக் குறையும் வைக்கலை. ஆனா அவருக்கு நான்தான் குறை வைச்சிட்டேன்.''

''எந்தவிதத்திலே கவுரி?''

''நான் பார்வையில்லாமல் இருக்கறதே ஒரு பெரிய குறைதான் கவுரி? அவரு நினைச்சிருந்தால் நல்ல பொண்ணா கட்டிக்கிட்டிருந்திருக்கலாம். அந்தப் பொண்ணும் அவருக்கு உதவியா இருந்திருப்பாளே தவிர பாரமா இருந்திருக்க மாட்டாள். நான் பாரமா இருக்கேன்னு எனக்கே தெரியுது. இதுவரைக்கும் அவரோட சேர்ந்து வெளிய போனதே கிடையாது. அவர் கூட்டிட்டுப் போறேன்னுதான் சொல்லுவாரு. ஆனா எனக்கு விருப்பமில்லே. அவரோட என்னைப் பார்க்கிறவங்க, என்னைத் திட்ட மாட்டாங்க? இவ்வளவு அழகும் குணமும் இருக்கிறவனைப் போய் நான் கட்டிக்கிட்டேன்னு என்னைக் கரிச்சிக் கொட்டமாட்டாங்க? ஊர் வாயில விழுந்தா நான் எழுந்துக்க முடியாது மணி. அதனாலத்தான் நான் அவர்கூட வெளியில போறதில்ல.''

''இதான் என்கூடப் பேச வந்தியா கவுரி?''

''இல்ல மணி. இதவிட முக்கியமான விசயம்.''

''என்ன கவுரி? சாப்பிட்டுட்டே பேசலாமா?''

''வேணாம். நான் பேசறது யாருக்கும் தெரியக் கூடாது. சாப்பாடெல்லாம் அப்புறம்.''

சால்லு கவுரி'' ஏனோ தெரியவில்லை. மணி கலையின் மார்பில் இனந்தெரியாத ஒரு படபடப்பு.

''நீ அவரை லவ் பண்றியா மணி?''

கேட்டுவிட்டாள். கவுரி நேருக்கு நேர் கேட்டுவிட்டாள். கவுரியால் அவளைப் பார்க்க முடியாது என்பதைக் கூட மறந்து வெட்கத்தில் தலைகுனிந்தாள் மணிமேகலை.

''ஏய் மணி... என்ன பதிலே இல்ல? வெக்கமா?''

''உனக்கு... உனக்கு... எப்படித் தெரியும் கவுரி?''

''அவரே சொல்லிட்டாரு, மணி. உனக்கு ஒரு குடும்ப வாழ்க்கை வேணும்னு ஏங்கிக்கிட்டிருக்கிறதைச் சொன் னாரு. அப்புறம் நீ அவரை லவ் பண்றேன்னு சொன்னதைச் சொன்னாரு.''

''உனக்கு என் மேல கோபம் வரலியா கவுரி?''

''நீ அவரைக் கல்யாணம் பண்ணிக்க, மணி. கண்ணுக்கு நிறைஞ்ச மனைவியா நீ இருப்பே. நான் அவருக்கு கொடுக்கத் தவறினதை நீதான் கொடுக்கணும். உன்னை எங்க வீட்டுக்கு அவரு ஏன் கூட்டிட்டு வந்தாருன்னு எனக்குத் தெரியும். அவருக்குக் கல்யாணம் ஆன விஷயத்தைச் சொல்லாமல் சொல்றதுக்காகத்தான் கூட்டிட்டு வந்திருக்காரு. ஆனால் இந்த முறை நான் சும்மா இருக்கக்கூடாதுன்னு நினைச்சேன். நான் திருப்தியா வாழ்ந்துவிட்டேன். அவரை நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா, நீ பங்கு போட வந்துட்டதா நினைக்க மாட்டேன். சந்தோசப்படுவேன். பண்ணிக்கிறியா மணி.''

மணிமேகலை பதில் சொல்லவில்லை. என்னதான் முத்துக்குமாரின் மீது காதலாக இருந்தாலும் அது கவுரியின் வாழ்க்கையைப் பாதிக்கும் என்ற நினைப்பினாலேயே அவளால் உடனே 'சரி' என்று சொல்ல முடியவில்லை.



''என்ன மணி, பேசாமல் இருக்க? உன் சொத்துக்கு ஆசைப்பட்டுட்டோம்னு நினைக்கிறியா?''

''கவுரி'' என்று அவள் வாயைப் பொத்தினாள் மணிமேகலை. ''நான் அப்படிப்பட்டவளா கவுரி? அப்படி நினைக்கிறவளா இருந்தால் இவ்வளவு நாளும் முத்துக் குமார் கூட அப்படி பழகியிருப்பேனா கவுரி? நான் சினிமாவில் கூட நீச்சல் உடை போட்டதில்லை. அப்படிப் பட்டவள், அவருக்காகப் போட்டேன்னு உனக்குத் தெரியும் இல்ல. தெரிஞ்சிட்டு நீ இப்படி கேக்கலாமா?''

''அப்ப என்ன? அவரைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?''

''ம்...''

''வெக்கம்... வெக்கம்...''

''ஆமா. ஆனால், இந்த விஷயத்தை இப்ப வெளியில் சொல்ல வேணாம். நான் கையில் இருக்கிற படத்தை எல்லாம் முடிச்சிடறேன். அதுக்கப்புறம் அவரைக் கல் யாணம் பண்ணிக்கிட்டு ஒரேயடியா ஒதுங்கிடறேன். இப்பவே கல்யாணம்னு வெளியில சொன்னால் என்னை நம்பி பணம் போட்டிருக்கிறவங்க எல்லாம் படம் ஓடலைன்னா என்ன செய்யறதுன்ன கவலைப்பட ஆரம்பிச்சிடுவாங்க.''

''சரி, இப்ப சாப்பிடலாம். சாப்பிடறதுக்கு முன்னால...''

''முன்னால?''

மணிமேகலை கொஞ்சமும் எதிர்பாராத தருணத்தில், கவுரி அவளை அணைத்து அவள் கன்னத்தில் உதட்டு ஈரம் பட முத்தமிட்டாள்.

அந்த முத்தம் இனித்தது.

''ஏய் கவுரி, அடுத்த ஞாயித்துக்கிழமை வழக்கம் போல டீச்சரை நீச்சல் கத்துக் கொடுக்க அனுப்பிடு. நாம

பேசிக்கிட்டதையெல்லாம் அங்க சொல்ல வேணாம், என்ன?''



## 11

அடுத்த ஞாயிறு, விடியற்காலை. மணிமேகலை திருவான்மியூர் தாண்டியிருந்த அவளுடைய வீட்டில் காத்திருந்தாள். முத்துக்குமாரை இப்போது உரிமையுடன் தொடலாம். உரிமையுடன் அவன் மார்பில் சாயலாம்.

முத்துக்குமார் வரும் திசையையே பார்த்துக் கொண்டு வேலிப்படலுக்கு அருகிலேயே சின்னப் பெண் போல காத்திருந்தாள். அவள் உதடுகள் அவளையறியாமலேயே ஏதோ ஒரு காதல் பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

முத்துக்குமார் தன்னுடைய டி.வி.எஸ். மோட்டார் சைக்கிளில் வந்து வேலிப்படலுக்கு முன்னால் பிரேக் அடித்தான், அவளைப் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டு விழிகளை விரித்தான். சட்டென்று முகம் சுருங்கினான்.

அவள் கதவைத் திறந்தாள். மவுனமாக உள்ளே நுழைந்தான். வீட்டில் நுழைந்ததும் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் பாத்ரூமில் நுழைந்து துடையைப் பிடித்த இறுக்கமான அரை நிக்கரில் வெளிப்பட்டான்.

மணிமேகலை அவன் பாத்ரூமில் நுழைந்தவுடனேயே நீச்சல் உடைகளை அணிந்து கொண்டாள். அவன் வெளியே வந்ததும் அவனைப் பார்த்துச் சிரித்தாள். முத்துக்குமார் பதிலுக்குச் சிரிக்கவில்லை. உதடுகளை 'ப்' என்று இணைத்து வைத்திருந்தான்.

''ஆரம்பிக்கலாமா குமார்?'' மணிமேகலை இயல்பாகக் கேட்டாள்.



''ம்... இன்னிக்கு டைவிங் சொல்லித் தரேன்'' என்றான் முத்துக்குமார் முகத்தின் கடுமை சிறிது கூட மாறாமல்.

''சரி'' என்று டைவிங் போர்டுக்குப் படி ஏறிச் சென்றாள். முத்துக்குமார் அவளருகே சென்று நின்றான். அவள் கைகளை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று காட்டினான். எப்படிக் குதிக்க வேண்டும் என்று காண்பிப்பதற்காக அங்கிருந்து டைவ் அடித்துக் காட்டினான்.

''கமான்... டைவ்'' என்றான் கரையில் ஏறி நின்று கொண்டு.

மணிமேகலை குதித்தாள். அவள் உடல் தங்க மீனைப் போல நீர்ப்பரப்பைக் கிழித்துக் கொண்டு உள்ளே வெண்ணெயில் கத்தி.. இறங்குவதைப் போல் இறங்கியது.

ஒரு வினாடி. இரண்டு வினாடி. மூன்று வினாடி.

என்ன ஆயிற்று? ஏன் மணிமேகலை மேலே வரவில்லை. முத்துக்குமார் பதறிப் போனான். சட்டென்று நீரில் பாய்ந்தான். இரு கைகளையும் நீட்டித் துழாவினான்.

மணிமேகலை, கீழே வெளிர்நீலப் பளிங்கின் மேல் மல்லாந்திருந்தாள். அவள் கால்கள் நீரின் வேகத்தின் காரணமாக இப்படியும் அப்படியுமாக ஊசலாடிக் கொண்டிருந்தன.

முத்துக்குமார் அவளை அப்படியே தூக்கினான். கரைக்குக் கொண்டு வந்தான்.

மணிமேகலை கண்களை மூடியிருந்தாள். டைவ் அடித்ததில் தலை தரையில் மோதி விட்டதா என்ன? தலையில் ஏதாவது காயம் இருக்கிறதா என்று பார்த்தான். இல்லை. ஏன் மயங்கினாள்?

''மேகலா...'' மெல்ல அவள் கன்னங்களைத் தட்டினான்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளை மறுபடியும் தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்து கட்டிலில் கிடத்தினான். உதவிக்கு செங்கம்மாவையாவது, வேலையாவையாவது அழைக்கலாமா என்று யோசித்தான். இவள் கட்டிலில் கிடப்பதையும், அவன் அரை நிக்கருடன் இருப்பதையும் அவர்கள் பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்று தோன்றியது. கூப்பிடத் தோன்றவில்லை. அறையில் நைலான் கொடியில் இருந்த தேங்காய்ப்பூ டவல் ஒன்றை உருவி அவள் உடலில் ஒற்றி எடுத்தான். முதன் முதலாய் அவள் தண்ணீரில் விழுந்து அவன் கரை சேர்த்த போது, முயற்சித்த அதே முறையைக் கையாண்டான்.

அவளுடைய இடுப்பின் இரண்டு பக்கங்களிலும் முழங்கால்களை ஊன்றிக் கொண்டு இடுப்பிலிருந்து இரண்டு கைகளையும் அழுத்தி மேல் நோக்கி இழுத்துக் கொண்டே வந்தான்.

அவள் மார்பு, அவளது பெருமூச்சுகளால் எழுந்து எழுந்து தாழ்ந்தது. தண்ணீர் அவள் வாயிலிருந்து வெளிப்படவில்லை. மயக்கம்தான்.

''மேகலா... மேகலா...''

மேகலா மெல்லப் புரண்டாள். அவளின் இடுப்பு வளைவு அவன் முகத்திற்கு நேரே மேல்நோக்கிப் புரண்டது. என்ன ஒரு வளைவு? அவளைப் படைத்தவன் இந்த இடுப்புப் பிரதேசத்தை இவ்வளவு அழகாகப் படைப்பதற்கென்றே நிறைய நேரம் எடுத்துக் கொண்டிருப்பான்.

முத்துக்குமார் எச்சிலை ஒருமுறை விழுங்கினான். சறுக்குப் பலகை போல் இருந்த அவளது இடுப்பில் ஒரு விரலை வைத்து மெல்ல நீவி விட்டான். அவன் கழுத்தை இரு கரங்கள் வளைத்தன.

அவன் திடுக்கிட்டுப் பார்த்தான்.



மணிமேகலைதான், விழித்துக் கொண்டிருந்தாள். அவளது நீண்ட கைகள்தான் அவன் கழுத்தைப் பற்றி வளைத்தன.

அவன் எழுந்து கொள்ளப் பார்த்தான். முடியவில்லை. அவள் கரங்கள் மேலும் அவனை அழுத்தின.

முத்துக்குமார் மெல்ல மெல்லத் தளர்ந்தான்.

''குமார்...''

''மேகலா...''

''ஐ லவ் யூ குமார்.''

''ஐ லவ் யூ மேகலா! ஐ லவ் யூ சோ மச்'' முத்துக்குமார் தன் முகத்தை அவள் கழுத்தில் வைத்து அழுத்தினான். மணிமேகலை அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

''மேகலா... செங்கம்மா வந்துடப் போறா'' என்றான், முத்துக்குமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு.

மணிமேகலை அவனை விடுவித்தாள்-மனமின்றி. முத்துக்குமார் அவள் கண்களை உற்றுப் பார்த்தான்.

அவள் விரல்களால் கண்களை மூடிக்கொண்டாள். விரலிடுக்குகள் வழியாக, அவளது கண்களின் பளபளத்த கரும்பாப்பாக்கள் தெரிந்தன.

''என் மேல இவ்வளவு அன்பு வைச்சிருக்கீங்க இல்ல?'' மணிமேகலை மென்மையாக உதடுகளை அசைத்து, மல்லாந்து படுத்த வண்ணமே கேட்டாள்.

''ம்'' என்றான் முத்துக்குமார் அந்த உதடுகளை ஒற்றை விரலால் வருடிக் கொண்டே.

மணிமேகலை, அவள் உதடு மீது ஓடிய அந்த விரலைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

''பின்ன அன்னைக்கு மட்டும் ஏன் அப்படி பைத்தியக் காரத்தனமா நடந்துக்கிட்டீங்க?''

முத்துக்குமார் மவுனமாக இருந்தான்.

''பதில் சொல்லுங்க குமார்.''

''நானே சொல்லிடறேன். என்னை அறியாமல் நானும் உன்னை லவ் பண்ண ஆரம்பிச்சிட்டேன். அதனாலதான் எனக்குக் கல்யாணம் ஆயிருச்சி, இரண்டு குழந்தைங்க இருக்குங்கிறதையெல்லாம் உன்கிட்டச் சொல்லவே இல்லை! சொல்லிவிட்டால், நீ என்னை வெறுத்துடுவேன்னு பயம்! உனக்கும் எனக்கும் நடுவுல இருக்கிற இந்த உறவு எப்பவுமே போயிடக் கூடாதுன்னு நினைச்சிட்டிருந்தேன். நீ என்னை 'லவ்' பண்றேன்னு சொன்னியே, அப்போ கத்தியால குத்தற மாதிரி இருந்தது. ஏற்கனவே கல்யாண மான நான் உன் மனசையும் கெடுத்திட்டேனேன்னு எம்மேலயே எனக்குக் கோவமா வந்தது. அதான் போயிட் டேன். கவுரிகிட்டக் கூட சொல்லிவிட்டேன். இரண்டு வாரமா நான் பல்லைக் கடிச்சிட்டுத்தான் இந்தப் பக்கம் வரலை. போன வாரம் உன்கிட்ட எதையும் மறைக்கக் கூடாதுன்னு தோணிச்சி. அதான் வந்துக் கூட்டிட்டுப் போய் என் மனைவியை அறிமுகப்படுத்தி வைச்சேன். உன்னை மறந்துடணும்னுதான் நினைச்சேன் மேகலா. முடியலை. அதான் இந்த வாரம் நானே வந்துவிட்டேன். உனக்கு நீச்சல்தானே. சொல்லித்தரப் போறேன்னு என் மனசை நானே சமாதானப்படுத்திக்கிட்டு... இங்க வந்தா...''

''இங்க வந்தா?''

''போக்கிரி. தண்ணியில மயங்கி விழுந்துட்ட மாதிரி நடிச்சி என்னையே மயக்கிட்டியே....''

''நான் ரொம்ப சந்தோசமா இருக்கேங்க.''

''ஆனால், நான் ரொம்ப வருத்தமா இருக்கேன்.''



''ஏன், குமார்?''

''நான் தாலி கட்டினதிலேர்ந்து கவுரிக்குத் துரோகமே பண்ணினதில்லை, மேகலா. இன்னிக்குப் பண்ணிவிட் டேன்.''

''அக்கா தப்பா எடுத்துக்கும்னு பயப்படறீங்களா?''

''ம்.''

''ஊகூம். அக்கா தப்பா எடுத்துக்காது.''

''ஆமா. கவுரியை என்னைவிட உனக்கு நல்லாத் தெரியும் பாரு. மேகலா இன்னிக்கு நடந்ததை யார்கிட்டயும் நீ சொல்லக் கூடாது. சத்தியம் பண்ணு.''

''எதுக்குங்க?''

''வெளியில தெரிஞ்சி, கவுரி காதுக்குப் போயிட்டா அவள் அந்த நிமிடமே செத்துப் போயிடுவா. அதனால நானே கவுரிகிட்ட அவள் மூடு பாத்துக்கிட்டு ஒருநாள் இல்லன்னா ஒருநாள் சொல்றேன்.''

''நம்ப கல்யாணம்?''

''கவுரியோட சம்மதத்தோடதான். சரியா?''

''சரி'' என்று சந்தோசமாய் சம்மதித்தாள் மணிமேகலை.



12

மூன்றாவது மாதம் ஒரு விடியற் காலையில் மணிமேகலை பாத்ரூமில் வாந்தியெடுத்தாள். தலைசுற்றியது. வாயைக் கழுவிக் கொண்டவுடன் எதையாவது புளிப்பாகச் சாப்பிட வேண்டும் போலத் தோன்றியது. இரகசியமாக சமையல் அறைக் குள் நுழைந்து இருப்பவற்றையெல்லாம்

திறந்து பார்த்து மாங்காய் ஊறுகாயைப் பார்த்தவுடன் உள்ளங்கையில் வாரி எடுத்து வாயில் போட்டுக் கொண் டாள்.



## 13

''வேண்டாம் மேகலா. சொன்னாக் கேளு. பிளீஸ்...''

''முடியாதுங்க. நான் இந்தக் குழந்தை வேணும்னு எவ்வளவு ஆசைப்பட்டிருக்கேன். எனக்குன்னு ஒரு குழந்தை வேணும்னு எத்தனை இராத்திரி தலையணையை நனைச்சிருக்கேன்.''

''கல்யாணமானப்புறம் நீ எவ்வளவு வேணும்னாலும் பெத்துக்கயேன்.''

''இப்ப மட்டும் என்னவாம்? கல்யாணங்கிறது வெறு தாலி கட்றது மட்டுந்தானா? அதுக்கு மேல என்ன இருக் குதோ அத்தனையும் நடந்திரிச்சி. வேலையாவும் செங்கம மாவும் கேட்டா ரொம்ப சந்தோசப்படுவாங்க. அவங் களுக்குக் கூட நான் உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக் கணும்னு ஆசை.''

''கவுரிகிட்ட நான் இன்னும் சொல்லலை மேகலா.''

''நான் சொல்றேன் குமார்.''

''எனக்கு பயமாயிருக்கு, மேகலா.''

''பயப்படாதீங்க. அடுத்த ஞாயிற்றுக்கிழமை அக்காவை இங்கே கூட்டிட்டு வாங்க. நான் சொல்றேன்.''

''கவுரி தாங்குவாளா மேகலா... அவளை நான் தள்ளி வைச்சிரப் போறேன்னு நினைச்சிட்டா?''

''நீங்க கூட்டிட்டு வாங்க. நான் பாத்துக்கிறேன்.''



## 14

''வா... கவுரி!''

''கூப்பிட்டு அனுப்பினியா, மணி?''

''ஆமா, பாரு, உங்க வீட்டுக்காரரு நழுவுறாரு! அவரைப் புடிச்சி வைச்சிக்க.''

''ஏன் மணி?'' என்று கவுரி மணிமேகலையை நெருங்கி அவள் தோளைப் பற்றினாள்.

''நான் ஆசைப்பட்டது நடந்துரிச்சி கவுரி.''

''அப்படின்னா?''

''நான் இப்ப மூணு மாசம்.''

''உண்மையாகவா... மணி! அவர் எங்கிட்ட எதையுமே சொல்லலியே! கல்யாணத்துக்கு என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாது?''

''அதுக்குத்தான் கூப்பிட்டிருக்கேன்.''

''அப்படின்னா?''

''இன்னிக்குத்தான் கல்யாணம்.''

''அப்ப... அதுக்குள்ள இவன் அவசரப்பட்டுட்டானா...?'' என்று மணிமேகலையின் அடிவயிற்றைத் தடவிக் கொடுத்தாள் கவுரி. ''என்னங்க... எங்க இருக்கீங்க? மணி சொல்றது உண்மைதானா?''

''என்னை மன்னிச்சிடு கவுரி. நீ என்ன சொல்லிடு வியோன்னு பயந்துக்கிட்டு நான் உங்கிட்ட ஒண்ணுமே சொல்லலை...''

''அய்யோ... பயப்படற ஆளைப் பாருங்க? அதான் இவ்வளவு அழுத்தமா எல்லாத்தையும் முடிச்சிட்டு வந்து சொல்றீங்களாக்கும்?''

‘‘கவுரி...’’

‘‘விளையாட்டுக்குச் சொன்னேங்க. எனக்கு இதில சம்மதந்தான். முழுக்க முழுக்கச் சம்மதந்தான். எங்க மணி உங்களுக்குக் கிடைக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணுமே...’’

‘‘உங்க, மணியா?’’

‘‘ஆமா, நான் இப்ப பொண்ணு வீட்டுக்காரி. கல்யாணம் எங்க மணி?’’

‘‘இதே வீட்லதான். செங்கம்மாவும் வேலையாவும்தான் பெரியவங்க. கடவுள் படம் இருக்கு. எனக்குப் பொண்ணு வீட்டுக்காரி நீ இருக்க. தாலிகட்ட இவர் இருக்காரு. நாதசுவரம் டேப் பண்ணி வச்சிருக்கேன். கல்யாணத்துக்கு அப்புறம் செங்கம்மா நமக்கு விருந்து வைக்கப் போவுது. வடை, பாயசம் எல்லாம் இருக்கு இப்ப நாதசுவரம்...

ஒரு டீப்பாயின் மீது இருந்த டேப்ரிகார்டரின் பட்டனைத் தட்டினாள் மணிமேகலை.

‘‘பீ... பீ...’’ என்று சிவாளியை ஊதிப் பார்க்கும் இடையுடன் நாதசுவரம் தொடங்கியது.



# 15

‘‘இது எத்தனாவது மாசம் மேகலா?’’

‘‘அஞ்சிங்க. வயிறு கொஞ்சம் தெரிய ஆரம்பிச்சிரிச்சி.’’

‘‘தலைசுத்தல், வாந்தி எல்லாம் இல்லையே?’’

‘‘இல்ல.’’

‘‘உனக்கு ரொம்பப் பிடிவாதம். டாக்டர் கிட்ட கூட போகமாட்டேன்னு சொல்லிட்ட, இல்ல?’’



‘‘என்ன குமார்? எல்லாம் தெரிஞ்சிகிட்டு நீங்ககூட குழந்தை மாதிரி கேக்கறீங்களே? டாக்டர் கிட்ட போனால் விஷயம் வெளியில வந்துடாது? எனக்கு செங்கம்மா இருக்குது. அது போதும். வேண்டிய கசாயத்தைப் போட்டுக் கொடுக்குது. எனக்கு என்ன வேணும்னு கேட்டுக் கேட்டுச் சமைச்சிப் போடுது... இன்னும் என்ன வேணும்?’’

‘‘நாம இரண்டு பேரும் ஒண்ணா இருக்கணும்.’’

‘‘அதான் வாரா வாரம் சேர்ந்து இருக்கோமே.’’

‘‘ஊகூம்... கணவன் மனைவின்னு ஊர்பூரா சொல்லிக்கணும். நான், நீ, கவுரி, குழந்தைங்க எல்லாரும் ஒரே வீட்ல இருக்கணும்...’’

‘‘கொஞ்சம் பொறுங்க, குமார்.’’

‘‘இன்னும் எத்தனை நாளைக்குடா?’’

‘‘எல்லாப் படங்களையும் முடிச்சிட்டேன். ‘பாட்ச் ஒர்க்’தான் பாக்கி இருக்குது. ஒண்ணு இரண்டு வாரத்துல அதுவும் முடிஞ்சிடும். அப்புறம் நான் சொல்லிடறேன்... புதுப்படமெல்லாம் இப்ப நான் ஒத்துக்கிறதே இல்ல. ஏதாவது ஒரு சாக்கு சொல்லித் தள்ளிவிட்டுட்டே இருக்கேன்! எனக்கு இப்ப ஒரே ஒரு குறைதாங்க.’’

‘‘என்னது?’’ என்று கொஞ்சலாக இழுத்து மார்பில் போட்டுக் கேட்டான் முத்துக்குமார்.

‘‘போங்க. நீங்க ரொம்ப மோசம்.’’

‘‘அய்யோ... மார்பில் இருக்கிற அத்தனை முடியையும் இழுத்துராதே தாயே... வலிக்குது.’’

‘‘வலிக்கட்டும். எனக்கு மட்டும் வலி இல்லையா?’’

‘‘ஏய்... உண்மையாகவா?’’

‘‘என்னது?’’

''வலிக்குதா?''

''ரொம்பக் களைப்பா இருக்குங்க! ரொம்ப சந்தோசமா இருக்குது. திகட்ட திகட்ட இவ்வளவு சந்தோசத்தை நான் அனுபவிச்சதே இல்லை... என்ன பண்றீங்க மறுபடி?''

''நம்ம குழந்தை பேசுதான்னு கேக்கறேன்.''

''காதை வயித்து மேல வைச்சிக்கிட்டு... எடுங்க... எடுங்கன்னா... இப்ப எடுக்கலை தலைமுடியை அப்படியே பிடிச்சி...''

''நம்ம குழந்தை ஆணா, பொண்ணா மேகலா?''

''எதுவாயிருந்தாலும் சரிதான். என் குழந்தை.''

''ஆணா இருந்தால் என்ன பேரு?''

''அன்பரசன்.''

''பொண்ணா இருந்தா?''

''அன்பரசி. பிடிச்சிருக்குதா...''

''ம்...''

''என்ன ம்...ம்... பிடிச்சிருக்குன்னா வாயைத் தொறந்து சொல்லுங்களேன்...''

''ஒரே பேரை ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் வைக்கிறதுன்னு நீ முடிவு பண்ணிட்டே...''

''ஆமா... ரொம்ப நாளா யோசிச்சி வைச்ச பேருங்க. நம்ம அன்புக்கு அடையாளமா பிறக்கிற குழந்தை இல்லியா? அதனாலத்தான்... அன்பரசன்! இல்லன்னா அன்பரசி! பிடிச்சிருக்கா?''

''பிடிச்சிருக்கு...''



அன்றைக்கு மாலை அந்த வீட்டை விட்டுப் புறப்பட்ட போது முத்துக்குமார் என்றைக்குமில்லாத மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

திருவான்மியூர் முனையருகில் கவுரிக்கென்று நான்கு முழம் மல்லிகைப்பூ வாங்கிக் கொண்டான். குழந்தை களுக்கென்று அடையாறில் ஒரு இனிப்புக் கடையில் பால் அல்வா வாங்கிக் கொண்டான்.

டி.வி.எஸ். மோட்டார் பைக்கில் திரு.வி.க. பாலத்தரு கில் விரைந்த போது, கடற்காற்று சில்லென்று அவனைத் தழுவி சிலிர்க்க வைத்தது.

இந்த நிமிடம் என்னைவிட அதிர்ஷ்டசாலி யார்?

யாரும் இல்லை என்று கத்தத் தோன்றியது.

அவன் வந்து கொண்டிருந்தது இசைக்கல்லூரி தாண்டி ஒரு திருப்பம். மாநகராட்சி விளக்குகள் முன்னறிவிப்பின்றி விடுமுறை எடுத்துக் கொண்டிருந்தன. மேலே ஆகாயத்தில் நிலா. சுற்றி நட்சத்திரக் காதலிகள். இந்த சந்திரனுக்குத்தான் எத்தனை காதலிகள்! எனக்குக் கூடத்தான் இரண்டு காதலிகள்.

முத்துக்குமார் பின்னால் அசுரவேகத்துடன் வந்த லாரியைக் கவனிக்காமல் மணிமேகலையைப் பற்றி, கவுரியைப் பற்றி நினைத்துக் கொண்டு செல்ல, லாரி அவனுடைய மோட் டார் சைக்கிளை அறுபது கிலோ மீட்டர் வேகத்தில் இடித்தது. முத்துக்குமார் மோட்டார் சைக்கிளில் இருந்து அந்தரத்தில் தூக்கி எறியப்பட்டான்.

மோட்டார் சைக்கிள் ஒரு தரம், இரண்டுதரம், மூன்றுதரம் என்று தீப்பொறி பறக்க உருண்டது. அவன் வாங்கிய மலர்ச்சரம் நடுச்சாலையில் பூப்பூவாக உதிர்ந்தது.

பால் அல்வா சாலைக்கு இனிப்பு தருகிற முயற்சியில் மேலிருந்து துண்டு துண்டாய் சிதறியது.

முத்துக்குமாரின் பாண்ட் லாரியின் மட்கார்டில் சிக்கிக் கொள்ள, லாரி போன வேகத்தில் அவனும் சற்றுத்தூரம் தரையில் இழுத்துச் செல்லப்பட்டு, கவுரியை நினைப்பதா, மேகலாவை நினைப்பதா, ராஜியை நினைப்பதா, செந்திலை நினைப்பதா, அன்பரசன் இல்லை... இல்லை... அன்பரசியை நினைப்பதா என்ற நினைவுக் குழப்பம் ஏற்பட்டு...

டேய்... டேய்... என் உயிர் போய்விடும். லாரியை நிறுத்து... நிறுத்து... என்னை நம்பி கவுரி இருக்கிறாள். பாவம். பார்வை இல்லாதவள். இன்னும் வளராத குழந்தைகள் இரண்டு இருக்கின்றன. பிறக்காத குழந்தை ஒன்றிருக்கிறது. மேகலா இந்த அநியாயத்தைப் பாரேன். இந்த அநியாயத்தைப் பாரேன்... என்னைத் தரையில் வைத்துத் தேய்க்கிறார்கள். மேகலா... மேகலா... மேகலா...

மேகலா... ஆஆஆஆ..... ரூ 20/-

லாரி நிற்காமல் அந்த இடத்தை விட்டு வெகு வேகமாக விலகியது.

54135/6070525



## 16

வடபழனியைக் கடந்து, வலசரவாக்கம் தாண்டித் திரும்பிய ஒரு செம்மண் பாதையின் கோடியில் தெய்வக்கன்னி மணிமேகலையின் வீடு.

காவல் ஆசாமி முன்பு பார்த்தவன் இல்லை. மாறியிருந்தான். இவன் முகத்தில் கடுமை இருந்தது. ஈவு, இரக்கம் ஆகிய சொற்களை எல்லாம் தமிழில் கற்றதே



இல்லை என்று சத்தியம் செய்வான் போலத்தான் தோன்றினான்.

போர்டிகோவில் ஒரு கார் நின்றிருந்தது. யாரோ இறங்கினார்கள். யாரோ அபாரமான குரலில் வரவேற்றார்கள். சற்றுத் தள்ளி கறுப்புத் தட்டியால் மறைக்கப்பட்ட ஒரு மைதானத்தில் பத்துப் பனிரெண்டு கார்கள் மவுனமாக நின்று கொண்டிருந்தன.

வீட்டின் வெளியே தெரிந்த எல்லா சன்னல்களிலும் குளிர்காற்றுப் பெட்டி பொருத்தப்பட்டு, வீடு தன்னையே மூடிக் கொண்டு பாதுகாப்பாக நின்றது.

வீட்டின் மூன்று ஆள் உயரக் கண்ணாடிக் கதவு திறந்தபோது உள்ளேயிருந்து சங்கீதமும், மகிழ்ச்சிக் குரல்களும் தப்பித்து வெளியே வந்தன.

கூடம், அதன் நடுவே தந்த வேலைப்பாடுடன் கூடிய ஒரு அலங்காரமான மேசையில் எவ்வளவு பெரிய கேக் யார் வெட்டுவதற்கோ காத்திருந்த அதில் நான்கு மெழுகுவர்த்திகள்.

மாடிப்படியிலிருந்து அவர்கள் இறங்கி வந்தார்கள். 'தெய்வக்கன்னி' மணிமேகலைதான் முதலில் இறங்கினாள். முகத்தில் சிரிப்பு. இறங்கும் போது கூப்பிய கையைப் பிரிக்காமலேயே கீழே இறங்கினாள். நான்கு ஆண்டு என்பது மிக நீண்ட காலமும் இல்லை. குறுகிய காலமும் இல்லை. காலம் அவள் முகத்தில் ஏற்படுத்திய மாறுதல்களை எல்லாம் அவள் சாமர்த்தியமான ஒப்பனையில் மறைத்திருந்தாள். அவளுடைய அழகான கண்களுக்குக் கீழே இருந்த கருவளையங்களை ரோஜா நிறப் பவுடர் மறைத்திருந்தது. புருவ முடியை வெட்டி சீராக்கியிருந்தாள். உதட்டில் சிகப்புச் சாயம் பூசியிருந்தாள். தலைமுடியைக் கொஞ்சம்

கொண்டை, கொஞ்சம் அலை கூந்தல் என்று பிரித்துவிட்டிருந்தாள். சேலைதான் கட்டியிருந்தாள். கொஞ்சம் பெருத்திருந்தாளோ!

அவளுக்குப் பின்னாலேயே சேது இறங்கி வந்தான். அதே மானேஜர் சேது. நான்கு வருடங்களுக்கு முன்பே அகல நெற்றி. இப்போது இன்னும் அகல நெற்றியாக மாறி இருந்தது. நேரான நேர்மையான மூக்கு இப்போது நுனியில் தோன்றியிருந்தது பரு காரணமாகவோ என்னவோ கொஞ்சம் புடைத்த மாதிரி தெரிந்தது.

நடுவில் குழந்தை. அன்பரசி. அவளுக்கு முத்துக்குமாரின் கண்கள். முத்துக்குமாரின் மூக்கு. நெற்றியில் முடி முன்னால் சீராகக் கவிழ்ந்து வாரி விடப்பட்டிருந்தது. பின்னால் குதிரையின் வால் போல் பின்னப்பட்டிருந்தது. அணிந்திருந்த பட்டுப் பாவாடையின் எல்லா மூலைகளிலும் தங்க இழைச் சரிகை. கூட்டத்தைப் பார்த்த அவள் கண்களில் மருட்சி தெரிந்தது. பயந்த மானின், பயந்த முயலின், பயந்த கன்றுக்கட்டியின் பார்வை.

மேசையை நெருங்கினாள். 'மம்மி' சொல்லிக் கொடுத்த மாதிரியே கேக்கிற்குப் பக்கத்தில் இருந்த கத்தியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டாள். ஒரு பணியாள், பச்சை விசிறித் தலைப்பாகையுடன், வெள்ளைச் சீருடையுடன் வந்து மெழுகுவர்த்திகளை ஏற்ற, அன்பரசி வெளிச்சம் தந்த மெழுகுவர்த்திகளை ஊதி அணைத்தாள்.

கேக்கை வெட்டினாள். அத்தனை பேரும் கைதட்டினார்கள். ஆங்கிலத்தில் பிறந்த நாள் வாழ்த்துப் பாடலைப் பாடினார்கள். அன்பரசி ஒரு துண்டு கேக்கை எடுத்து அம்மாவின் வாயில் ஊட்டி விட்டாள். கூட்டத்தில் அவ்வளவு பெரிய கேக்கும் விநியோகிக்கப்பட்டது.



பாட்டில்கள் உடைக்கப்பட்டன. பீங்கான் தட்டுகளில் உணவு வகைகள் ஆவி பறந்தன.

மணிமேகலையிடம் யார் யாரோ நெருங்கினார்கள். சினிமா சம்பந்தமாக என்னென்னவோ பேசினார்கள். மணிமேகலை சிரித்துச் சிரித்துப் பதில் சொன்னாள். வந்தவர்கள் அவள் பேச்சைக் கவனிப்பதைவிட அவள் உடலைக் கவனிப்பதில்தான் ஆர்வம் காட்டினார்கள் என்று அவர்களுடைய பார்வை போன பாதையில் தெரிந்தது.

மணிமேகலை சுற்றி இருந்தவர்களைப் பார்த்தாள். இவர்கள் அத்தனை பேரும் அவளது உடைகளை உரித்து அதற்குப் பின்னால் என்ன இருக்கிறது என்று பார்ப்பவர்கள். அவளது நடனத்தை திரையில் பார்த்துவிட்டு, நேரிலும் அதேபோல் காட்டுவாளா என்று பார்க்க வந்திருப்பவர்கள். கூரையைத் தொட முயன்ற சிகரெட் புகையினூடே மணிமேகலை ஒரு நேர்மையான முகமாவது தெரிகிறதா என்று பார்த்தாள்'' முத்துக்குமாரின் முகம் போல.

ஊகூம் இல்லை. கூட்டம் கலைய, இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆகிவிட்டது. மழை விட்டும் நிற்காத தூவானம் போல நின்றிருந்து ஒன்றிரண்டு பேரை கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அனுப்ப பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது.

தன் அறைக்குத் திரும்பி வந்தாள். அறையில் மங்கலான விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது. கட்டிலில் அன்பரசி களைத்துப் போய்த் துங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரே ஆறுதல் வாழ்க்கையில் அவளுக்குக் கிடைத்த ஒரே நல்முத்து. வரவர அந்த முகத்தையும் தோற்றுவிடுவோமோ என்ற பயம் அவளை உடல்சிலிர்க்க வைத்தது.

கடவுளே ... கடவுளே... எப்போ எனக்கு விடுதலை?

படுக்கையில் அப்படியே சரிந்தாள். உடை மாற்றத் தோன்றவில்லை. தலையணைக்கடியில் இருந்த சாவியை எடுத்து, கட்டிலில் கீழே அவளுடைய யோசனைப்படி பொருத்தப்பட்டிருந்த ஒரு மர டிராயரைத் திறந்து. வெல்வெட் துணி மூடியிருந்த, நகைப் பெட்டி போல் தெரிந்த அந்தப் பெட்டியை எடுத்துத் திறந்தாள்.

முத்துக்குமார் இருந்தான். தங்க பிரேமுக்குள் அடைபட்டிருந்தான். அவளால் அவனுடைய படத்தைத்தான் தங்க பிரேமுக்குள் அடைக்க முடிந்தது. அவனுடைய உருவத்தை இதயத்தில் அழியாச் சித்திரமாக எழுதிக் கொள்ள முடிந்தது. அவ்வளவுதான். மற்றபடி முத்துக்குமார் இல்லை. அவளுக்கென்று ஒரு அன்பரசியைக் கொடுத்த முத்துக்குமார் இல்லை. அழுதாள் இரகசியமாக...

''போயிட்டீங்களே முத்துக்குமார் போயிட்டீங்களே. அன்னிக்கு ஒரேயடியா போயிடப் போறது தெரிஞ்சிதான் என்கிட்ட அவ்வளவு அன்பா இருந்தீங்களா? பாவி, உங்களை நானே அனுப்பி வைச்சிட்டேனே...''

கதவின் கைப்பிடி திறக்கப்பட்டது அறியாமல், வாசலில் சேது மரவாசலில் சாய்ந்து நின்று அவளையே உற்றுப் பார்ப்பதை அறியாமல், மணிமேகலை அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சேது உள்ளே வந்தான். கதவை அறைந்து சாத்தினான்.

சத்தம் கேட்டு அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவசர அவசரமாகப் படத்தை வெல்வெட் பெட்டியில் போட்டு மூடினாள்.

''நீங்க இங்கே ஏன் வந்தீங்க? வெளியே போங்க. பிளீஸ் வெளியே போங்க...''



''நான் வராம வேற யாரு கண்ணு இங்க வருவாங்க?'' என்று கேட்டசேதுவிடமிருந்து குப்பென்று அயல்நாட்டு சாராய நாற்றம் வீசியது. சேது குடித்திருந்தான். அளவுக்கதிகமாக. அவள் சொல்வதைக் கேட்கும் நிலையில் இல்லை.

அவள் படுக்கையில் அவளுக்குப் பக்கத்தில் எருமைமாடு சாணம் போட்டாற் போல் உட்கார்ந்தான். அவள் கம்பளிப் பூச்சி போல சுருங்கிக் கொண்டாள்.

''என்னம்மா சுருங்கிக்கிறே? நான் உன் கணவன். அஞ்சுமாசம் முழுகாமல் இருந்த உன் மானம் கப்பலேறக் கூடாதுங்கிறதுக்காக பப்ளிக்கா தாலி கட்டினவன். நீ என்னடான்னா இன்னும் அந்த வெறும் பயலை நினைச்சிட்டிருக்கே...''

''சேது, பிளீஸ். நீங்க குடிச்சிருக்கிங்க. போயிடுங்க. நாளைக்குக் காலையில பேசிக்கலாம். அன்பரசி எழுந்துக்கப் போறா.''

''எழுந்துக்கட்டுமே. என்ன இப்போ? நானே சொல்றேன் அவள்கிட்ட அம்மா அன்பரசி.எழுந்துக்கம்மா. உனக்கு இரண்டு அப்பா. பெத்தவன் ஒருத்தன் வளர்த்தவன் ஒருத்தன்.''

''ஐயோ... சேது! குழந்தை எழுந்துக்கப் போறா. போயிடுங்க'' மணிமேகலை இரண்டு கையையும் சேர்த்துக் கூப்பினாள்.

''போயிடுங்க. போயிடுங்கன்னு சொல்றியே தவிர, ஒரு நாளாவது 'வாங்க, வாங்கன்னு' என்னைக் கூப்பிட்டிருக்கியா? நான் யாரு? உன் கணவன். அஞ்சு மாசம் முழுகாமல் இருந்த...''

''போதும்... நான் தப்பு பண்ணிவிட்டேன். உங்களைத் தாலி கட்டச் சொன்னேன். பாருங்க. அது என் தப்புத்தான்

உங்களைப் போய் ஒண்ணும் தெரியாத அப்பாவின்னு நினைச்சேன் பாருங்க. அது என்தப்புத்தான். செத்துப் போன முத்துக்குமார்தான் என் கணவன்னு சொன்னால் அது அவரோட குடும்பத்துக்கு கெட்ட பெயரை கொடுத் துடும்னு நினைச்சி உங்களுக்குக் கழுத்தை நீட்டினேன் பாருங்க... அது என் தப்புத்தான்.''

''தெரியுதா மணி - மேகலை. என் தெய்வக்கன்னி. இந்தா இந்த கான்டிராக்டில் ஒரு கையெழுத்துப் போடு'' அவன் தள்ளாடிக் கொண்டே பாண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு பேப்பரை எடுத்து, உதறி நீட்டினான்.

''என்ன கான்டிராக்டு அது?''

''கேசவகீர்த்தியோடு சொந்தப் படம். அவரே டைரக்ஷன், அவருக்கு உன் கால்ஷீட் கொடுத்திருக்கேன். கையெழுத்துப் போடு.''

''என்னைக் கேக்காமல் உங்களை யாரு என் கால் ஷீட்டைக் கொடுக்கச் சொன்னது?''

''நான் யாரைக் கேட்கணும்? உன்னையா? உன்னைக் கேட்டா வேணாம்னுதான் சொல்லப் போறே. அப்புறம் நான் எப்படி சம்பாதிக்கிறதாம்? இந்தப் புது வீடு இவ்ளோ பெரிசா கட்டியிருக்கேனே? எப்படி வந்ததுன்னு நினைக்கிறே? நீ நடிச்சி சம்பாதிச்சதுதான். நீ சம்பாதிக்கிறது எல்லாம் யாருக்கு சொந்தம்னு நினைக்கிறே? எனக்குத்தான்! மணிமேகலை... என் தெய்வக்கன்னி! உனக்கு நடிக்க விருப்பம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்காக நீ நடிச்சித்தான் ஆகணும். ரொம்ப முரண்டுபிடிச்சேன்னு வை. பத்திரிகைக்காரங்களைக் கூப்பிடுவேன். சூடா செய்தி கொடுப்பேன். 'அன்பரசியோட உண்மையான தகப்பன் யார்?' எப்படி தலைப்புச் செய்தி?''



''என்னைக் கொன்னு போட்டுடுங்க சேது. சந்தோசமா செத்துப் போறேன். என்னை இனிமேல் நடிக்கச் சொல்லாதீங்க. ஒரு குடும்பப் பொண்ணு நடிக்க வந்திருக்கிற மாதிரியா நினைச்சிக்கிட்டு என்னை நடிக்க வைக்கிறாங்க? முழம் நீளத்துக்கு ஒரு துணியைக் கொடுத்துட்டு அதைக் கட்டிக்கிட்டு நடிக்கச் சொல்றாங்க. எனக்கு உடம்பெல் லாம் கூசுது.''

''நீ பெரிய பத்தினி தெய்வம் பாரு. அதான் உடம் பெல்லாம் கூசுது. முதல்ல எவனோ ஒரு முகம் தெரியாத காதலனோட வீட்டைவிட்டு ஓடிவந்தே. சுத்தமா இருந் தேன்னு சொன்னால். எவன் நம்புவான்? அப்புறம் ரகசியமா நீயே ஒரு காதலனைத் தேடிக்கிட்டே. சுத்தமா இருந்தேன்னு சொன்னால், நான் நம்புவேன்? நடிக்க வந்துட்டா எப்படி நடிக்கச் சொல்றாங்களோ அப்படித்தான் நடிக்கணும். போடு கையெழுத்து'' என்று சொல்லிவிட்டு பாக்கெட்டில் இருந்து ஒரு அலுமினியக் குப்பியை எடுத்து மூடியைத் திறந்தான். அதில் இருந்ததை 'கடகடவென்று வாயில் சரித்துக் கொண்டான்.

''உன்னை நம்பி எத்தனை பேர் முதலீடு பண்ணியிருக் கான். அத்தனை பேரையும் மொட்டையடிச்சிரலாம்னு பாக்கறியா? ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க. அந்தப் பயல் முத்துக்குமார் எப்படி செத்தான்னு நினைக்கிறே? தண்ணியடிச்சிட்டுப் பேசறேன்னு நினைக்காதே. சத்தியம். சத்தியமாச் சொல்றேன் ஏதோ ஒரு லாரி அச்சா? பைத்தியமே! அந்த லாரியே கேசவகீர்த்தி ஏற்பாடு பண்ணின லாரிதாம்மா. நீ பாட்டுக்குக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சினிமாவை விட்டுப் போயிடுவே. நாங்க எல்லாரும் நடுவிரலைச் சூப்பிக்கிட்டு உக்காந்திருக்கணுமா? அதான் அப்படி ஒரு ஏற்பாடு பண்ணினான் அந்த டைரக்டர்.''

மணிமேகலையின் காலுக்குக் கீழிருந்து பூமி நழுவுவது போல இருந்தது.

என்ன சொல்கிறான் இந்த குடிகாரன்? உண்மையாகவா? முத்துக்குமார் செத்துப் போனது இவர்களது சூழ்ச்சியாலா? கடவுளே? கடவுளே!

மணிமேகலை அவன் நீட்டிய கான்டிராக்டில் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டாள்.

அவன் அதை வாங்கிப் பார்த்தான். மகிழ்ச்சியடைந்தான்.

''மணிமேகலை - தெய்வக்கன்னி. நான் சொன்னதையெல்லாம் மறந்துவிடு. அதெல்லாம் பழைய கதை. அதைக் கிளறணும்னு பார்க்காதே. போலீஸ்காரன்கிட்ட போக நினைக்காதே. ஆதாரம் ஆதாரம்னு ஒண்ணு வேணுமே. அது எங்கேன்னு கேப்பான். என்ன?''

அவள் சற்றும் எதிர்பாராத தருணத்தில் அவன் நெருங்கி வந்து கட்டியணைத்து, அவள் உதடுகளில்...

''ச்சீ'' என்று அவனைத் தள்ளினாள் மணிமேகலை.

உதடுகளில் அமிலத்தை வைத்துத் தேய்த்த மாதிரி இருந்தது.

''உன் கணவனம்மா. எனக்கு இந்த சலுகை கூடவா கிடையாது?''

''அம்மா...''

திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்தாள்.அன்பரசி படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்தாள்.

''ஏம்மா, சேது மாமா உனக்கு முத்தம் கொடுக்கிறாரு?''

கொழுந்துவிட்டு எரிகிற தீயில் இறங்கிய மாதிரி இருந்தது மணிமேகலைக்கு.





## 17

குளிரூட்டப்பட்ட பென்ஸ் கார் மணிமேகலை வீட்டு போர்டிகோவில் தயாராக நின்றது. அதன் டிரைவர் தொப்பியைக் கழற்றி பானட் மீது வைத்துவிட்டு. காரின் உடலில் இல்லாத அழுக்கைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

வீட்டின் உள்ளேயிருந்து மணிமேகலை வெளிப்பட்டாள். அவளுடைய ஆள்காட்டி விரலைப் பிடித்துக் கொண்டு அன்பரசி அழுது கொண்டிருந்தாள். ''கண்களில் இருந்து நீர் பருவ மேகம் பெய்யும் மழை போல் இறங்கிக் கொண்டிருந்தது.

''போ... போய்க் காரில் உக்காரு.''

''நீ வரப் போறதில்லையா?''

''நான் சூட்டிங்குக்குப் போகணும் ராஜா. அதான் சுலோசனா ஆன்டி வர்றாங்களே. உன் கூட.''

''ஊட்டி வரைக்குமா?''

''ஆமாண்டா கண்ணு. ஊட்டி வரைக்கும் சுலோசனா ஆன்டி வருவாங்க.''

''நான் ஒண்ணு கேக்கட்டுமா?''

''என்ன ராஜாத்தி?''

''நீ எனக்கு அம்மா இல்லியா?''

''அன்பரசி?'' என்று அதிர்ந்து போய் கேட்டாள் மணிமேகலை.

''சேது, எனக்கு அங்கிள்தானே?''

''ஆமா.''

''பின்ன ஏன் சேது அங்கிள் உன்னைக் கிஸ் பண்ணாரு? டாடிதானே மம்மியைக் கிஸ் பண்ணனும்? என் டாடிதான் அமெரிக்கா போயிருக்காரே?''

''அன்பரசி..'' மணிமேகலையால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. அழத் தொடங்கினாள். கையில் துப்பாக்கி இருந்திருந்தால் நிச்சயம் சேதுவை, அவனது செயலுக்காகச் சுட்டிருப்பாள்.

''நெஞ்சைத் தொட்டு சொல்லு.''

''என்னடா?''

''உனக்கு என் மேல் ஆசையில்லையா? நீ என் மம்மி இல்லையா?''

''என்னைக் கொல்றியேம்மா...''

''பின்ன ஏன் என்னை ஊட்டிக்கு அனுப்பறே? நான் இங்கேயே ஏதாவது கான்வென்டில் சேர்ந்து படிக்கிறேன்.''

''நீ நல்லாப் படிச்சி மதர் திரேசா மாதிரி வரணும். அன்பரசி. அதுக்கு நீ ஊட்டியில்தான் படிக்கனும்.''

''வேணாம். நான் இங்கயே படிக்கிறேன். என்னை கவுரி பெரியம்மா வீட்ல விட்டுடு. அங்க அண்ணா இருக்கான். அக்கா இருக்குது. என்னை நல்லாப் பார்த்துக்கிறேன்னு சொன்னாங்க. எங்க ஊட்டி வார்டன் ரொம்ப மோசம். எப்பப் பாரு என்னைத் திட்டறாங்க.''

''இனிமே திட்டமாட்டாங்க. அம்மா போன்ல உங்க வார்டன் கிட்ட எங்க அன்பரசிக்குட்டியைத் திட்டாதீங் கன்னு சொல்லிவிட்டேன். ஜனா... குழந்தைக்கு சாக்லேட் வாங்கிக் கொடுக்கச் சொன்னேனே. லாலிபாப் வாங்கிக் கொடுக்கச் சொன்னேனே...''



''இதோ இருக்கும்மா.''

''ஹை! லாலிபாப்.''

''போ, நிறைய லாலிபாப் கொடு. ஜனா. ரெயில்ல சாப் பிட்டுக்கிட்டே போகலாம்.''

''ஆனால், அடுத்த தடவை சென்னைக்கு வந்தால் திரும்பிப் போக மாட்டேன்.''

''வேணாம்..''

''பிராமிஸ்?''

''சத்தியமா நீ எங்கவும் போக வேண்டாம். இங்கேயே இருக்கலாம்.''

''டாட்டா...''

''ஒரு முத்தா கூட கிடையாதா?''

''ஊகூம். நான் சென்னைக்கு மறுபடி வருவேன் பாரு. அப்ப கொடுக்கிறேன். நிறைய முத்தா.''

மணிமேகலை அன்பரசியை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். அவள் திமிறத் திமிற முத்தமிட்டாள்.

கண்களில் நீர்மல்க கையசைத்தாள்.

கார் அவள் பார்வையிலிருந்து மறையும் வரை குழந்தை பின் சன்னல் வழியாகக் கையை நீட்டி ஆட்டிக் கொண்டே இருக்க, மணிமேகலை உடல் குலுங்க அழுது கொண்டே கையை அசைத்தாள்.

மணிமேகலை வீட்டுக்குள் நுழைந்த போது சேதுவைத் தேடினாள். இல்லை. எங்கே போயிருப்பான் என்று தெரியவில்லை. அடிப்பட்ட பெண் புலியாக இருந்தாள். முத்துக்குமாரை கேசவகீர்த்தி ஆள் வைத்து லாரியில் அடித்துக் கொன்னானா? அதற்கு இவன் உடந்தையாக இருந்தானா?

என்ன செய்வேன்? ஒரு பெண் தனியாக என்ன செய்வேன்? முத்துக்குமார் போனபின்பு வாழ்க்கையில் என்ன பிடிப்பு இருந்ததென்று நான்கு வருடங்கள் வாழ்ந்தேன்?

அவள் விடுவிடுவென்று தனது அறை நோக்கிச் சென்றாள் போனை அணுகினாள். எண்ணைச் சுழற்றினாள்.

''அலோ...''

''அலோ! வக்கீல் இருக்காரா?''

''நீங்களாம்மா. நான் வக்கீல்தான் பேசறேன்.''

''நான் சொன்னது என்ன ஆச்சி சென்னிமலை?''

''எல்லாம் தயாரா வைச்சிருக்கேம்மா. கையெழுத்துப் போட வேண்டியதுதான் பாக்கி.''

''இப்பவே முடிச்சிடலாம். சென்னிமலை.''

''சேது இல்லியம்மா?''

''இல்ல. நான் எங்க வரணும் சொல்லுங்க. வரேன்.''

வக்கீல் சொன்னதைக் கேட்டுக் கொண்டு தொலை பேசியின் தொடர்பைத் துண்டித்தாள். மணிமேகலை.



18

''தயாரா?''

''தயார் சார்.''

''சைலன்சு.''

''லைட்ஸ் ஆன்.''

''ஆக்ஷன்.''



''நினைத்த நேரம் சிரித்து என்னை

அணைத்துக் கொண்ட கண்மணியே

நெஞ்சில் நினைவை ஏற்றிவைத்து

தேசம் மறந்தது ஏன் கனியே?''

மணிமேகலை கையில், சாடின் பாவாடை அணிவிக்கப் பட்ட பொம்மை ஒன்றை வைத்துக் கொண்டு பாட்டுக்கு வாயசைத்தாள். அவள் கண்களில் இருந்து அவளை அறியாமலேயே நீர் பெருகியது.

''கட்'' என்றார் கேசவகீர்த்தி.

காமிராவில் பிலிமின் சுழற்சி நின்றது. மணிமேகலையைக் குறி வைத்து வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்த அத்தனை விளக்குகளும் அணைந்தன.

கேசவகீர்த்தி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே மணிமேகலையை பிரமிப்புடன் பார்த்தான். மணிமேகலை அவருக்கு முதுகை காட்டிக் கொண்டிருந் தாள்.

''மணி...'' என்று அவளருகில் சென்று தோளைத் தட்டினார். அப்போதுதான் உணர்வு வந்தவளைப் போல மணிமேகலை அழுவதை நிறுத்தினாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவன் பக்கம் திரும்பிச் சிரித்தாள்.

''இதான் வேணும் எனக்கு. கேரக்டராவே மாறிடறே பாரு. இன்னிக்கு சினிமாவில் உன்னை அடிச்சிக்க ஆள் கிடையாது. சும்மாவா, இரண்டு தடவை ஊர்வசிப் பட்டம் வாங்கின ஆளாச்சே. சரக்கில்லாமலா ஊர்வசி பட்டம் கிடைக்கும்? மணி இப்பவே சொல்லிவிட்டேன். இது நான் வேற பானருக்காக பண்ற படம். என் சொந்தப் படத்துக்கு

உன்னை நம்பிதான் லட்ச லட்சமாக கொட்டியிருக்கேன். இனிமேல் மணிமேகலையால் இன்னொரு தடவை இந்த மாதிரி நடிக்க முடியாதுன்னு ஊரில் இருக்கிற அத்தனை பேரும் பேசற அளவுக்கு உன் நடிப்பு இருக்கணும். ஓ.கே.?''

''என்ன மணி, சொல்லிவிட்டாயா?'' என்று சேது திடீரென்று இடையில் புகுந்து கேட்டான்.

மணிமேகலை அவனைப் புரியாமல் பார்த்தாள்.

''மணி என்கிட்ட எதுவும் சொல்லணுமா?'' கேசவகீர்த்தி கேட்டார்.

''ஒண்ணுமில்ல கேசவ்! நீங்க உங்க சொந்த தயாரிப்பில் மணியை கதாநாயகியா போட்டிருக்கீங்க இல்ல? அதுக்காக நன்றி சொல்ற மாதிரி மணி உங்களுக்கு ஒரு விருந்து கொடுக்கணும்ன்னு சொல்லிட்டிருந்தா.''

''அப்படியா மணி எங்கிட்ட சொல்லவே இல்லியே?''

''ஸ்பெஷல் பார்ட்டி கேசவ்'' என்றான் சேது ஒரு கண்ணை மூடி ஒரு கண்ணைத் திறந்து.

''மிஸ் பண்ண மாட்டேன். என்றைக்கு மணி?''

''நாளைக்கு ராத்திரி. நம்ம வீட்ல. என் ரூம்லேயே வைச்சுக்கலாம். நீங்க, சேது, நான், மூணு பேரு மட்டும்'' என்றாள் மணிமேகலை ரகசியமாக.

கேசவகீர்த்தி உற்சாகத்தில் அத்தனை பேர் எதிரிலும் மணிமேகலையின் இடுப்பில் தட்டினான்.

மணிமேகலை தானே காரைச் செலுத்தினாள். சேது கேசவகீர்த்தியுடனேயே ஒட்டிக் கொண்டு 'தனக்கு வேலை இருக்கிறது' என்று சொன்னது அவளுக்கு ஒரு விடுதலை உணர்வை அளித்திருந்தது.



முன்னொரு நாள் முத்துக்குமார் கொண்டு வந்து கொடுத்த பர்தாவை அணிந்திருந்தாள்.

அரை மணி நேரத்தில் அவள் அந்த வீட்டை அணுகினாள். வாசலில் காரை நிறுத்தினாள். எல்லாக் குடித்தனக்காரர்களையும் தாண்டிக் கொண்டு குறிப்பிட்ட கதவை அடைந்து தட்டி, கதவு திறந்ததும் உள்ளே சென்றாள். நுழைந்தவுடன் கதவைச் சாத்தினாள்.

''யாருடா, செந்தில்?''

''மேகலா சித்திம்மா'' என்றான் செந்தில்.

''மணி... மணி...'' என்று உட்கார்ந்த இடத்தில் இருந்து எழுந்து தட்டுத் தடுமாறி அவளை அடைந்தாள் கவுரி.

அவளை அணைத்துக்கொண்டாள் மணிமேகலை.

அந்த கூடத்தில் முத்துக்குமாரின் படம் பெரிதாக்கப் பட்டு தொங்க விடப்பட்டிருந்தது. போன வாரம் அணிவித்த மாலையாக இருக்க வேண்டும். சருகாகி ஒவ்வொன்றாய் உதிர்ந்து. இப்போது நார் மட்டும் சவலைக் குழந்தை மாதிரி தெரிந்தது. நார் மட்டும் மிச்சமிருந்தால் யார் ரசிப்பார்கள்? முத்துக்குமார் கண்ணாடித் தடுப்பை மீறி, அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''என்ன மணி பேசவே மாட்டேன்கிறே... எங்க மேல கோபமா?''

''ஆமா...''

''ஏம்மா?'' என்று பதறிப் போனாள் கவுரி.

செந்தில் இப்போது நன்றாக வளர்ந்து விட்டிருந்தான். ஒன்பது வயதுப் பையன். இரண்டும் கெட்டான் பருவம். அவனுக்கு ஓரளவு புரிய ஆரம்பித்திருக்கும். ராஜி பென்சி

லின் முனையை வாயில் வைத்துக் கொண்டு, நோட்டுப் புத்தகம் விரித்தபடியே இருக்க அவளையே பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன கோவம்னு சொல்லலியே...''

''இந்த வீட்டைக் காலி பண்ணிடுங்க. வேற ஒரு பெரிய வீடாப் பார்த்துக்கிட்டுப் போலாம்னு நான் எத்தனை தடவை சொல்லிவிட்டேன். கேட்டியா? பிடிவாதம்.''

''இல்ல மணி. இதில அவரு இருந்தாரா? அதனாலத்தான் காலி பண்றதுக்கு மனசு வரல்ல. இதோ இந்த சேர்லதான் அவர் உக்காருவாரு. இந்த இடத்தில்தான் நின்னுக்கிட்டு உடற்பயிற்சி பண்ணுவாரு. பண்ணி முடிச்சவுடனே அவருக்கு வேர்த்துவிடும் மணி. நான்தான் டவலால துடைச்சி விடுவேன்'' என்றவள் மணிமேகலையின் காதருகே நெருங்கினாள். ''அவரோட வேர்வை வாசனை இல்லாமல் எனக்கு இப்ப ரொம்ப கஷ்டமாயிருக்கு. மணி. இந்த வீட்டை விட்டால், எனக்கு அவரோட ஞாபகம் இல்லாமல் போயிடுமோன்னு பயமாயிருக்கு. கோவிச்சுக்காத மணி. கொஞ்ச நாள் போவட்டும். எனக்கு உன்னை விட்டால் வேற யாரு இருக்காங்க? நீ போடற சாப்பாடுதானே...''

''அப்படியெல்லாம் பேசாத கவுரி. என்னவோ நான்தான் இந்தக் குடும்பத்தை தாங்குகிறமாதிரி. தெரியாமத்தான் கேக்கிறேன். நீ தையல் மிஷின்ல எதுக்குத் துணியெல்லாம் தைக்கிற? சுத்தி இருக்கிற அத்தனை குடித்தனக்காரங்க ரவிக்கையும் நீதான் தைச்சிக் கொடுக்கறியாமே. என்னை நம்பி இருக்கிறவளா இருந்தால் இந்த வேலையைச் செய்வியா, நீ? ஊசி கையில் குத்திடிச்சின்னா என்ன பண்றது? முதல்ல ஒழுங்கா தையல் போட முடியுமா உன்னால?''

மணிமேகலை கைப்பையில் இருந்து ஒரு அழகான கைக் கடிகாரத்தை எடுத்து செந்திலின் கையில் கட்டிவிட்டாள்.



ராஜியின் கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலி ஒன்றைப் பூட்டிவிட்டாள்.

''அம்மா, சித்தி எனக்கு வாச்சு கொடுத்திருக்காங்க.''

''அம்மா, சித்தி எனக்கு செயின் மாட்டியிருக்காங்க''

''ஒவ்வொரு தரமும் இப்படி ஏதாவது செய்யணுமா, மணி?''

''இதிலதான் எனக்குக் கொஞ்சமாவது நிம்மதி கிடைக்குது கவுரி. வந்தவளை என்ன சாப்பிடறேன்னு கூட கேக்கமாட்டியா?''

''விருந்தாளிகளைத்தான் கேக்கணும். மணி.''

''அப்ப சரி... நீ இப்படியே உக்கார்ந்துட்டிரு. நான் காபி போட்டு உனக்கு கொடுக்கறேன். அப்படியே ராத்திரி சாப்பாட்டையும் நான் இங்கே சாப்பிட்டுப் போறேன். இன்னிக்கு என்ன குழம்பு?''

''பூண்டுக் குழம்பு வைச்சேன் மணி. நீ சாப்பிட வருவேன்னு தெரிஞ்சிருந்தா ஏதாவது சிறப்பா பண்ணியிருப்பேன். டேய், செந்தில், பாய் கடைக்குப் போய் ஆறு முட்டை வாங்கிட்டு வாப்பா.''

''அதெல்லாம் வேணாம் கவுரி.''

''நீ சும்மாரு மணி. நீ போடா.''

''அண்ணா நீ சொன்னவுடனேயே போயிட்டான்மா.''

''கவுரி! நான் எதுக்கு வந்தேன்னே உன்கிட்டச் சொல்லலியே...''

''சொல்லு மணி.''

''நாளன்னிக்கு என் பிறந்த நாளு?''

''எனக்குத் தெரியாதே மணி.''

"நடிகை என்னிக்குப் பிறந்த நாளைக் கொண்டாடியிருக்கா? உனக்கு மட்டும் இல்ல, யாருக்குமே தெரியாது. இந்தத் தடவை பிறந்த நாளை சிம்பிளா உங்க கூட கொண்டாடலாம்னு இருக்கேன். அதனால் நாளன்னிக்குக் காலையில் நீங்க மூணு பேரும் நம்ம திருவான்மியூர் வீட்டுக்கு வந்துடறீங்களா? நாலு பேரும் சேர்ந்து கோவிலுக்குப் போவோம். அங்கேயே சாப்பிடுவோம். ஒரே ஒருநாள்... நானும் நீயும், நம்ம முத்துக்குமாரைப் பத்திப் பேசிக்கிட்டு சந்தோசமா இருப்போம். என்ன வர்றீங்கதானே?"

"வாறோம் மணி."



## 19

"ரொம்ப நாளைக்கப்புறம் நீ இன்னிக்குத்தான் பழைய மணியா இருக்கே" என்றான் கேசவகீர்த்தி.

அந்த அறையில் அவர்கள் மூன்று பேர் மட்டும்.

மணிமேகலை, கேசவகிர்த்தி, சேது.

மணிமேகலை புன்முறுவல் செய்தாள். பதில் சொல்லாமல் கேசவகீர்த்தி கையில் ...த்திருந்த கோப்பையில் மதுவை நிரப்பினாள். சேது ...விலும் ஒரு மதுக் கோப்பை.

...ப்பாயின் மீது இருந்த பீங்கான் தட்டில் கோழி வறுவல். ...ந்தது.

...கீர்த்தி ஒரு கோழித் துண்டைக் கடித்துக் கொண்டே ... ஒரு கிளாஸ் ஊத்திக்கயேன் மணி."



"நான் என்றைக்குக் குடிச்சிருக்கேன்? எனக்கு லைம் ஜூஸ் போதும்."

சேது கோப்பையில் இருந்ததை அப்படியே சரித்துக் கொண்டான். மணிமேகலை இரண்டாகத் தெரிந்தாள். கேசவகீர்த்தி இரண்டாகத் தெரிந்தார்.

"சேது..."

"ம்... என்ன வேணும், கேசவ்? நீங்க எது வேணும் மானாலும் கேளுங்க" என்று குழறினான் சேது.

"எனக்கு மணிமேகலை வேணும்."

"எடுத்துக்குங்க கீர்த்தி, உங்களுக்கில்லாத மணியா? ஆத்துல போற தண்ணி... அம்மா குடி... ஐயா குடி... அள்ளுனா அப்படி ஒண்ணும் குறைஞ்சிர மாட்டா. என்ன மணி? ஸ்பெஷல் பார்ட்டின்னது இதானே..."

"சேது..."

"பார்த்தியா? நான் தப்பா நினைச்சுக்க மாட்டேன், மணி. ஏன் வேலைக்காரங்களை எல்லாம் முன்னாலயே வீட்டுக்கு அனுப்புனே? இதுக்காகத்தானே... இதெல்லாம் இங்க சகஜம். என்ன சொல்றே?"

"இந்த பாட்டிலை முடிச்சப்புறம் பார்த்துக்கலாம். சாப்பாடு ஆறிட்டா நல்லா இருக்காது. டின்னரையும் முடிச்சிட்டு அப்புறம் வைச்சிக்கலாம்."

"கீர்த்தி, சொன்னேனா இல்லியா? மணி படிஞ்சிடுவான்னு. படிஞ்சிட்டா பாருங்க. நான் ஒரு கணக்கு போட்டா, அது தப்பவே தப்பாது கேசவ்."

கேசவகீர்த்தி கையிலிருந்த கோப்பை மதுவை ஒரே மடக்கில் சரித்துக் கொண்டு கோப்பையை வீசியடித்தான். 'க்ளாங்' என்று எதிலோ மோதி உடைந்தது கோப்பை. அவன்

மணிமேகலையை ஆவலுடன், காதலுடன் காமத்துடன் நெருங்கினான்.



## 20

விடியற்காலை.

அந்த ஆட்டோ திருவான்மியூர் தாண்டி விரைந்து, திரும்பி, செந்தில் அடையாளம் காட்டிய வேலிப் படலின் முன்னால் நின்றது.

செந்தில் இறங்கினான். ராஜிக்குட்டி இறங்கினாள். அம்மாவைக் கைப்பிடித்து இறக்கிவிட்டாள்.

வேலிப்படலின் அருகில் நின்றிருந்த வேலையா, ''வாங்கம்மா'' என்று வரவேற்றான்.

''மணி இல்ல?''

''உள்ள இருக்குதும்மா. நீங்க வந்தால் மட்டும் உள்ளார விடச் சொன்னாங்க. நான் காவலுக்கு இருக்கேன். செங்கம்மா மணிக்குப் புடிச்ச புட்டையும் கொண்டகடலை குழம்பையும் பண்ணிட்டு இருக்குது.''

''சித்தி...'' என்று குரல் கொடுத்துக் கொண்டே வீட்டில் நுழைய முயன்ற செந்திலை வேலையா தடுத்து நிறுத்தினான்.

''தம்பி... இந்தக் கடிதத்தை முதல்ல அம்மாவுக்குப் படிச்சிக் காட்டுப்பா...''

''கடிதமா?''

''ஆமம்மா... மணிதான் கொடுத்தது. உங்களைப் படிச்சிப் பார்த்துட்டு உள்ள வரச்சொல்லிச்சி.''

''என்னப்பா சொல்றே நீ?'' என்று கவுரி, மணிமேகலைக்காக பிறந்த நாளுக்காக வாங்கி வந்திருந்த சேலைப் பார்சலை அழுத்திக் கொண்டு கேட்டாள். ''மணி எப்ப வந்தா?''



''விடிகாலை நாலு மணிக்கே வந்திரிச்சிம்மா'' என்றான் வேலையா அடக்கமாக.

''செந்தில் அந்த லெட்டரைப் படிப்பா...''

''அன்புள்ள கவுரி...

செந்தில் இதை உனக்குப் படித்துக் காட்டுவான் என்ற நம்பிக்கையில் உனக்கு எழுதியிருக்கிறேன்.

''நான் பிஞ்சியிலேயே பழுத்துவிட்டேன் கவுரி. இல்லையென்றால் பதினைந்து வயதிலேயே காதல் அது இது என்று நினைத்துக் கொண்டு ஊர்விட்டு ஊர் ஓடி வந்திருப்பேனா? சென்னைக்கு வந்த பிறகுதான் நான் ஏமாற்றப்பட்டது தெரிந்தது. அப்புறம், யாரையோ பழிவாங்குகிறேன் என்று நினைத்துக் கொண்டு என்னை நானே பழிவாங்கிக் கொண்டு விட்டேன்.

''ஆம், நடிகையாகிவிட்டேன். நான் தேடிய பணம் வந்தது. புகழ் வந்தது. ஆனால், என் வாழ்க்கை? அது தொலைந்து போய்விட்டது. எனக்கென்று ஒரு கணவன், எனக்கென்று ஒரு குழந்தை என்று நான் ஏங்கிய சமயத்தில்தான் முத்துக்குமாரை சந்தித்தேன். காதலித்தேன்.

''உனக்குத்தான் எவ்வளவு பெரிய மனது கவுரி. உன் முத்துக்குமாரை எனக்காக விட்டுக் கொடுத்தாய். நான் எதை அடைய ஏங்கினேனோ அது எனக்குக் கிடைத்து விட்டது. கண்நிறைந்தகணவன். அவன் கொடுத்த குழந்தை, அன்பரசி.

''நான் பாவம் பண்ணியவள் கவுரி. அதனால்தான் அன்பரசி பிறப்பதற்கு முன்னாலேயே என் கணவனை இழந்துவிட்டேன். பூவும் பொட்டுமாய் இருந்த உன்னையும் அமங்கலி ஆக்கிவிட்டேன்.

''அந்த உறுத்தல் என்னை விட்டுப் போகவில்லை. அதனால்தான் உன்னை நிராதரவாக விட்டுவிடக் கூடா தென்று என்னால் முடிந்ததைச் செய்தேன்.

''உனக்கு ஒன்று தெரியுமா கவுரி? என் பெண், இல்லை நம் பெண் அன்பரசி என்னை என்ன கேட்டாள் தெரியுமா? 'உனக்கு என் மேல் பிரியமே இல்லை. நீ என் அம்மாவே இல்லை. அதனால்தான் என்னைப் படிக்க வைப்பதற்கு ஊட்டிக்குத் தனியாக அனுப்புகிறாய்' என்று கேட்டாள்.

''இல்லை கவுரி, அவள் மேல் இருக்கும் பிரியத்தில்தான் செய்தேன். என்னிடம் இருந்தால் நடிகையின் பெண் என்பார்கள். என் கூட இருந்தால் அவள் வளரும்போதே மனம் கெட்டுத்தான் வளருவாள் என்று நினைத்தேன். அதுகூடத் தப்பு என்று எனக்கு இப்போதுதான் தோன்று கிறது. அவள் என் பெண்ணாகவே வளரக் கூடாது. உன் பெண்ணாகத்தான் வளர வேண்டும். நாளைக்கு யார் கேட் டாலும் அவள் அப்பா பெயர் முத்துக்குமார் என்று சொல்ல வேண்டும். அம்மா கவுரி என்றுதான் சொல்ல வேண்டும்.

''நான் அவளை வளர்த்து, அவள் நன்றாக வாழ்வதைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். அதனால்தான் இவ்வளவு நாள் என்னென்னவோ கண்றாவிப் படத்தில் எல்லாம் நடித்தேன். அவள் முத்துக்குமாருக்குப் பிறந்தவள் என்று ஊருக்குத் தெரிந்தால், பார்வையில்லாத ஒரு மனைவிக்குத் துரோகம் செய்துவிட்டு, முத்துக்குமார் என்னைக் கைபிடித்தார் என்று உலகம் அவரைத் திட்டுமே என்று நினைத்து, சேதுவை என் கழுத்தில் தாலி கட்ட அனுமதித்தேன். பார்... அதுதான் நான்செய்த பெரிய தப்பு. அதை இப்போதுதான் உணர்ந்தேன். குழந்தை என்னையும், சேதுவையும் இணைத்துப் பார்க்க முடியாமல் தவித்துப் போய்விட்டாள். அவளுடைய தூய்மையான உள்ளத்தில் ஒரு கறுப்புப் புள்ளி விழுந்துவிட்டது.



''இதெல்லாம் கூடாது. அன்பரசி நன்றாக வளர வேண்டும். நல்லவளாக வளர வேண்டும். நல்லவளாக வாழ வேண்டும். அதற்கெல்லாம் ஒரே வழி... அதைத்தான் செய்திருக்கிறேன்...

''இந்த திருவான்மியூர் வீட்டை உன் பெயருக்கு மாற்றி விட்டேன். பத்து லட்ச ரூபாயை நான் வங்கியில் போட் டிருக்கிறேன். அன்பரசி பெயரில். மாதா மாதம் வட்டி வீடு தேடி வரும். நீ அன்பரசியை இங்கே கூட்டிக்கொண்டு வந்துவிடு. நீ இதே வீட்டில் நம் குழந்தைகளோடு இரு. வேலையாவும், செங்கம்மாவும் உன்னைப் பொத்திப் பொத்திப் பார்த்துக் கொள்வார்கள்.

''ஒரே ஒரு சின்ன விஷயம். நான் டைரக்டர் கேசவ கீர்த்தியையும், மானேஜர் சேதுவையும் விஷம் வைத்துக் கொன்றுவிட்டேன். எனக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு தீர்க்கப்பட வேண்டிய கணக்கு இருந்தது. தீர்த்துவிட்டேன். அதனால் அவர்கள் உனக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டார்கள். என்னுடைய மற்ற சொத்தையெல்லாம் அனாதை இல்லங்களுக்கு எழுதிவிட்டேன்.

''செந்திலுக்கும், ராஜீக்கும் அன்பரசிக்கும் என் அன்பு முத்துக்கள்.

''போலீஸ்காரர்கள் வந்தால், அவர்களை வீட்டுக்குள் வரவிடு. முடிந்தால் என்னை அவர்கள் கைது செய்து கொள்ளட்டும்.

உனக்கும் என் முத்தங்கள்.

போய் வரட்டுமா கவுரி.

என்றென்றும் அன்புடன்

மேகலா.

''மேகலா...'' என்று அலறினாள் கவுரி.

''என்னம்மா ஆச்சி?'' என்று பதறினான் வேலையா.

கவுரி ஒருமுறை விழுந்து புரண்டு வீட்டுக் கதவில் கைவைத்து உள்ளே நுழைந்தாள்.

வீட்டின் பின்னால் இருந்த நீச்சல் குளத்தின் கரையோரம் மணிமேகலை நீச்சல் உடையில் கையில் முத்துக்குமாரின் படத்தை இறுக்கமாகப் பிடித்து உடலோடு அணைத்துக் கொண்டிருந்தாள். உதடின் ஒரு ஓரத்தில் ஒரே ஒரு ரத்தக் கோடு வழிந்திருந்தாலும், மணிமேகலை சிரித்த முகமாக இருந்தாள்.

''அந்த முகத்தை, ஆயிரமாயிரம் ரசிகர்களின் மனங்களை கொள்ளை கொண்ட அந்த முகத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. தூரத்தில் போலீஸ் காரின் சைரன் ஒலி கேட்டது.

54135/6070525
ரூ.70/-
54135
நீயா.
நானா
ரூ.70/-